# தமிழரசு


ஜனவரி 1-31, 2000 ரூ. 10










சிலை

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031, மார்கழி – தை

ஜனவரி 1–31, 2000

மலர் : 31 இதழ் : 13 & 14

விலை ரூ.10



## இந்த இதழில்...


- என் உயிரோடு உயிரணுக்களோடு கலந்த விழா ---------- 2
- திருக்குறள் மனித வாழ்க்கையை மையமாக கொண்ட தத்துவ நூல் ---------- 10
- சமுதாயப் புரட்சி செய்யும் தத்துவப் பெருஞானி -- மகத்துவம் மிகக் கொண்ட மனிதகுலத் திருவிளக்கு ---------- 14
- குறள் பரிசு ---------- 23
- வள்ளுவன் தன்னை உலகினுக்கே ---------- 25
- மதச்சார்பின்மைக்கு வழிவகுத்த முன்னோடி ---------- 27
- வள்ளுவருக்குப் பேரன் ---------- 31
- இணையத்தில் திருக்குறள் ---------- 33
- திருக்குறள் உலகை ஆளும் ---------- 38
- பொய்யாமொழி ---------- 40
- வள்ளுவரும் மருத்துவமும் ---------- 41
- திருக்குறளும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ---------- 49
- குறள் : கவிதையும் நீதியும் ---------- 57
- வள்ளுவர் செய்த புதுமையும் புரட்சியும் ---------- 63
- திருவள்ளுவருக்கு கலைஞரின் திருப்பணிகள் ---------- 68
- திருவள்ளுவர் சிலை திறப்பு விழா கவியரங்கம் ---------- 71
- கோட்டம் முதல் குமரி வரை ---------- 87
- தலைவர்கள் புகழாரம் ---------- 91



**முதல் மற்றும் இரண்டாம் பக்க அட்டையில்**

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழா

**மூன்றாம் பக்க அட்டையில்**

திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழா கண்காட்சியில் இடம் பெற்ற படங்களில் சில.

**கடைசிப் பக்க அட்டையில்**


திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழா சிறப்பு மலரான 'கோட்டம் முதல் குமரி வரை' மலரில் இடம் பெற்ற வண்ணப் படங்களில் சில.


### திருக்குறள்

**தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலனாள் பவற்கு.**

காலம் தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும் நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான பண்புகளாகும்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*



# என் உயிரோடு உயிரணுக்களோடு கலந்த விழா

திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில்
முதலமைச்சர் **கலைஞர்**

நேற்றும் இன்றும் நடைபெற்று வருகின்ற இந்த விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும், வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழா, எழுச்சி விழா, என் உள்ளம் கவர்ந்த விழா என் உயிரோடு உயிரணுக்களோடு கலந்த விழா என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் அனைவரும் மிக நன்றாக உணர்வீர்கள். அதனால்தான் இந்த விழாவிலே கண்ட எழுச்சியை வியந்து நம்முடைய மூப்பனார் அவர்கள் இங்கே இலட்சக்கணக்கில் குழுமியிருக்கின்ற உங்களையெல்லம் எழுந்து நிற்கச்செய்து, "கருணாநிதியைப் பாராட்டுங்கள். பாராட்டுவதற்கு அடையாளமாக அனைவரும் எழுந்து நின்று கையொலி செய்யுங்கள்" என்று கேட்டு, நீங்களும் உற்சாகத்தோடு கையொலி செய்து என்னைப் பாராட்டி வாழ்த்தியிருக்கின்றீர்கள்.

என்னுடைய அருமைச் சகோதரர் சிவாஜி அவர்கள் உணர்ச்சிமிக்க சில வார்த்தைகளை இங்கே கொட்டி என்னையும் ஒரு கண நேரம் உணர்ச்சி வயப்படச் செய்தார். ஏற்கெனவே, கடந்த ஆண்டு நடைபெற்ற என்னுடைய பவள விழா நிகழ்ச்சியில் அவர் மனம் உருகப் பேசியதும், நானும் உருகியதும் உணர்ச்சிவயப்பட்டதும்

ஊரெல்லாம் உள்ள தொலைக்காட்சி வாயிலாக நீங்கள் அனைவரும் கண்ட ஒன்றுதான். அதைப்போல இன்றைக்கு என்னுடைய தாய்மன்னிக்க வேண்டும். அவருக்கும் தாய்தான். அந்த அஞ்சுகத்தாயை நினைவுபடுத்தி, "அவர் இருந்து பார்த்தால் என்ன உணர்ச்சிவயப்படுவாரோ, அதே உணர்ச்சியோடு நான் உன்னை வாழ்த்துகிறேன்" என்று அவர் இங்கே சொன்னபோது நான் என்ன ஆகியிருப்பேன் என்பது அவருக்குத் தெரியும். அப்படி நாங்கள் இருவரும் பாலபருவத்திலிருந்து பழகிய பாசமுள்ள நண்பர்கள். இடையிலே சில நேரங்களில் புயல், சோதனை, சூறாவளி இவைகள் சுழன்று அடித்தபோதிலும் எங்களுடைய நட்பை எந்த ஒரு நிகழ்வுகளாலும் அசைக்க முடியவில்லை என்பதை நாடறியும். நாங்களும் மிக நன்றாக அறிவோம். அவருடைய வாழ்த்து, அவருடைய பாராட்டு இந்த விழாவிலே எனக்கும், இந்த அரசுக்கும் இந்த வள்ளுவர் சிலை திறப்பு விழாவிலே கிடைத்திருக்கிறது.

பல கட்சிகளின் தலைவர்கள் இங்கே என்னை வாழ்த்தியிருக்கிறார்கள். நம்முடைய வாழப்பாடியார் அவர்கள் ஒரு கோரிக்கையை இங்கு வைத்தார். "காலப் பெட்டகம் ஒன்றை அமைக்கவேண்டும். இப்போதே நடைபெற்றுள்ள சம்பவங்களையெல்லாம் அதிலே எழுதி வைத்து காலப்பெட்டகத்தை புதைத்து வைக்க வேண்டும். எதிர்காலத்திலே புதிய சமுதாயம் அதை எடுத்துப் பார்த்து இந்த வரலாற்றை உணர வேண்டும்" என்று குறிப்பிட்டார்.



காலப்பெட்டகம் தயாரிக்கின்ற அளவிற்கு நான் இன்னும் பல சாதனைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது என்பதை உணராமல் இல்லை. அப்படி உணருகின்ற காரணத்தால் தான் இன்னும் நாம் ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம் இருக்கின்றன என்ற காரணத்தால்தான் வழிகாட்டக்கூடிய வள்ளுவனுடைய சிலையைத் திறந்துவைத்து அந்த அய்யன் வழி நின்று நம்முடைய பணிகளைத் தொடருவோம் என்கின்ற உறுதியை, சூளுரையை இன்றைக்கு இங்கே நாம் எடுத்துக் கொள்கிறோம்.

தம்பி வைகோ உணர்ச்சிகரமாக பல செய்திகளை இங்கே எடுத்துச்சொல்லி திராவிட இயக்கத்தினுடைய தாக்கம் பற்றி குறிப்பிட்டார். வாழப்பாடியார் அவர்களும் அதையே சொன்னார்.

திராவிட இயக்கத்தினுடைய தாக்கத்தால் திருவள்ளுவர் நினைவும், திருவள்ளுவரைப் பற்றிய சிந்தனைகளும் திருவள்ளுவருடைய கொள்கைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற மனப்பான்மையும் தமிழகத்திலே உருவானது என்ற வரலாற்றுச் சான்றுகளை எடுத்துச் சொன்னார்கள்.

### பாமரர்களின் கைக்கும் திருக்குறள்

எங்களையெல்லாம் ஆளாக்கிய தந்தை பெரியார் அவர்கள் திருவள்ளுவருடைய பெருமைச் சொல்ல திருக்குறளின் தத்துவங்களை எடுத்துக்காட்ட சென்னை மாநகரத்திலே 1942ஆம் ஆண்டு வாக்கில் திருக்குறள் மாநாடு ஒன்றை நடத்திய பிறகுதான் பண்டிதர்களுடைய நூலகங்களில் மாத்திரம் இருந்த திருக்குறள் பாமர மக்களுடைய கைக்கு வந்தது என்பதை யாரும் மறக்க முடியாது. இப்படி பெரியார் அவர்களால் பாமர மக்களுடைய கைக்கு அனுப்பப்பட்ட திருக்குறள் இன்றைக்கு எல்லோராலும் போற்றப்படுகிற, எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கப்படுகின்ற அளவிற்கு வளர்ந்திருக்கின்றது. இதில் திராவிட இயக்கத்துக்கு மட்டும் உரிமை கொண்டாட நான் விரும்பவில்லை.

இங்கே தேசிய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பலர் இருக்கிறார்கள். தேசிய இயக்கத்திலே இருந்து தொண்டு புரிந்தவர்கள், தியாகம் செய்தவர்கள் எல்லாம் மேடையிலே வரிசையாக அமர்ந்திருக்கிறார்கள். இலக்கியச் செல்வர் குமரிஅனந்தனைப் போன்றவர்களெல்லாம் திருக்குறளிலே ஊறித் திளைத்தவர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். எனவே, திராவிட இயக்கத்திற்கென்று நான் தனிச் சொந்தம் கொண்டாட விரும்பவில்லை. அது ஒரு கட்டத்திலே திருவள்ளுவரை உணர்ந்து கொள்வதற்கு, அறிமுகம் செய்வதற்குப் பயன்பட்டிருக்கலாம். ஆனால், எல்லா இயக்கத்திற்கும், எல்லா கட்சிகளுக்கும், எல்லா கட்சிகளிலே இருக்கின்ற தமிழ்ப்பெருங்குடி மக்கள் அனைவருக்கும் உரிய ஒன்றுதான் திருக்குறள் நூல். திருவள்ளுவர் வகுத்த மார்க்கம், அவர் கண்ட வழி.

திருவள்ளுவரை சில பேர் கவிஞர், புலவர் என்றெல்லாம் இங்கே சொன்னார்கள். மன்னித்துக் கொள்ளவேண்டும். நான்கூட இதுவரையில் அப்படிச் சொல்லியிருந்தால் நானும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். திருவள்ளுவரை கவிஞர் என்ற ஒரு வட்டத்திற்குள் அடைக்க நான் விரும்பவில்லை. நேற்றைக்கு நம்முடைய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள். ஒரு வட்டத்திற்குள்ளே திருவள்ளுவரை அடைக்க முடியாது என்று குறிப்பிட்டார்கள். அதைத்தான் நானும் சொல்கின்றேன்.

இங்கே நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போதும் அதைக் குறிப்பிட்டார். ஒரு கவிஞன், ஒரு புலவன் என்கிற அளவோடு திருவள்ளுவரை நிறுத்த முடியாது. அவர் ஒரு தத்துவ ஞானி மாத்திரமல்ல. பொருளாதார மேதை, பொருளாதார மேதை என்றால் நம்முடைய அருமை நண்பர் சங்கரய்யா அவர்கள் முழுமையாக ஒத்துக்கொள்ளமாட்டார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அவருடைய பேச்சிலே கூட அது வெளிப்பட்டது. அதையும் நான் கவனித்தேன். ஆனால், வள்ளுவர் குறளிலே சொல்கிறான்.

*ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை*
*போகாறு அகலாக் கடை.*

– என்ற இந்த ஒன்றே அவருடைய பொருளாதார நிபுணத்துவத்திற்குச் சான்று என்று நான் கருதுகிறேன்.

*ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை*
*போகாறு அகலாக் கடை.*

– அதாவது இதற்கு பொருள்; 'வரவு குறைவாக இருந்தாலும், வருகின்ற வழி சிறியதாக இருந்தாலும் சுருக்கமானதாக இருந்தாலும், கவலைப்படத் தேவையில்லை. வருவாய் குறைவாக இருந்தாலும் கவலைப்படத் தேவையில்லை. ஆனால், அதனால் எந்தக் கேடும் இல்லை. எப்பொழுது? போகாறு அகலாக் கடை. அதாவது செலவு அதிகமாக ஆகாமல் இருக்கிற வரை வரவு குறைவாக இருந்தால் கவலைப்படத் தேவையில்லை'.

– என்கின்ற இந்த கருத்து முதலமைச்சராக மாத்திரமல்ல நிதியமைச்சர் பொறுப்பையும் ஏற்றிருக்கின்ற எனக்கு எவ்வளவு பயன்படக்கூடிய கருத்து என்பதை எண்ணிப் பார்த்தால் திருவள்ளுவன் பொருளாதாரத்துறையிலும் எவ்வளவு நுணுக்கம் வாய்ந்தவராக இருந்திருக்கிறார் என்பதை திருக்குறள் எந்த அளவிற்கு நுணுக்கத்தைத் தெரிவிக்கின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

### பேராசிரியருக்கும் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் நன்றி

இந்த விழாவிலே நான் முதலில் சில பிரச்சினைகளைப் பேசுவதற்கு முன்பு முதலில் நன்றியினை தெரிவிக்க வேண்டும். யார் யாருக்கு என்றால்; இந்த விழா சிறப்பாக நடைபெறுவதற்கு விழாக் குழுவின் தலைவர் பொறுப்பை ஏற்று இவ்வளவு சிறப்பாக இரண்டு நாள் விழா நடைபெற ஒத்துழைத்த – காரணமாக இருந்த விழாக்குழுவின் தலைவர் பேராசிரியர் அவர்களுக்கும், துணைத்தலைவர் தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் தம்பி தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், இங்கே சிலை வைக்கப்படவேண்டும் என்று நான்கு ஆண்டுகாலமாக நடைபெறுகின்ற இந்தப் பெரும் பணியில் அவ்வப்போது குமரிமுனைக்கு வந்து, சிற்பி கணபதி ஸ்தபதி அவர்களிடத்திலும் மற்றவர்களிடத்திலும் கலந்து பழகி ஒவ்வொரு நாளும் நடைபெறுகின்ற செய்திகளை என்னிடத்திலே அறிவித்து மாதம் மூன்று நான்கு முறை குமரி மாவட்டத்திற்கு வந்து உழைத்து இந்த சிலை உருவாகக் காரணமாயிருந்த செய்தித்துறை அமைச்சர் தம்பி முல்லைவேந்தனை மறக்கமுடியாது, அவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மேடையிலே இன்றைக்கும் நேற்றைக்கும் நான் சந்தித்த பல பெரும் புலவர்கள், ஆராய்ச்சியாளர்கள், கருத்துரையாளர்கள், வெளிநாட்டிலிருந்து வந்த வித்தகர்கள் இவர்களெல்லாம் வருவதற்கும் அவர்களுக்கான நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதற்கும் காரணகர்த்தாவாக விளங்கிய தம்முடைய முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்களையும் நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.



இந்தக் குழுவின் உறுப்பினர்கள் தம்பி ஆலடிஅருணா, தம்பி சுரேஷ்ராஜன், திருமதி. ஜெனிபர் சந்திரன் ஆகியோர்களுக்கும் நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிகாரிகளையெல்லாம் முடுக்கிவிட்டு இந்தப் பணிகளை ஆற்றுவதற்கு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பணியாற்றிய தலைமைச் செயலாளர் திரு.முத்துசாமி ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், மிக அழகான ஒரு மலரை – இதுவரையில் வெளிவந்ததில்லை என்று சொல்லத்தக்க அளவிற்கு ஒரு அற்புதமான மலரை, 'கோட்டம் முதல் குமரி வரை' என்ற தலைப்பிலே வெளியிடுவதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய ஐ.ஏ.எஸ். அதிகாரி இறையன்பு அவர்களுக்கும், செய்தித்துறை அதிகாரிகள் ராமு, ஐ.ஏ.எஸ்., முத்துசாமி, ஐ.ஏ.எஸ்., ஆகியோர்களுக்கும் இந்த மாவட்ட ஆட்சியாளர் திரு.பாண்டியன், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**எல்லோருக்கும் மேலாக நன்றி தெரிவிக்க வேண்டியவர் சிற்பி கணபதி ஸ்தபதி**

இதற்கெல்லாம் மேலாக எனக்கும் மேலாக நன்றி தெரிவிக்க வேண்டியவர் ஒருவர் இருக்கிறார். அவர்தான் சிற்பி கணபதி ஸ்தபதி என்று நான் சொல்ல விரும்புகிறேன். நின்றுகொண்டு எனக்கு கை தட்டினீர்கள். உட்கார்ந்துகொண்டு அவருக்காக, அவரை பாராட்ட கைதட்டுங்கள் என்று உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வளவு கடினமான உழைப்பு, அவ்வளவு ஆர்வம், அவ்வளவு அக்கறை.

அந்த உணர்வோடு அவர் பாடுபட்ட காரணத்தால்தான் ஏற்கெனவே 75ஆம் ஆண்டு சிந்தித்து அறிவித்து அதற்குப்பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் 79ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டி பிறகு ஏறத்தாழ பத்தாண்டுகாலம் அந்த அடிக்கல்லைப் பற்றி யாரும் கவலைப்படாமல் இருந்து பிறகு 89–லே பணி தொடங்குகின்ற விழா நடத்தி இரண்டாண்டு காலத்தில் ஆட்சி கலைக்கப்பட்டு விட்ட காரணத்தால் 91–க்குப் பிறகு இதற்கென்று ஒதுக்கப்பட்ட தொகையெல்லாம் வேறு சில பணிகளுக்காக செலவிடப்பட்டு – வேலையே நடக்காமல் போயிருந்த நேரத்தில் 96ஆம் ஆண்டு மீண்டும் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு நான் வந்தவுடன் கணபதி ஸ்தபதியை அழைத்து அவரிடத்தில் பொறுப்பை ஒப்படைத்து "என்ன செய்வீர்களோ தெரியாது? இதை மீண்டும் தொடங்குகின்ற காரணத்தால் தொடங்கும் போதெல்லாம் ஆட்சிக்கு ஆபத்து வருகிறது. இருந்தாலும் நான் அந்த நம்பிக்கைக்கு ஆட்பட்டவன் அல்ல. எனவே இந்த சிலையை நீங்கள் முடித்துத் தரவேண்டும்" என்று கேட்டேன். அவரும் அதற்கு இணக்கம் தெரிவித்து எத்தனையோ கஷ்டங்கள், எத்தனையோ சோதனைகள், எத்தனையோ எதிர்ப்புகள், மறைமுகமான சூழ்ச்சிகள் இதையெல்லாம் வெற்றி கண்டு இந்தச் சிலை இன்றைய தினம் உங்கள் முன்னால் 133 அடி உயரத்தில் நின்று கொண்டிருக்கிறது.

கணபதி ஸ்தபதி அவர்கள்தான் பூம்புகார் சித்திரக் கலைக்கூடத்தை நிர்மாணித்துத் தந்தவர். அவர்தான்

பாஞ்சாலங்குறிச்சியிலே கட்டபொம்மன் கோட்டையைத் திரும்பக் கட்டியவர். அவர்தான் வள்ளுவர் கோட்டத்தை நிர்மாணித்தவர்.

வள்ளுவர் கோட்டத்தை நிர்மாணித்தபோது, அதைத் திறந்துவைக்கின்ற பேறு எனக்குக் கிடைக்காமல் போயிற்று. அதை மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர். பாலு இன்று காலையில் பேசும்போது குறிப்பிட்டு அனைவருடைய கண்களையும் கலங்க வைத்தார். மிசா நேரம். சென்சார் கொடுமை பத்திரிகைகளுக்குக்கூட. 500–க்கும் மேற்பட்டவர்கள் எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் சிறைச்சாலைகளிலே இருந்தார்கள். மேடையிலே இருக்கின்ற பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கூட அன்றைக்கு சிறைச்சாலையிலே இருந்தார்கள் மிசா கொடுமையின் காரணமாக. அந்த நேரத்திலேதான் நான் கட்டி முடித்த வள்ளுவர் கோட்டத்திற்கு திறப்பு விழாவிற்கு தேதி வைத்த கட்டத்தில் ஆட்சி கலைக்கப்பட்டது. அந்தத் தேதியில் வள்ளுவர் கோட்டத்தை நான் திறந்து வைத்து விடக்கூடாது என்பதற்காக முன்கூட்டியே ஒரு வாரத்திற்கு முன்பு ஆட்சி கலைக்கப்பட்டது.

நான் திறந்து வைக்கவில்லையே என்ற ஏக்கம் அல்ல. அந்த வள்ளுவர் கோட்டம் முழுமையடைந்துவிட்டதை உள்ளே சென்று பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கத்தில் நான் முரசொலியிலே எழுதிய கடிதத்திலேதான், ''அரும்பாடுபட்ட வளர்த்த அழகு மகளுக்கு திருமணமாகிற நேரத்தில் மணமேடைக்குச் செல்ல முடியாத தாய், பந்தலிலே இருக்கின்ற ஓலைக்கீற்றின் இடுக்கு வழியாக பார்த்து மகிழ்வதைப் போல் நான் வீட்டிலே இருந்து பார்த்துக் கொண்டே மகிழ்கிறேன் தம்பி'', என்று உடன்பிறப்புகளுக்கு கடிதம் எழுதினேன். பதிமூன்று ஆண்டு காலம் – அதைத்தான் தம்பி டி.ஆர்.பாலு இங்கே சுட்டிக் காட்டிப் பேசினார்.

### அடிக்கல் நாட்டிய என் பெயர் இல்லாமலே 13 ஆண்டுகள் வள்ளுவர் கோட்டம் இருந்தது

13 ஆண்டு காலம் என்னுடைய பெயர் இல்லாமலேயே, அடிக்கல் நாட்டிய அந்தக் கல் இல்லாமலே வள்ளுவர் கோட்டம் 13 ஆண்டு காலம் இருந்தது.

"பக்ருதீன் அலி அகமது அவர்கள் வந்து அதைத் திறந்து வைத்தார்கள்; ஆளுநர் கே.கே.ஷா தலைமையில்'' என்ற அந்தக் கல்தான் அங்கே இருந்தது. ஆனால் நான் வள்ளுவர் கோட்டத்திற்காக நாட்டிய அடிக்கல் இடம் பெறவில்லை. அது மாத்திரமல்ல; வள்ளுவர் கோட்டத்தைக் கட்டி முழுவதும் முடிந்த பிறகுகூட, நான் திறப்புவிழாவிற்குத் தயாராக இருந்தபொழுது – வேறு கல் வைக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது. அடிக்கல் 13 ஆண்டு காலம் இடம் பெறவில்லை. எனக்குள்ள வருத்தம் எல்லாம், என்னுடைய ஜாதகத்தைப் பார்த்தீர்களா? இரண்டு நாளாக சில பத்திரிகைகளில் எழுதுகிறார்கள், 79ஆம் ஆண்டு வைக்கப்பட்ட அடிக்கல் எங்கே? எங்கே? என்று கேட்டு எழுதுகிறார்கள். நான் அவ்வளவு அற்ப புத்தி படைத்தவன் அல்ல. அந்தக் கல் வைக்கத்தான் போகிறோம். அந்தக் கல்லின் மாடல்தான் இங்கே முன்னால் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. அதைக் கூட தம்பி திருநாவுக்கரசு இங்கே சுட்டிக் காட்டினார். சகோதரர் ஆர்.எம்.வீ. அவர்களும் எடுத்துக்காட்டினார்.

இந்தக் கல்தான் அங்கே வைக்கப்படப் போகிறது. அதை யாரும் மறைக்கத் தயாராக இல்லை. ஆனால், அந்த 13 ஆண்டு காலத்தில் எனக்காகக் குரல் கொடுக்க தமிழகத்தில் யாரும் இல்லையே ஏன் என்றுதான் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

இத்தனை சோதனைகளையும் – இத்தனை சோதனைகள் என்றால் – எறியும் ஈட்டிகளல்ல, குத்தும் பாணங்களல்ல, மோதும் கணைகள் அல்ல, சக்கராயுதங்களை அல்ல, சூலாயுதங்களை அல்ல, அந்த எதிர்ப்புக்களை அல்ல – நான் அலட்சியப்படுத்தப்படுகிறேன் என்ற அந்த எதிர்ப்பைத் தாங்கிக் கொள்வது சாதாரணமான விஷயம் அல்ல. அதையும் தாங்கிக் கொண்டேன். காரணம், வள்ளுவன் மீது எனக்கிருக்கின்ற அன்பு. யார் திறந்தால் என்ன? யார் திறப்பு விழா நடத்தினால் என்ன? என் அய்யன் வள்ளுவருக்கு ஒரு மண்டபம் – பிறகு நான் துடித்தேன். பதைத்தேன். அது எதற்காகத் தெரியுமா? ஏன் தெரியுமா?

இலக்கியச் செல்வர் இங்கே குறிப்பிட்டதைப் போல, அந்த வள்ளுவர் கோட்டத்தில் இடையிலே ஐந்தாண்டு காலம் நடக்கக் கூடாதது எல்லாம் நடைபெற்றது. அதைக் கேட்டும் பார்த்தும் – அதைப் படமெடுத்து சில பத்திரிகைக்காரர்கள் போட்டார்களே, அதைப் பார்த்தும் துடித்திருக்கிறேன். கேட்டும் பதைத்திருக்கிறேன். பதறியிருக்கிறேன். அதையும் மறந்துவிடக்கூடாது.

நம்முடைய பேரவைத் தலைவர் திரு.பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் நேற்றுக் காலையில் திறந்துவைத்த ஓவியக் கண்காட்சியிலே இருக்கின்ற எல்லா ஓவியங்களையும் சென்னையிலே இருக்கின்ற வள்ளுவர் கோட்டத்திலே வைத்து அழகு பார்க்கவிருக்கின்றோம். அழகு பார்க்க மாத்திரமல்ல. அறிவூட்டவிருக்கின்றோம். அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கெல்லாம் வள்ளுவத்தைக் கற்பிக்க –வள்ளுவத்தை உணர்ந்துகொள்ள ஒரு வழி காட்டக் கூடிய அளவிற்கு அந்த ஓவியங்களையெல்லாம் வள்ளுவர் கோட்டத்திலே வைக்க விருக்கிறோம் என்ற அந்தச் செய்தியையும் உங்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன்.

இதென்ன கன்னியாகுமரியிலே சிலை, ஓவியக் கண்காட்சி அங்கேயா! என்று குமரி

மாவட்டக்காரர்கள் யாரும் கோபித்துக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் இங்கே அதற்காக ஒரு மண்டபம் கட்டி அதற்கொரு கோட்டம் கட்டுவதற்கு செலவுக்கு பணமில்லாத காரணத்தால் – ஆகாறு அளவிட்டதாயினும் கேடில்லை போகாறு அகலாக்கடை– என்ற குறளைப் பின்பற்றி; ஏற்கெனவே இருக்கின்ற கோட்டத்திலே கொண்டு போய் இவைகளை வைக்கலாம் என்ற எண்ணம் எங்களுக்கு இருக்கின்றது.

அருமை நண்பர் கோவை செழியன் இங்கே பேசும்போது பெங்களூரிலே பத்தாண்டு காலமாக திருவள்ளுவருடைய சிலை ஒன்று மூடிக் கிடக்கின்றதே, அது என்னவாயிற்று என்று கேட்டார். வாழப்பாடியார் அதற்காக தான் கடிதம் எழுதியதாகவும், அதற்கு பதில் வரவில்லையென்றும் கூறினார். அதை ஏன் கவனிக்கக் கூடாதா என்று பக்கத்திலே இருந்த மக்கள் தலைவர் மூப்பனார் என்னைப் பார்த்துக் கேட்டார். குமரிஅனந்தன் அதைப் பற்றி கோபாவேசமாகப் பேசினார். எல்லோரும் பேசியிருக்கிறார்கள்.




ஆனால் நான் ஒரு உறுதி எடுத்திருக்கிறேன். அதை மூன்று மாதத்திற்கு முன்பு கர்நாடகத்திலிருந்து ஒரு அமைச்சர் சென்னை மாநகரில் வந்து பேசியபோது "தமிழக முதலமைச்சர் கலைஞர் விரைவிலே எங்கள் ஊருக்கு வரவேண்டும்" என்றும், "ஒரு விழாவிலே கலந்து கொள்ள வேண்டும்" என்றும் கோரிக்கை வைத்தார். நான் அதற்கு பதிலளித்துப் பேசும்போது, "பெங்களூருக்கு ஒரு விழாவிற்கு வருவதென்றால் – நான் அங்கே இனி கலந்து கொள்கின்ற முதல் விழா அந்த திருவள்ளுவருடைய சிலை திறப்பு விழாவாக இருந்தால்தான் வருவேனே தவிர வேறு எந்த விழாவிற்காகவும் நான் அடியெடுத்து வைக்க மாட்டேன்" என்று சொல்லி விட்டேன்.

வராவிட்டால் என்ன, நன்றாகப் போய் விட்டது என்று சொல்ல மாட்டார்களா, அதற்காக நாம் போராட வேண்டாமா என்று கேட்கக்கூடும். இங்கே பேசிய இல. கணேசன் கூடக் குறிப்பிட்டார். அவரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். இங்கேயிருக்கின்ற எல்லா கட்சித் தலைவர்களையும் – இந்தியா ஒரு நாடு, பல மொழி பேசுகின்ற மக்கள். ஆகவே மொழி வழி மாநிலங்கள் என்று பிரிந்தாலுங்கூட, நம்முடைய ஒற்றுமையும் ஒருமைப்பாடும் சோதனைக்கு ஆளாகக் கூடாது.

அதை சோதனைக்கு ஆளாக்குகின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை மீறி நாம் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் நிலை நாட்ட வேண்டும். அதற்கும் வள்ளுவம்தான் பயன்பட வேண்டும். பெங்களூரிலே இருக்கின்ற வள்ளுவருடைய சிலையை திறப்பதற்கு அனுமதிக்கிறார்களா? இல்லையா என்று கேட்டு உள்ளபடியே ஒற்றுமையிலே, ஒருமைப்பாட்டிலே மத்தியிலே இருக்கின்ற அரசுக்கோ அல்லது மாநிலத்திலே இருக்கின்ற அரசுக்கோ நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்து விட வேண்டியதுதான். காலையில் வந்த செய்தி உண்மையாக இருந்தால், அதிகார பூர்வமாக இருந்தால் மகிழ்ச்சி. இல்லாவிட்டால் அதைப்பற்றி என்ன செய்யலாமென்று இந்த மேடையிலே இருக்கின்ற நாமெல்லாம் உட்கார்ந்து ஒரு முடிவெடுப்போம். முடிவெடுக்க நீங்கள் எல்லாம் வரவேண்டுமென்று இந்த வள்ளுவர் சிலை திறப்பு விழாவிலே உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

வள்ளுவருக்கு ஒரு நாள் விடுமுறை அளிக்க – "வள்ளுவர் நாள்" என்று ஒரு நாளை நிர்ணயிக்க வேண்டுமென்று தமிழக அரசு கடந்த காலத்திலே எண்ணி 1969ஆம் ஆண்டு நான் முதல்வராக

ஆனபோது அமைச்சரவையிலே ஒரு முடிவெடுத்து ஒவ்வொரு ஆண்டும் பொங்கலுக்கு மறுநாள் வள்ளுவர் திருநாள் என்று அறிவிக்கப்பட்டது. அது முதல் பொங்கல் விழாவிற்கு மறுநாள் வள்ளுவர் விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டும் கொண்டாடப் போகிறோம். அது மாத்திரமல்ல.

திருக்குறளை ஒப்புவிக்கும் திறன் கொண்ட குழந்தைகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அரசின் சார்பில் அனுப்பப்படும் என்று நேற்று அறிவித்திருக்கிறேன். அதை இங்கே பேசிய பலரும் பாராட்டினார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த மாதம் முதலே அந்தத் தொகை அனுப்பப்படும். எங்களுக்கும் உண்டா என்று சில பெரியவர்கள் கேட்டார்கள். நான் குழந்தைகளுக்கென்று தான் அறிவித்திருக்கிறேன். வயதானால் நாங்களும் குழந்தைகளென்று தான் என்று விவாதிக்கக்கூடும். ஆனால் அந்த வாதம் சரியான வாதமாக இருக்காது என்பது அவர்களுக்கும் தெரியும். குழந்தைகள் நான்கு வயதாக இருந்தால் அந்த வயது முதல் 20 வயது வரையிலே உள்ளவர்கள் திருக்குறளிலே தங்களுடைய திறமையைக் காட்டுவார்களானால் – ஆற்றலைக் காட்டுவார்களேயானால் அவர்களுக்கெல்லாம் ஆயிரம் ரூபாய் நிச்சயமாக வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் 22 சிறாரும், இளைஞர்களும் தங்களுடைய திறமையைக் காட்டினார்கள். அந்த எண்ணிக்கை 25 ஆக ஆகலாம். 100 ஆகக்கூட ஆகலாம். அப்படியானாலும் கூட கவலையில்லை. அவர்களுக்கெல்லாம் குறள் பரிசு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். அப்படியாவது திருக்குறளை எல்லோரும் படிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு படிக்க மாட்டார்களா என்கிற ஆசையிலேதான் இதனை அறிவிக்கிறேன்.

இன்னொன்று; கடந்த காலத்திலே திருவள்ளுவர் மன்றங்கள் பல இடங்களிலே இருக்கும். திருவள்ளுவர் படிப்பகங்கள் பல இடங்களிலே இருக்கும். அரசின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன். தனிப்பட்ட முறையிலேயும் கேட்டுக் கொள்கிறேன். எல்லா கட்சித் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும் ஒரு படிப்பகம் திருவள்ளுவருடைய பெயரால் அமையவேண்டும். வரும் ஜனவரி 16 திருவள்ளுவர் நாள் முதல் அப்படி நிச்சயமாக அமைவதற்கான வழிவகைகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று இங்கே என்னோடு வந்திருக்கின்ற தலைமைச் செயலாளர் திரு. முத்துசாமி ஐ.ஏ.எஸ். அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக இந்த ஆண்டு திருவள்ளுவர் நாள். 15ஆம் தேதி பொங்கல் நாளுக்கு அடுத்து 16ஆம் தேதி வருகின்றது.

அன்றைய தினம் தமிழகத்தில் இருக்கின்ற எல்லா ஊராட்சி மன்றங்களிலும் – குறைந்தபட்சம் ஊராட்சி மன்றம் என்று சொல்கிறேன். பேரூராட்சிகளும், நகராட்சிகளும் இடம் பெறலாம். நகராட்சிகளில் பல இடங்களிலே ஏற்படலாம். அங்கெல்லாம் திருவள்ளுவர் நூலகங்கள், படிப்பகங்கள் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த முயற்சிகளும் அரசின் சார்பிலே எடுக்கப்படும். அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு தேவை என்று கேட்டுக் கொள்கிறேன்.

### தமிழ் ஆண்டாக அறிவிக்க வேண்டும்

தமிழ் ஆண்டு என்று இந்த ஆண்டை அழைக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதிலே எனக்கு முழுமையான கருத்தொற்றுமை இல்லை. சங்கரய்யா எண்ணக் கூடும். இவர் சொன்னால் வாஜ்பாய் சம்மதிக்க மாட்டார். எனவே சமாளிக்கிறேன் என்று கூட அவர் கருதக்கூடும். அதல்ல காரணம். நான் கேட்பது அதென்ன ஓராண்டு மாத்திரம் தமிழ் ஆண்டு. ஒவ்வொரு ஆண்டும் தமிழாண்டாக இருக்க வேண்டும் என்பதுதானே தமிழனுடைய எண்ணமாக இருக்க முடியும். இருந்தாலும்கூட – இதைக் கூடச் செய்ய கூடாதா என்று கேட்கின்ற கேள்விக்கு இடமில்லாமல், சென்ற ஆண்டு சமஸ்கிருத ஆண்டு என்று அறிவித்ததைப் போல இந்த ஆண்டை தமிழ் ஆண்டு என்று அறிவியுங்கள் என்ற அந்தக் கோரிக்கையை ஒரு தீர்மானமாகவே இங்கிருந்து அனுப்புவதாக மத்திய அரசு எண்ணி அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல திருக்குறளை தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்று கேட்டார்கள். அது உலக நூல். அதை ஏன் இந்திய அளவிற்கு ஆக்க வேண்டுமென்று கூறுகிறீர்கள் என்று தெரியவில்லை. இருந்தாலும் குமரி அனந்தன் கோபத்தோடு கேட்டிருக்கிறார். மற்றவர்களும் அதைப்பற்றி இங்கே பேசியிருக்கிறார்கள். இதற்கு முன்பே இதைப்பற்றி தம்பி வைகோ பல இடங்களிலே பேசி நான் பத்திரிகையிலே படித்திருக்கிறேன்.

### திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும்

இங்கே பேசிய பலரும் திருக்குறளை தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது உலக நூல், அதை தேசிய நூல் என்று இந்திய அளவிலே அடக்க நான் விரும்பவில்லையென்றாலுங்கூட குறைந்தபட்சம் தேசிய நூலாக ஆவது ஏற்றுக் கொள்ளுங்கள் என்ற அந்தக் கருத்தை உங்களுடைய கோரிக்கையாக நானும் ஏற்றுக்கொண்டு திருக்குறளை தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்கிற அந்த முன்மொழிவையும் மத்திய அரசுக்குத்தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

## குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை

திருவள்ளுவர் சிலை திறப்பு விழா 31–12–1999, 1–1–2000 ஆகிய இரண்டு நாட்கள் கன்னியாகுமரியில் எழுச்சியுடன் நடைபெற்றது. முதல் நாளில் ஓவியக் கண்காட்சி, கலைஞர் தலைமையில் கவியரங்கமும் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி 1–1–2000 அன்று காலையில் தொடங்கியது.

முதல் நிகழ்ச்சியாக 'குறள் அமுதம்', 'கோட்டம் முதல் குமரி வரை' சிறப்பு மலரினையும், கனடா இராம் மோகனின் குறுந்தகடு ஆகியவற்றையும் மத்திய வனத்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பாலு வெளியிட்டார். சிறப்பு மலர்கள், குறுந்தகட்டினை முனைவர் வ.அய்.சுப்பிரமணியமும், முனைவர் வா.செ.குழந்தைசாமியும் பெற்றுக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து காலை 10 மணியளவில் குறள் கருத்தரங்கம் தொடங்கியது. அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் தலைமை தாங்கினார்.

கருத்தரங்கில் முனைவர் க.ப.அறவாணன், பேராசிரியர் பா.நமச்சிவாயம், முனைவர் திருமதி. சக்தி பெருமாள், முனைவர் சிலம்பொலி செல்லப்பன், பெருங் கவிக்கோ வா.மு. சேதுராமன், முனைவர் பா.வளனரசு, சிகாகோவைச் சேர்ந்த ரிச்சர்ட்வீஸ், புலவர் இரா. இளங்குமரன், வலம்புரி ஜான், ஜப்பானைச் சேர்ந்த திருமதி.யூகோ புக்குராய், முனைவர் சி.நயினார் முகமது, திருமதி. இளம்பிறை மணிமாறன் ஆகியோர் பேசினர்.

இக்கருத்தரங்கில் ஐந்து வயதான மூன்று சிறுமிகள் குறளை மிக அழகாக ஒப்பித்தனர். முதல்வர் கலைஞர் அவர்களைப் பாராட்டினார்.

சிலை திறப்பு விழா – மாலை 4–30 மணிக்கு சீர்காழி சிவ.சிதம்பரம், டி.கே.எஸ். கலைவாணன் ஆகியோரின் 'தமிழ்த்தாய் வாழ்த்து' ஒலிக்க இனிதே தொடங்கிற்று!

இந்த வரலாற்று நிகழ்ச்சிக்கு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமை தாங்கினார்.

செய்தி – விளம்பரத் துறை அமைச்சர் திரு. வ.முல்லைவேந்தன் வரவேற்புரையாற்றினார்.

வான்புகழ் வள்ளுவருக்கு விண்முட்ட சிலை எழுப்பிய முதல்வர் கலைஞர் அவர்கள் – மாலை சரியாக 7–30 மணியளவில் சிலையினைத் திறந்துவைத்தார்.

திக்கெங்கிலுமிருந்து ஒளி வெள்ளம் திருவள்ளுவர் சிலை மீது பொழிய – வானுயர் வள்ளுவர் சிலை பார்ப்போரை பிரமிப்பிலும், அளவிலாக் களிப்பிலும் ஆழ்த்தியது.

தமிழறிஞர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், வெளிநாட்டு பிரதிநிதிகள், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக, முதலமைச்சர் கலைஞர் விழாப்பேருரையாற்றினார்.

சிலையினை சிறப்பாக வடிவமைத்த திரு. கணபதி ஸ்தபதிக்கு முதலமைச்சர் பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்கி பெருமைப்படுத்தினார். இப்பணிக்கு உறுதுணை புரிந்த திரு. சண்முக ஸ்தபதி, சேகர் ஸ்தபதி, செல்லையா ஆசாரி, ஆறுமுக ஆசாரி ஆகியோருக்கு நினைவுப் பரிசுகள் வழங்கி பொன்னாடை அணிவித்து சிறப்புச் செய்தார்.

சுற்றுலா அமைச்சர் திரு.சுரேஷ்ராஜன் நன்றியுரை ஆற்றினார்.



---

இன்று நான் சிலையைத் திறக்க முடியுமா என்று மாலையிலே எண்ணினேன். காரணம் சிலை திறக்கின்ற நேரத்தில் என்னுடைய உள்ளம் என்னவாகும் என்கின்ற அச்சம். என்ன ஆகுமென்ற பயம், என்ற சந்தேகம். அதற்காகவே மயக்கம் வரக்கூடாத மாத்திரை ஒன்றை சாப்பிட்டு விட்டுத்தான் நிகழ்ச்சிக்கு வந்தேன். ஏனென்றால் இந்தச் சிலையோடு நான் அந்த அளவிற்கு உணர்ச்சிகரமாக ஒன்றிப்போய் இருக்கிறேன். எனவேதான் உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன். புலவர்களே, தலைவர்களே, இளைஞர்களே, அடிகளார் அவர்களே, எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன். இனி என் அய்யன் திருவள்ளுவனை கவிஞர் என்று அழைக்காதீர்கள், புலவன் என்று அழைக்காதீர்கள், அவனை அய்யன் என்றே அழையுங்கள். அய்யன் என்பதிலே ஒரு தெய்வாம்சம் இருக்கிறதே என்று தெய்வத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் எண்ணினால் கூட நான் நாத்திகன் தான். இருந்தாலும் இந்தத் தெய்வத்தை ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறி வாழ்க வள்ளுவர் என்றுரைத்து விடைபெறுகிறேன்.

– கன்னியாகுமரி கடற்பாறையில் அய்யன் திருவள்ளுவர் சிலையை 1–1–2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து.

★ ★ ★

# திருக்குறள் :

# மனித வாழ்க்கையை மையமாக கொண்ட தத்துவ நூல்


*கல்வியமைச்சர்*
*பேராசிரியர் க. அன்பழகன்*

விழாவின் பெருமையை, விழா குறித்து பேசப்பட்ட எழுச்சிமிக்க, உணர்ச்சிமிக்க, ஆர்வமிக்க பேச்சுக்களால் நான் என்னையே இழந்திருந்தேன் என்று சொன்னால் அது தவறாகாது. நான் நினைவோடு இருந்தால்தான் உணர்ச்சியோடு பேச முடியுமே தவிர என்னை இழந்திருந்த நிலையில் வள்ளுவர் கோமானுக்கு அதுவும் கலைஞர் அவர்கள் சொன்னது போல அய்யன் திருவள்ளுவருக்கு இவ்வளவு பெரிய ஒரு சிலையை எடுத்து அந்த அடிப்படையில் திறப்பு விழா நடைபெறுகிறபோது இத்தனை தலைவர்கள், இத்தனை பேச்சாளர்கள், இத்தனை அறிஞர்கள், கவிஞர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியிருக்கிறபோது என் மனம் நிறைந் திருக்கிறது. என் வாழ் நாளில் பல நாள் என் உள்ளத்தில் தோன்றுகிற குறை காரணமாகத்தான் நான் பேசிப் பழக்கப் பட்டவன். முழு நிறைவு- வாழ்னிலோர் திருநாள் என்று என் திருமணத்தின் போது பேசிய நினைவு வருகிறது.

**தமிழ் உணர்வு வளர்ப்பதற்கான ஒரு திருநாள்**

இன்றைக்கு மறுபடியும் வாழ்விலோர் திருநாள். அன்பழகனுக்கு மட்டுமல்ல, கலைஞருக்கு மட்டுமல்ல, தமிழ் மக்களுக்கு வாழ்விலோர் திருநாள். வாழ்வெல்லாம் நினைக்கின்ற ஒரு திருநாள். வாழ்வு இழந்த மக்கள் தலைதூக்குவதற்காக ஒரு திருநாள். வழி இழந்த மக்கள் தெளிவதற்காக ஒரு திருநாள். தேய்ந்துபோன திராவிடம் நிமிர்வதற்கான ஒரு திருநாள். தமிழ் உணர்வு மங்கிப் போனதை வளர்ப்பதற்கான ஒரு திருநாள். நெறியறியாத மக்களுக்கு நெறியூட்டுவதற்காக ஒரு திருநாள். இன்னும் சொல்வதாக இருந்தால் உலகத்தை வாழ்விப்பதற்கான திருநாள் இந்தத் திருநாள் என்று நான் உணருகிறேன், மகிழ்கிறேன்.

கடந்த நூற்றாண்டிலேதான் வள்ளுவனை உணருகிற வாய்ப்பு நமக்கு கிடைத்தது. ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த கிரவ் என்ற அறிஞர் அதை மொழிபெயர்த்து அந்தக் கருத்து மேல்நாட்டுக்குச் சென்ற காரணத்தால், அதைத் தொடர்ந்து ஜி.யு. போப் மொழிபெயர்ப்பு காரணமாக அவர் எழுதிய முன்னுரை காரணமாக, நாலடியார் மொழிபெயர்ப்பு என்ற நூலில் அவர் வரைந்த அந்த முன்னுரையால் தமிழன் வள்ளுவரைப் பற்றி அறிந்து கொள்கிற வாய்ப்பை பெற்றான்.



ஜி.யூ.போப் அந்த நாளில் எழுதினார் – திருக்குறளும் நாலடியார் போன்ற அரிய ஒழுக்க நூல்களை, பண்பாட்டு நூல்களை பெற்றிருக்கிற தமிழ்நாட்டு மக்கள், தன்னுடைய பண்பாடு பற்றியோ, தாய்மொழி பற்றியோ, தாழ்வானது என்று எண்ணி வெட்கப்பட்டு நடக்க வேண்டிய அவசியமில்லை. உலகத்தில் உள்ள வேறு எந்த மொழியிலும், நாகரீகத்திலும் கிடைக்காத உயர்ந்த கருத்துக்கள் இந்த நூல்கள் மூலமாக உலகத்திற்கு கிடைக்கின்றன. அது குறித்து தமிழர்கள் பெருமைப்படலாம் என்று எழுதினார்.

**தமிழின் எழுச்சியை மக்களிடம்**
**சேர்த்தது திராவிட இயக்கமே**

இதற்கு என்ன காரணம் என்றால் திருக்குறள் என்றாலும் சரி, அல்லது தமிழில் பிறந்த இலக்கியங்கள் என்றாலும் ஒரு காலத்தில் தாழ்வாக கருதப்பட்டது. அப்படி ஒரு தாழ்வு தமிழன் மீது சுமத்தப்பட்ட காலம் கடந்த நூற்றாண்டு வரையில். மனோன்மணீயம் சுந்தரனார் தமிழுக்கு ஒரு எழுச்சியை ஏற்படுத்தினார். தேசியக் கவி பாரதியார் இன்னொரு வகையில் உணர்ச்சியை ஊட்டினார். அந்த உணர்ச்சி தொடர்ந்து வளர்ந்தது. வடலூர் வள்ளலாரும் அதை உணர்ந்தார். ஆனால், மக்களிடம் ஒரு இயக்கமாகச் சேர்கிற ஒரு வாய்ப்பை இங்கே வாழப்பாடி இராமமூர்த்தி குறிப்பிட்டதைப் போல திராவிடர் இயக்கம்தான் ஏற்படுத்தியது.

திருக்குறளை ஒரு ஏடாக சிலர் பயில்வார்கள். ஒரு நூலாக சில பேர் விளக்கம் செய்வார்கள். அது தமிழனுடைய தனி பண்பாட்டு அடிப்படையில் பிறந்து உலகமெல்லாம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக விளங்குகிறது என்பதை எடுத்துவைப்பதற்கான உணர்வு அன்றைக்கு இல்லை. மறைமலையடிகளாரோ பல்கலைப் புலவர் கா.சு. பிள்ளை அவர்களோ, நாவலர் சோமசுந்தர பாரதியாரோ, அவர்களையொட்டி வேறு பல தமிழ் அறிஞர்களோ தொடர்ந்து ஏற்படுத்திய அந்த எண்ண அலைகள் மக்களிடத்திலே திராவிடர் இயக்கத்தால் எடுத்துச் சொல்லப்பட்ட காரணத்தால் தான் ஒரு குலத்திற்கு ஒரு நீதி பேசுகிற மனுநீதியை விட பல மடங்கு திருக்குறள் உயர்ந்த ஒப்பற்ற நூல் என்று தமிழ்நாட்டு மக்களிடம் பரவியது. ஏற்றுக் கொள்ளப்பட்டது.

திருவள்ளுவருடைய பெருமைக்கு உரிய தகுதி இந்தியாவில் கிடைக்கவில்லை. திருவள்ளுவர் பேசப்படுவது வேறு மாநிலங்களில் இல்லை. கர்நாடகத்தில் சிலை திறக்க அனுமதிக்கவில்லை என்றால் ஒரு காரணம் திருவள்ளுவர் பெருமையை அவர்கள் அறிய மாட்டார்கள். இன்னொரு காரணம் அவர்கள் சொந்த வரலாற்றையே அறிய மாட்டார்கள்.

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றியபோது, கன்னடம் கிடையாது. அவர்கள் பேசியது தமிழ். தெலுங்கு கிடையாது. அங்கே அவர்கள் பேசியது தமிழ். உச்சரிப்பு வேறுபாடு இருக்கலாமே தவிர, தமிழ்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆந்திரம், கர்நாடகாவிலே, கேரளத்திலே பேசப்பட்டது. திருவள்ளுவர் அன்றைக்கு கர்நாடகத்திற்கும் சேர்ந்த புலவர்தான். ஆந்திரத்திற்கும் சேர்ந்த புலவர்தான், ஆனால், அந்த வரலாற்றை அறியாததால் வள்ளுவர் சொன்ன குறள் கருத்து சில, சொற்கள் சில இன்றைக்கும் கன்னடத்திலே விளங்கினாலும்கூட திருவள்ளுவர் தமிழ்நாட்டுப் புலவர் என்று எண்ணுகிற ஒரு எண்ணம் இருக்கிறது. வரலாற்றை நாம் மறந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

**தத்துவ நூல் திருக்குறள்**

அப்படிப்பட்ட திருவள்ளுவர் வரைந்த திருக்குறள் மனித வாழ்க்கையை மையமாக வைத்து இயற்றப்பட்ட தத்துவ நூல். மற்றவர்களெல்லாம் சமய அடிப்படையில் தான் நூல்களை இயற்றினார்கள். அது பகவத் கீதையாக இருந்தாலும் சரி, வேறுபல சமய நூல்களாக இருந்தாலும் சரி, மதச் சார்பு அடிப்படையில்தான் இந்த நூல்கள் பிறந்தன. திருவள்ளுவர் நூல் ஒன்றுதான் எந்த மதச் சார்பும் இல்லாமல் விளங்குகின்ற நூல்.

இங்கே பேசிய நண்பர்கள் கேட்டார்கள் – வள்ளுவனுக்கென்று ஒரு இயக்கம் அந்த குறளைப் பரப்ப – கொள்கையை பரப்ப அடியார்கள் கூட்டம் ஏன் தோன்றவில்லை என்று கேட்டார்கள். தோன்றாததற்கு எது காரணம் என்றால் அது சமய நூலாகத் தோன்றவில்லை. சமயத்திற்கு அப்பாற்பட்ட நூலாகத் தோன்றியது.

வடலூர் வள்ளலார் பாடல்கள் அவர் சீர்திருத்தவாதியாக இருந்தாலும்கூட சமய உணர்வோடு சைவப்பற்றும் சீர்திருத்தமும் கலந்து பாடப்பட்டது. அந்த வாய்ப்பு வள்ளுவருக்கு இல்லை. இன்னும் சொல்லப்போனால் வள்ளுவர் நூல் ஏன் அரங்கேறவில்லை என்று கேட்டார்கள். எந்த அரசும் அதை ஏற்கவில்லையா என்று கேட்டார்கள். வள்ளுவரைப் போல தன்மானம் மிக்க, தெளிவு மிக்க, சிந்தனை மிக்க ஒரு அறிஞன் தன் நூலை இன்னார், இன்ன இடத்தில் அரங்கேற்ற வேண்டும் என்று விரும்பியிருக்கவே மாட்டான். வள்ளுவர் நூலை அரங்கேற்றுகிற அளவிற்கு தகுதியுடைய நூல் என்று



கொள்ளவில்லை என்று கேட்டார். தத்துவத்துறையே தடுமாறுகிற துறையாக நீண்ட காலமாக இருக்கிறது. தத்துவத்துறை என்று சொன்னால் மக்கள் உணர முடியாத, அறிய முடியாத செய்திகளை, விளக்கங்களைக் கொண்டதாக, கருத்துக்களைக் கொண்டதாக படிக்கட்டுகளை அமைத்ததாக இருந்தால்தான் அது தத்துவம் என்று கருதுகிறார்கள்.

வள்ளுவம் கண்ட தத்துவம் மனிதன் உணரக்கூடிய தத்துவம். இங்கே ஒரு நண்பர் சொன்னதைப் போல் மனிதனுக்காகத்தான் கடவுள் சிந்தனை. கடவுளுக்காக - கடவுள் தோற்றுவித்ததாக மனிதன் இல்லை. மனிதன் உயர்வதற்கும் அவன் உயர்ந்த ஒரு நிலையிலே பக்குவம் பெறுவதற்கும் கடவுள் தத்துவமோ, சிந்தனையோ பயன்பட வேண்டுமே தவிர, கடவுளுக்காக மனிதன் அல்ல. கடவுள் இட்ட கட்டளையின் விளைவு மனிதனல்ல.

சொல்கிற தகுதி மிக்க புலவர்கள் வள்ளுவர் காலத்தில் இல்லை.

இன்னொரு வகையில் எண்ணிப் பார்த்தால் வள்ளுவரே ஒரு மன்னன். மன்னனாக இல்லாவிட்டாலும்கூட ஒரு குறுநில மன்னன். ஒரு சிற்றூர் தலைவன். அவன் நூலைக் கொண்டுபோய் இன்னொரு இடத்தில் அரங்கேற்றுவதற்கு அவசியமில்லை. ஆனால், மக்கள் மன்றத்தில் அரங்கேறும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்திருக்கத்தான் வேண்டும். அந்த மக்கள் மன்றத்தில் அரங்கேற்றுவதிலேதான் திராவிடர் இயக்கம் முன்னோடியாக இருந்தது.

இன்றைக்கும்கூட எண்ணிப் பார்த்தால் கிரேக்க நாட்டு சாக்ரடீசோ, சீன நாட்டு கன்பூசியஸோ அல்லது வேறு பல தத்துவ ஞானிகளோ பல்வேறு விதமான, மக்களுக்குத் தேவையான அரிய கருத்துக்களைச் சொன்னாலும்கூட, வள்ளுவனைப் போல, முழுமையாகச் சொன்ன இன்னொரு புலவன் உலகத்தில் இதுவரை பிறக்கவில்லை.

இங்கே பேசிய துணைவேந்தர் வி.சி.குழந்தைசாமி பேசும்போதுகூட கேட்டார். வள்ளுவருடைய தத்துவத்தை ஏன் தத்துவத் துறை ஏற்றுக்

அறிஞர் அண்ணா சொல்வார், ''மக்கள் வாக்கே மகேசன் வாக்கு'' என்பார். விவேகானந்தர் சொன்னார், ''மக்கள் தொண்டுதான் மகேசன் தொண்டு'' என்றார். இன்னொரு வகையிலே பார்த்தால் மக்களுக்காகத் தான் தத்துவம். அந்த மனித வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்தை வள்ளுவன் சொன்னதைப் போல வேறு எந்த நூலிலும் எடுத்துக்காட்டவில்லை.

அறம்-பொருள்-இன்பம் இது வடமொழியில் அறம் என்பது தர்மம். அது தனி. அதில் கட்டளைகள் தனித்தனியாகப் பிறக்கும். அதைப் போல அவர்களின் அர்த்த சாஸ்திரம் என்பது அரசன் ஆட்சி நடத்த என்னென்ன செய்ய வேண்டுமோ அது. இன்பம் என்பது எப்படி வேண்டுமானாலும் அடையக் கூடியது. வள்ளுவர் கண்ட இன்பம் தூய நல்லின்பம். வள்ளுவர் வகுத்த பொருள் - முயற்சியினால் தேடுகிற பொருள் அடிப்படையில் உலகியல் வாழ்க்கைக்கு தேவையான எல்லாம் என்பதாகும். வள்ளுவர் கண்ட அறம் - மனத்துக்கண் மாசிலன் ஆதல்.

**பண்பாட்டை பெரிய தத்துவமாக்கினார் வள்ளுவர்**

மனிதன் மூன்று வகையில் வாழ்கிறான் ஒன்று மனிதன் மனத்தால் வாழ்கிறான். மனம் மனிதனை ஆண்டு கொண்டிருக்கிறது மனிதன் அறிவால்

முன்னேறுகிறான். அறிவு அவனுக்கு துணையாகிறது. மனிதன் உடலால் இயங்குகிறான். அதை அவன் தவிர்த்து கொள்ள முடியாது. உடலோடு கூடிய இயற்கை இன்ப நாட்டம். அறிவோடு கூடிய செயற்பாடு முயற்சி. அந்த முயற்சியின் விளை பொருள். அதன் விளைவு அரசியல் வரையில், மனம் – அறிவு – உடல் இந்த மூன்றையும் மனிதன் விட்டு விலக முடியாது. உடம்பை கட்டுப்படுத்தலாம். அறிவை நெறிப்படுத்தலாம். மனதை ஆண்டு ஆண்டு, பழக்கிப் பழக்கி தவறான வழியில் போகாமல் நிறுத்தலாம். இந்த மூன்றுக்கும் தேவையான அறம்–பொருள்–இன்பத்தை வள்ளுவர் வகுத்தபோது மனிதனை உயர்த்துவதற்கான அடிப்படையில் அவர் வகுத்தார். மனிதனை வாழ்விக்கச் செய்வதற்கான அடிப்படையை வகுத்தார்.

இந்த அடிப்படையைத்தான் தென்னகத்து மக்களுடைய தொன்மை நாகரீகத்தில் முகிழ்த்த கலாச்சாரத்தின் விளைவு எளிய மக்களின் வாழ்க்கையிலே இழையோடியிருந்த பண்பாட்டை வள்ளுவர் பெரிய தத்துவமாக்கினார்.

எனவே, அப்படி ஒரு அற்புதமான அடிப்படை வள்ளுவரால் உலகத்திற்கு கிடைத்தது. நமக்கு கிடைத்தது. நமக்கு கிடைத்த அற்புதத்தை நாம் உணரவில்லை. காரணம் மதம் நம்மை பல்வேறு வகையில் ஆண்டது. ஜாதி பல்வேறு வகையில் நம்மை கெடுத்தது. தீண்டாமை போன்ற கொடுமைகள் நம்மிடம் மெல்ல, மெல்ல புரையோடிய புண்ணாக வளர்ந்தது. மனிதத் தன்மையை நாம் இழந்தோம். வள்ளுவரைப் புரிந்து கொள்ள நாம் தவறினோம்.

எனவே, காலம் மாறுகிறது. வள்ளுவரைப் புரிந்து கொள்கிற ஒரு நல்ல சூழல் உருவாகிறது. மேலும் மேலும் உருவாகும்.

இப்படிப்பட்ட அரும்பெரும் வாய்ப்பாக – தமிழ்மக்கள் எல்லோரையும் உயர்த்துவதாக – எந்த பாகுபாடுக்கும் இடம் தராததாக – எல்லா சமயத்தவரையும் இணைப்பதாக ஒரு அடிப்படை அமைத்த திருவள்ளுவரின் திருக்குறள் இந்திய அரசியல் சட்டத்திற்கு இந்தியாவில் இருக்கிற ஒரே ஒரு சான்று நூல். இன்றைக்கு சமயச்சார்பற்ற கொள்கையை அரசு மேற்கொள்ள வேண்டும் என்பது சட்டம். சமய நல்லிணக்கம் மக்களிடையே தேவை. இது நம்முடைய வேண்டுகோள். ஜாதி எண்ணம் ...யாடு ஒழிய வேண்டும். இது நம்முடைய குறிக்கோள். தீண்டாமை ஒழிய வேண்டும். அந்த நல்லெண்ணம் நம்மிடம் வளர வேண்டும். இப்படி எத்தனையோ,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்று வள்ளுவர் சொன்னதுகூட மனிதன் பிச்சையெடுத்து வாழலாம் என்று சில சமயங்கள் சொல்லியிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் துறவிகள் பிச்சை எடுத்துத்தான் வாழவேண்டும். துறவி தனக்கென்று எதுவும் தேடிக்கொள்ளக் கூடாது என்பதற்காக அப்படி ஒரு இலக்கணம்.

வள்ளுவர் சொன்னார் – எந்த காரணத்திற்காகவும் ஒருவர் பிச்சை எடுத்து வாழ்ந்து துறவு நிலையை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை என்று கருத்துப்பட ஒரு பொது நோக்கில் கூறினார்.

ஆயிரம் உண்மைகள் தமிழன் பெருமை சொல்ல திருக்குறளில் உண்டு. அதை முற்றும் உணர்ந்தவர் என்னுடைய பெருமைக்குரிய தலைவர் கலைஞர். அவர் உணர்ந்தார். உரை எழுதினார். அதை ஓவியமாக்கினார். மக்கள் உள்ளம் கொள்ள அதை பல்வேறு நேரங்களில் எடுத்து வைக்கிறார். தொடர்ந்து திருக்குறளுக்கு கலைஞர் ஆற்றியிருக்கிற பணிகளே ஒரு இருபது பணிகள் இருக்கும். அதன் சிகரமாக வள்ளுவருடைய திருவுருவச் சிலையை இங்கே அமைத்தார்.

அப்படி அமைத்த கலைஞர் புகழ் வள்ளுவர் சிலையையும், வள்ளுவர் நூலையும் போல என்றைக்கும் நிலைத்து நின்று மக்களுடைய உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொண்டதாகத் திகழும் என்பதை தெரிவித்து, கலைஞர் சொல்லியிருக்கிறார் – என் மிகப் பெரிய ஆசையை நிறைவேற்றி விட்டேன். மகிழ்கிறேன் – என்று சொல்லியிருக்கிறார். நாங்களும்தான் மகிழ்கிறோம். உங்கள் ஆசையை நிறைவேற்றிவிட்டதாகச் சொல்லி நீங்கள் மகிழ்கிறீர்கள். நாங்களும் மகிழ்கிறோம். எங்கள் ஆசையை நிறைவேற்றுவதற்கு நீங்கள் தொடர்ந்து வாழவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

*– திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில்*
*கல்வி அமைச்சர்*
*பேராசிரியர் க. அன்பழகன்*
*ஆற்றிய தலைமையுரை.*




# சமுதாயப் புரட்சி செய்யும்
# தத்துவப் பெருஞானி
# மகத்துவம் மிகக் கொண்ட
# மனிதகுலத் திருவிளக்கு

**– முதலமைச்சர் கலைஞர்**




அடலேறு மொழித் தமிழே – இன்பக்
கடலேறு தனித் தமிழே – சோலை
மடலேறு சுவைத் தமிழே – நீ என்
உடலேறி உயிரேறி வாழ்விக்கின்றாய்,
வணங்குகின்றேன்.
பேரன்பு கொண்டோரே
பெரியோரே
பெற்ற தாய்மாரே
நல் இளஞ் சிங்கங்காள்
பேராசிரியப் பெருந்தகையீர்
பேரவையின் அருந்தலைவ
ஒளிமிகுந்த கருத்தளித்து எமை மகிழ்விக்க
வெளிநாட்டிலிருந்தும் வந்துள்ள உறவினர்காள்
அமைச்சர் பெருமக்காள்
அவை சிறக்க வந்திருக்கும்
ஆன்றோரே, சான்றோரே,
நமை வளைத்திருக்கும் முக்கடலின்
வயிற்றுக்குள் இருக்கின்ற முத்தைப் போல்
வாரி வழங்கத் தமிழ்க் கவிதை
வடித்தெடுத்து வந்துள்ள பாவலர்காள்!

கடற்கரையின் மென்காற்றும், நும்
கவிதையெனும் இளங்காற்றும் – எம்
துன்பமெல்லாம் நொடியில் ஆற்றும்



– 31–12–1999 அன்று திருவள்ளுவர் சிலைத்திறப்பு விழாக் கவியரங்கில்
முதலமைச்சர் கலைஞரின் தலைமைக் கவிதை

தூய தமிழ்ப் புகழைச் சாற்றும்
குருட்டு மதியை மாற்றும்
குறளைப் போற்றும்...
குவலயத்தின் மத்தியிலே
குன்றா விளக்கை ஏற்றும்
அறம் பொருள் இன்பமெனும்
அறிவுப் பதாகைதனைப் பிடிப்போம்
ஆதி பகவன் மைந்தன் ஆணை வழி நடப்போம்
அதைத் தடுக்க முனைவோரின் செயல்களையே முடிப்போம்.



இலக்கணத்தை எதிர்க்கும் எண்ணம் என்பால் இல்லை
இலக்கணம்தான் என்னோடு ஊடல் செய்யும் அன்புக்கிள்ளை
ஒருபாட்டும் இலக்கணமுடன் ஒருப்பட்டு வராவிடினும் நான்
தரும்பாட்டு தமிழ் உணர்வைக் கொல்லாதெனும் துணிவுடனே
கரும்பாட்டும் ஆலையிலே வெம்பொன்று புகுந்தது போல்
கவிக்கூட்ட மேடையிலே வீரமாய்ப் புகுந்துவிட்டேன் - தென்றல்

அரும்பாட்டும் பூங்காவில் உங்கள்
அரும் பாட்டு, தமிழ் மாலையிலே பூவாம்
அந்தப் பூவாடும்
கரும்பாட்டம் இருக்கின்றீர் நீங்கள், நானோ
துரும்பாட்டம் இருக்கின்றேன் உம்மிடையே
எறும்பு ஆட்டும் இரும்புத் தூண் என்றால், என்
வெறும் பாட்டும் வென்று விடும் நும்மை

சோலைக்குயில் பாடும்
கோலமயில் ஆடும்
ஞானக்கிளி தாவும்
மோனத் தவமிருக்கும்
வானத் திருமேனி
வண்ணப்பொடி தூவும்
வானவில்லும் வளையும்
காலைக்கதிர் விளையும்
நீலக் கடலோரம்
நித்தம் தவம் புரியும்
குமரி எல்லை வந்தோம்
குதிகுதித்து நின்றோம் - இங்கு
வான் முட்டும் சிலையொன்று
வள்ளுவர்க்கு அமைத்துள்ளேன்
வருக நீவிர் வாழ்த்துரைக்க என்று
வாஞ்சையுடன் அழைத்துள்ளேன்.

குமரிக்கடல் குலுங்க கையொலித்து
குன்றங்கள் நடுநடுங்க வாழ்த்துரைத்து
அய்யன் வள்ளுவனின்அடிதொடர சூளுரைப்பீர்...
உய்ய வழி வேறில்லை குறளைத் தோள் சுமப்பீர்.
ஓவியம் வரைந்தேன் குறட்பாக்களுக்கு - உரைக்
காவியம் வரைந்தேன் திருக்குறள் முழுமைக்கும்.
இன்னும் இன்னும் எண்ணிப் பார்க்கின்றேன்
என்ன இல்லை எதை எழுத விட்டு விட்டான் அய்யன் என்று
கன்னத்தில் கை வைத்துச் சிந்திக்கின்றேன்.
அன்னத்தின் தூவியிலே கறுப்பின்
சின்னத்தைக் காணப்போமோ?
அதனால் தான் குறையிலாக் குறள் என்றும்
அணுக்கூட கறையில்லா மறை என்றும் கூறுகின்றோம்...

சமத்துவப் பேரொளியாய்
சமுதாயப் புரட்சி செய்யும்
தத்துவப் பெரு ஞானியாய்
மகத்துவம் மிகக் கொண்ட மனித குலத் திருவிளக்காய்
பூமிக்கே புனித உரை வகுத்தளித்து
புத்தெழுச்சி பெற்றுத் தந்த புனிதனவன்.
அருளாதாரம் வழங்கி அனைத்துயிரும் போற்றியவன்
– அரசியல்

பொருளாதாரம் என ஆய்வுரையை ஆற்றியவன் – ஆளும்
கலாச்சாரம் எதுவெனக் காட்டியவன்! வள்ளுவன்!
வள்ளுவன்! வள்ளுவன்!

அறத்துப் பால் முப்பத்திஎட்டு அதிகாரம்
அதுதான் இங்கே வள்ளுவன் சிலைக்கு அடிபீடம்
அதிகாரத்திற்கொரு குறளை அடியேன் எடுத்து
அதி – காரமின்றி படைக்கின்றேன் தொகுத்து!
ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனின்
உயர் அடியொற்றி நடப்பவரை
வாட்டும் தொல்லை வருத்துவதில்லையெனக் குறளில்
காட்டுவதும் வள்ளுவன் தானே!

(தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது !)

மழைதான் அமிழ்தமென்றும் உயிர் வாழ
மருந்தும் அதுவே என்றும் மொழிவதும் குறட்பா தானே!

(வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று)

ஐம்புலப் பசியை அடக்க முடியாமல்
அவதிப்பட்டான் இந்திரன் என்று
பொல்லாதார்க்கும் புலன் அடக்கப்
புத்தியைத் தீட்டுவதும் வள்ளுவம்தானே!

(ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி)


மனத்தூய்மைதான் நல் அறமென்றும்
மற்றவை எல்லாம் மன்பதையில்
ஆரவார கோஷங்களே என்றும்
அறிவுறுத்துவதும் குறள் நெறி தானே!

(மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற)

பளிங்கு எனப்படுமே
பழிப்பதற்கு இடமில்லா மனைமாட்சி
இல்லறம் என்பது அதுவே என்று
இசைப்பதும் இனிய குறள் தானே!

(அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று)

பெய் எனச் சொன்னதும் பெய்யும் மழையாய்
பெண் குலம் அடிமைப்படுவதை விடுத்து
மெய்யுரை கண்டு மெல்லியல் நிமிர்ந்திட
அய்யன் படைத்தது அருங்குறள் என்போம்...



(தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை)

ஏழேழு தலைமுறைக்கும்
எந்தத் தீமையும் தீண்டாதிருக்க
சீரோடு புதல்வரை வளர்த்தல் நன்றாமென
செப்பிடும் உரையும் செந்நூல் குறள்தானே!

(எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்)

என்பும் பிறர்க்கு ஈவார் அன்புடையார்
எல்லாம் தமக்கென்பார் அன்பில்லார்
குணக்கேடர் செயல் தோலுரித்து
கொடையுள்ளம் போற்றுவதும் குறள்வழி தானே!

(அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு)

விருந்தினர்க்கே முதலிடமாம் மிஞ்சியதே வீட்டுக்கென்போன்
விதையைக் கூட நிலத்துக்கன்றி விருந்துக்கே சேர்த்தளிப்பான்
விரிந்து பரந்தவன் மனமென்று
தெளிந்து சொல்வதும் திருக்குறள் தானே!

(வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்)

பிஞ்சும் காய்களும் ஒரு மரத்தில் குலுங்கிட
பிறிதோர் மரத்தில் கனிக்குலை தொங்கும்
கனி விடுத்துக் காய் பறித்தவனைக் கண்டு
இனிய உளவாக இன்னாத கூறுவார்க்கு
உவமையாக்கியதும் இந்த உலக மறை தானே!

(இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று)

என்றோ செய்த நன்மையை நினைத்து – அவன்
இன்று விளைத்த தீமையை மறந்திடுக என்பதும்
செய்நன்றி அறிதற்கு இலக்கணம் எனச்
செப்பியவரும் செந்நாப்போதார் தானே!


(செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது)

எச்சத்தால் காணலாம் தக்கார் தகவிலரை
என்பதற்கு அவர்தம் மக்களைச் சுட்டின் பொருந்தாதென்று
உச்சத்தில் அவர் கொண்டிருந்த புகழைத்தான் எச்சமென
உரைத்திட்ட உண்மையின் புதையல் குறளேயன்றோ!

(தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்)

"நாகாக்க என்றானே; நாயகன் வள்ளுவன் – அதை
நடுத்தெருவில் போவோர் வருவோர்க்கெல்லாம் சொன்னானா?"
துடுக்காக இப்படியொரு வினா எழுப்பியவரை மன்றில்
மடக்கிப் போட்டார் அண்ணா நாக்கு இருப்பவர்க்கு
மட்டும் தான் சொன்னான் என்று

(யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு)



இழிந்த குடியென்று ஒழுக்கம் ஒழிந்ததையும்
சிறந்த குடியென்று ஒழுக்கத்தில் உயர்ந்ததையும்
இரண்டையும் ஒப்பிட்டுக் காட்டியதும்
இரு நிலை உணர்த்தியதும் இந்தப் பொய்யா மொழியன்றோ!

(ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்)

வேறொருவர் மனைவியை நோக்குங்கால்
விழி நோக்கு இழி நோக்கு நோக்காதார்
விரிகடல் ஒழுக்கத்தார் வரிசையிலே
வீற்றிருப்பார் என விளம்புவதும் இந்த வித்தகர் தானே!

(பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ ஆன்ற வொழுக்கு)

நாள்தோறும் தன் தலையில் குப்பை கொட்டிய பெண் ஒருத்தி
நலிவுற்றுப் படுத்திருந்த சேதி கேட்டு – அவள்
நலம் கேட்க ஓடினாராம் நபிகள் நாயகம்!
சிலுவையில் அறைந்த போதும் சிரித்த முகம் இயசுவுக்கு!
அடக்குமுறை அடுக்கடுக்காய் சகித்துக் கொண்டார் அப்பர் பெருமான்!
அதனால்தான்
அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலையென்றான் என் அய்யன்.

(அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை)

எட்டுத் தலைப்பில் பாட இருக்கின்ற கவிஞர்க்குள்
போட்டியிருக்க வேண்டும் பொறாமை தலைகாட்டக் கூடாது.
காட்டாதென இந்தக் கலைஞனும் அறிவேன்
அழுக்காறு என்பதென்ன? அது அயலூர்ப் பொருளல்ல;
அது நம் உள்ளத்தின் உற்பத்தி
உடலோடு பிறந்த தீயசக்தி
அப்பாவி நம்மை ஒழிப்பதற்குள்
அப்பாவி யாய் இராமல் நாம் அவனை ஒழித்திடுவோம்
அய்யன் வள்ளுவனின் ஆணையாம் இஃது – இம்
மெய்யுரை கேட்பின் மேன்மை பல உண்டாம்!

(அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்)


பறிப்பதொன்றே பெரும்பணி பிறர்பொருளை என்றே
பழகிக் கொண்ட பகற் கொள்ளைக்காரருக்கு
பகுத்தறியும் நுண்ணறிவு இருந்தென்ன போயென்ன
தொடுத்திடும் இவ்வினாவும் என்அய்யன் வகுத்த குறளே!

(அஃகி யகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்)

சாவது நலமாம் சாற்றுகின்றான் அய்யன்– எப்போது?
ஆனது ஆகட்டுமென்று புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்ந்திடும்போது!
சாவது நலமாம் என்று
சாற்றுகின்றான் அய்யன்.

(புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்)

மண்ணில் காணும் தானியத்தில் பதர் உண்டாம்



மனிதரிலும் பதர் உண்டாம் உண்டாம்! பலர்முன்
பயனற்றவை கூறிப் பயன்பெற முனையும்
பகல் வேடதாரியைப் பதர் எனப் பகருகின்றான் அய்யன்!

(பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்)




இருட்டில் இருக்குமிடந் தெரியாமல்
வெளிச்சத்தில் மட்டும் வெளிப்படும் நிழலைப்போல்
தீச்செயல் புரிவோரை விட்டு விலகாமல்
தீமையும் ஒட்டிக் கொண்டே இருக்குமென
உவமை காட்டி உரைத்திட்ட புலமை என்னே;
உலகில் இந்தக் குறள் விளைத்த புதுமை என்னே!

(தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று)

ஒப்புரவு எனும் பிறர்க்கு உதவும் பண்பினை
இன்றைய உலகிலும் இனிவரும் புதியதோர் உலகிலும்
காண்பது அரிது எனக் கண்டறிந்து சொன்ன
கற்கண்டுக் குறளுக்கு ஈடேது இணைதான் ஏது?

(புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற)

ஆதாயத்தை எதிர்பார்த்துக் கொடை வழங்காதே;
ஆகாரத்தை எதிர்நோக்கி ஏங்குவோர் குடலுக்கு ஏதேனும் வழங்கிடுக!
வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று
வள்ளலார் சொன்னது வள்ளுவன் சொன்னது தானே!



(வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து)

தோன்றின் புகழொடு தோன்றுக என்றால் தொட்டதுறையில்
தொடர்புகழ் எய்துக; அல்லால் எத்துறையும் தொடாதே
என்பது ஆன்றவிந்தடங்கிய ஆசான் அறிவுரை
சான்றுகள் பற்பல இந்த ஜகத்தினில் காணலாம்.

(தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று)

பொருள் இலார்க்கு இல்லறம் சிறக்காதென்பதையும்
அருள் இலார்க்கு துறவறம் நிலைக்காதென்பதையும்
இவ்வுலகம் அவ்வுலகம் என்று காட்டுகின்றான் – இனி
எவ்வுலகம் உதித்தாலும் அவ்வுலகில் காண இயலா அறிவாசான்!


(அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலம் இல்லாகி யாங்கு)

தீராதோ துன்பமென்றும்; வாராதோ கோரிய வரங்களென்றும்;
தீயிலிட்டுப் பொருள்களை வீணே கொளுத்தும் வேள்விகள் ஆயிரம் செய்வதை விட
பண்ணிய பாவங்கள் தொலைந்திட இனியும்
புண்ணியமென ஒன்றிருந்தால் அது வந்து புகுந்திட
உயிர் ஒன்றைப் போக்காமல் அதனை
உணவாக ஆக்காமல் இருந்தாலே போதுமென
உளமுருகச் செய்கின்ற உபதேசம்; ஊருக்கல்ல –
உனக்குமெனக்கும் சேர்த்துத்தான் என உரைத்தவன்
உத்தமப் பெரியோன் வள்ளுவனன்றோ –
நித்திலமன்றோ அவன் தந்த திருக்குறளும்!



(அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று)

பொழியும் மழையில் பொல்லாக் கோடையில்
புற்றுகள் வளரினும் புதர்கள் மூடினும் – கடவுள்
புலப்படும் வரையில் கடுந்தவம் புரிவேன் என்று
பலப்பல சொல்வதெலாம் தவமல்ல என்பார்...
எந்த உயிருக்கும் தீங்கு இழைக்காதிருப்பதும்
எதையும் தாங்கும் இதயம் பெற்றிருப்பதுமே
தவமெனப் படுமென்று தகைவாய்ச் சொல்வார்
தரணிக்கே மறை தந்த தமிழ் மறை ஞானி!



(உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு)


பச்சைக்கிளிகளையும் பால்நிறப் புறாக்களையும் பிடிப்பதற்கு
இச்சையுடன் கண்ணி வைத்துப் புதரில் மறைந்துள்ள
பொல்லா வேடனைப் போல்
பாவையரைக் காமவேட்டையாட பாமும் துறவியர் சிலர்
பாசறை அமைத்து அதனைப் பக்தி மடமென்று பசப்புகின்றார்
பகல் வேடதாரியிடம் பகவான் பேரால் ஏமாற்றும் எத்தனிடம்
எப்போதும் எச்சரிக்கை என்றுரைப்பதுவும் எங்கள்அய்யன் தானே!

(தவமறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று)

எல்லைக்குள் வாழ்க்கையைச் செம்மையாய் அமைத்திடாதார்,
கொள்ளைப் பொருள் சேர்த்திடவே நாட்டம் கொண்டிடுவார்!
தொல்லை தரும் ஆடம்பரத்தை, போலிப் பளபளப்பை
தொடாமலே விட்டு விடச் சொன்னதுவும்
தொலை நோக்குக் குறள்மொழி தானே!

(அளவின்கண் நின்றொழுக லாற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்)

உண்மை மெய்ம்மை வாய்மை என்பதற்கு எல்லாமே
ஒரு பொருள்தான் என எண்ணத் தோன்றும்...
வாய்மைக்குத் தனியாக வடித்தெடுத்த பொருள் ஒன்றுண்டு
ஆய்ந்திடும் இடத்து "பொய் அல்லாதது" என்ற பொருள்அல்ல
வாய்மை எனப்படுவது யாதெனின் எவருக்கும்
தீமையில்லாத சொல்லைச் சொல்லுதல்
இத்தனை தெளிவாய் இதற்குப் பொருளைப் பிழிந்து தந்திடும்
அத்தன் – அய்யன் – ஆசான் – குறள் ஞானி
வள்ளுவன் தானே!



(வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்)

எதற்காக நான் சினம் காக்க வேண்டுமென்று எக்காளச்
சிரிப்பு முழக்கி இளந்தளிர் ஒன்றை
கசக்கிக் கொன்றான் கடுஞ்சினப் பிறவியொருவன் – அக்
கணமே மாமலை மனிதன் ஒருவன் மார்தட்டி அங்கு வந்தான்
"மடையனே மல்யுத்தம் புரிய வருகிறாயா?" என்று
மாமனிதன் கேட்டதுதான் தாமதம்;
சிறுவனைக் கொன்ற சிறுமதியாளன்
சினங் காப்பது என் பண்பு எனச் சொல்லி
சிறகடித்துப் பறந்து விட்டான்.
'செல்லிடத்து சினங்காக்காமல் அல்லிடத்துக்
காத்தால் என்ன காவாக்கால் என்ன' என்று
வள்ளுவன் வாய் மணக்கக் கூறியதை
தெள்ளு தமிழ் வேதமெனல் பொருத்தம்தானே!



(செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்)


தீமை எனக்குச் செய்தவரை தெண்டனிடச் செய்ய வேண்டும்
ஆமை போல அடக்கி ஒடுக்கிப் போட வேண்டும்
அதற்கென்ன வழியென்று ஒரு பிள்ளையாண்டான்
அடர்ந்த மீசையை முறுக்கி விட்டான். அப்போது
அங்கு வந்த வள்ளுவர் அவனைப் பார்த்து
அதற்கு ஒரு வழி சொல்வேன் என்றார்
அதிர்ச்சியுற்று இளைஞன் பார்த்தான்!
"அடலேறே! உனக்கின்னா செய்தவன்
தலை குனிய வேண்டும், அதுதானே உன் ஆசை;
தயங்காமல் இப்போதே அவனுக்கு நன்மை செய்து விடு!"
"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்வது தான்" என்ற
இறையன்றோ எங்கள் அய்யன் ... ஒரு
குறையுண்டோ இந்தக் குறட் பாவுக்கு!



(இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்)

சான்றோர் கூடிய சபையொன்றில்
நூலோர் தொகுத்தவற்றில் தலை எதுவென
தர்க்கமொன்று நடந்ததாக ஒரு கற்பனை!
பக்கம் நின்று பல்லோர் பார்த்திருக்க
வர்க்கபேதம் ஏற்காத வள்ளுவன் அங்கே வந்து
வான்புகழ் குறட்பாவால் விளக்கம் தந்தான்
இருப்போர் இல்லாதார் என்றில்லாமல்
இருப்பதை அனைவரும் பகிர்ந்து கொண்டு
எல்லா உயிரும் வாழ வேண்டுமென்ற
சமநிலைக் கொள்கையே நூலோர் தொகுத்தவற்றுள். தலை! என்றான்
அந்தத் தலைமகன் வள்ளுவன் குறளைத் தமிழ்மறை என்பது தவறு;
தரணி முழுமைக்கும் அதுவும் ஒரு மறையன்றோ!

(பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை)



காளை போனவன் இன்னும் திரும்பவில்லையே என
நாளைக் கோடுபோட்டு எண்ணிக் கலங்கி
பாளைச் சிரிப்பழகு பதுங்கிக் கொள்ளும் காதல்
பாவையர் கவலைகள் அன்றைக்கு நடைமுறை!
அப்போதே வள்ளுவன் நாளுக்கும் வாளுக்கும்
உவமை காட்டி உரைத்திட்டான் ஒரு குறள்!
நாள் என்பது ஒருவரின் ஆயுளை அன்றாடம்
வாள் போல அறுத்துக் கொண்டே யிருப்பதென்றான்.
வாளுக்கும் நாளுக்கும் ஒப்பிட்டு
வள்ளுவன் மொழிந்த குறள் தெவிட்டாத தெள்ளமுதமன்றோ!

(நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்)

பூவுலகப் பற்றெல்லாம் துறந்து விட்டு
மேலுலகப் பற்றே தமக்கு மேன்மை யென்று
சூளுரைத்து வாழ்ந்திருந்த துறவியொருவர்- மடத்தில்
எலிகளைப் பிடிக்க பூனையொன்று வளர்க்கலானார்.
"பாவம்; பூனைக்குப் பசி யெடுத்தால்
பால் தர வேண்டு"மென்று பசு மாடு வாங்கச் சொன்னார்.
மாடுதனைப் பராமரிக்க மங்கை யொருத்தி வந்துதித்தாள் – பக்தி
ஏடுகளைப் புரட்டும் சாக்கில் பலகணியைத் திறந்து வைத்தார்.
அவளோ பசுவுக்குத் தீனி போட்டாள் துறவிக்கு வைத்த
பாலுக்கும் அருகில் வந்து ஜீனி போட்டாள்
**கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்**
**கரங்களிரண்டும் காதல் கொக்கி.....**

ஒன்றின் மேல் பற்று வைப்பின் – அது
மென்மேலும் பற்றுகளைப் பெருக்கிவிடும் என்று
வள்ளுவன் துறவுக்குச் சொன்ன வளமான கருத்து
துறவியொருவர் துறவறம் துறந்த கதையில் முடிந்தது.

(இயல்பாகும் நோன்பிற்கொன்று இன்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து)

வானமும் வசப்படும் என்கின்றோம்
வளர்ந்து வரும் விஞ்ஞான வேகம் கண்டு!
இரண்டாயிரம் ஆண்டின் முன்னே வள்ளுவன்
இதற்கோர் குறளை வரைந்து விட்டான்
ஏற்படும் அய்யங்கள் அனைத்தையும்
ஏற்றதோர் ஆராய்ச்சி செய்து தீர்ப்போம்
வானம் நம்மருகில் வந்துவிட்டதாக
வற்றாத ஊக்கம் பெருகிடப் பார்ப்போம்!
தொலைநோக்கு திறன் கொண்ட நம்
தொன்மை நூல் குறள் என்பது மெய் தானே!

(ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து)

வற்றாத செல்வம் என்பதற்கு; நம் வள்ளுவ ஞானச் செல்வம்
வழங்குகின்ற விளக்கம்தான் என்ன சொல்வேன்! நன்மைக்குப்
பங்கம் விளைக்கின்ற தீய ஆசைகளை விட்டு விட்டால் அதுவே
சங்க நிதி பதும நிதி எனும் பெறற்கரிய பெருஞ்செல்வமாகும்.

(வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்)

இயற்கை நிலையை மாற்றுதற்கு
எப்பாடு பட்டும் உழைக்கின்ற மனிதர்களை
செயற்கை நிலை சில நேரம் கை விட்டு விடும்போது

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறு" மென
இயற்கை நிலையே முதன்மையாக வென்று நிற்கும்

ஊழ் என்று அதற்கொரு பெயர் உரைக்கின்றோம் – அந்த
ஊழையும் உப்பக்கம் காண்பதற்கு வாரீர்!

உலைவின்றித் தாழாது உஞற்றுபவர் வாரீர்!
நிலைகுலையா நெஞ்சினரே வாரீர்!

வங்கம், இந்து, அராபி எனும்
தங்க மகளிர் தரங்கம் பாடி

அங்க மெலாம் அழகு சூடி
சங்கத் தமிழர் நாடு தேடி,


சிங்க மறவர் தோளினை நாடி
இங்கு வந்தனர் குமரிக் கோடி!

முக்கடல் சங்கமம் – பெண்கள்
நெற்றியில் குங்குமம்.
மேனியில் சந்தனம் புனுகு
மினுக்கும் பொன்னகை புன்னகை

அந்தப் புன்னகை புயலென மாறுமுன்னே
கயல் எனும் விழிகளில் கண்ணகி தோன்றுமுன்னே

ஊழையும் உப்பகம் காண்பதற்கு
உலைவின்றித் தாழாது உஞற்ற வாரீர்!

உடன் வாரீர்! உங்கள் உடன்பிறப்பு
அழைக்கின்றேன்; உடன்வாரீர்! உடனே வாரீர்!



குமரிமுனையில் முக்கடல் சங்கமத்தில் விண்முட்ட எழுந்துள்ள **133** அடி உயர திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள் ***31–12–1999*** அன்று தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கின.

முதல் நிகழ்ச்சியாக ஓவியக் கண்காட்சி மற்றும் நூல்கள் கண்காட்சித் திறப்பு விழா நடைபெற்றது. தமிழக சட்டப் பேரவைத் தலைவர் திரு பி.டி.ஆர். பழனிவேல்ராசன் கண்காட்சிகளைத் திறந்துவைத்தார். கண்காட்சிகள் திறக்கப்பட்டவுடன் முதலமைச்சர் கலைஞர், கல்வியமைச்சர் பேராசிரியர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

அதைத் தொடர்ந்து முனைவர் கு.மோகனராசு நடத்திய திருக்குறள் முற்றோதல் நிகழ்ச்சி நடைபெற்றது.




*1.* கா.உமாபதி, கும்மிடிப்பூண்டி; *2.* த. சத்தியப் பிரியா, அருப்புக்கோட்டை; *3.* த. சுகந்தி, இராஜபாளையம்; *4.* கோ.சீ. பிரதீபா, சூரந்தை, தஞ்சை மாவட்டம்; *5.* மீ. மெகருன்னிசா, சீவாபுரம், திருச்செந்தூர்; *6.* இரா.சிவதர அதியமான், குரோம்பேட்டை, சென்னை; *7.* ச. கனிமொழி, பெரம் பலூர்; *8.* கோ. திவ்யா, வடுவூர், திருவாரூர்; *9.* சு. முருகானந்தம், ஒட்டன் சத்திரம், திண்டுக்கல்; *10.* இர. காளிமுத்து காளமேகம், குரோம்பேட்டை; *11.* க. கார்த்திகா, ஒட்டன் சத்திரம், திண்டுக்கல்; *12.* ப.சித்திரப்பிரியா, குமராபுரி, சென்னிமலை, ஈரோடு; *13.* த. திருமூலநாதன், துறையூர் திருச்சி; *14.* க.சாந்தி, குல்லூர் சந்தை, அருப்புக்கோட்டை *15.* கோ.சீனிவாசன், காமராஜபுரம், சென்னை; பா.வினோதா, பெரிய ஒபுளாபுரம், கும்மிடிப்பூண்டி; *17.* மீ. செய்யது பெமிதா ஃபாத்திமா சிவாபுரம், திருச்செந்தூர்; *18.* ச.திலகவதி, திருத்துறைப்பூண்டி; *19.* ச.பவித்ரா, பெரிய ஒபுளாபுரம், கும்மிடிப்பூண்டி; *20.* மு. மணிலா, கேரம்பை, தேனி மாவட்டம்; *21.* மீ.சுஜீதா பேகம், சீவாபுரம், திருச்செந்தூர், *22.* இராம.காளிதாசன், ஒட்டப்பிடாரம்.




இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற மழலைச் செல்வங்களை பாராட்டி முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை :

''திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவினையொட்டி இங்கே தற்போது முற்றோதல் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆற்றலாளர் முனைவர் மோகனராசு அவர்கள் இந்தக் குழந்தைகளையெல்லாம் அறிமுகப்படுத்திய போது திருக்குறளை தலைகீழாக ஒப்புவிக்கக் கூடியவர்கள் இவர்கள் என்றும், எந்தக் குறளை கேட்டாலும் அந்தக் குறளைச் சொல்லக்கூடிய ஆற்றலாளர்கள் என்றும், எந்த குறளுக்கு பொருள் சொல்லச் சொன்னாலும் அல்லது பொருளைச் சொல்லிக் குறளைச் சொல்லச் சொன்னாலும் அதனைக் கூறக்கூடிய திறமையைப் பெற்றவர்கள் என்றும் — இப்படி பல திறப்பட்ட திறமைகளைப் படைத்த சிறுவர், சிறுமியர் இங்கே வந்திருப்பதை எடுத்துச் சொன்னார்.

அதற்கு — ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போல — முற்றோதல் நிகழ்ச்சியில் நாமனைவரும் அதைக் கண்டோம். வள்ளுவருடைய எண்ணம் இன்றைக்கு நிறைவேறியிருப்பதை கன்னியாகுமரியிலே இந்த மேடையிலே நாம் கண்டிருக்கிறோம்.

சமத்துவம், சகோதரத்துவம் எல்லா மதங்களுக்கு இடையேயும், எல்லா சமூகங்களுக்கும் இடையே வேண்டுமென்பதுதான் திருக்குறளின் தத்துவம். அந்தத் தத்துவஞானி எந்தக் கனவு கண்டாரோ, அந்தக் கனவு குமரிமுனையிலே இன்று நிறைவேறிக் கொண்டிருக் கின்றது.

இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகளும், அதைப்போலவே பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த குடும்பத்துப் பிள்ளைகளும், குறள்பால் கொண்டிருக்கின்ற அன்பு, ஆர்வம், ஈர்ப்பு இவைகளையெல்லாம் காணும்போது — உள்ளபடியே இந்த ஆண்டின் தொடக்கம் வள்ளுவரின் கனவு நனவாகும் என்ற நம்பிக்கையை எனக்கு ஏற்படுத்துகிறது.

இந்தச் சிறார்களுக்கு என்ன பரிசளிக்கலாம் என்று நானும், கல்வியமைச்சர் பேராசிரியரும் சிந்தித்தோம். சிந்தித்த பிறகு எடுத்த முடிவு — இங்கே இருபத்திரெண்டு (22) பேர் குறளில் தங்களுக்குள்ள திறமையைக் காட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தலா ஆயிரம் ரூபாய், ஒருமுறை மட்டுமல்ல, மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். இது இந்த 22 பேருக்கு மாத்திரமல்ல. இதைப்போன்ற திறமைபெற்றவர்கள் இன்னும் வருவார்களேயானால் அவர்களுக்கும் ஆயிரம் ரூபாய் வீதம் மாதந்தோறும் — அரசின் சார்பில் தலைமைச் செயலகத்திலிருந்து — அவர்கள் வீட்டு முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். இதற்கு 'குறள் பரிசு' என்று பெயர். இந்தத் திட்டம் தொடரும். தொடர வேண்டும். தொடர்ந்தே தீருமென்பதை எடுத்துக் கூறி குறளின்பால் தங்கள் உள்ளத்தைப் பதித்து, நம்மையெல்லாம் மகிழ்ச்சியில் ஆழ்த்திய இந்தச் செல்வங்களுக்கு என் இதயமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ★



# வள்ளுவன் தன்னை உலகினுக்கே...

**உ**லகுக்கென்று ஒரு நூலை அளித்தவர் திருவள்ளுவர்.

'இதுகுறித்துத் தமிழ்மக்கள் இறும்பூ தெய்தலாம்; இறுமாப்பு அடையலாம்; ஆனால் திருவள்ளுவரைத் தமிழ்நாட்டளவில் கட்டுப் படுத்தலாகாது. அது தளையாகும்; சிறையாகும்' என்பது தமிழறிஞர் திரு.வி.கல்யாண சுந்தரனாரின் கருத்தாகும். அவர் மேலும் கூறுவார் :

'உலகுக்கென்று ஒரு நூலை அளித்த ஒருவரை, உலகவர் என்று கோடலே சிறப்பு. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் பாடியதும் ஈண்டு கருதற்பாலது என்பார் திரு.வி.க.

ஆம்; வள்ளுவரின் பார்வை மிக ஆழமானதும் கூர்மை யானதும் உலகம் யாவையும் தழுவியதுமான விசாலப் பார்வை.

திருக்குறள் மதம், இனம், மொழி, நாடு என்னும் வரம்புகளையெல்லாம் கடந்து, மாந்தரை அவர் தம் மாண்புகளைச் செழுமைப்படுத்தும் உலகோர் அனைவருக்குமான பொது மறையாகும். இத்தகு




**ஜெயகாந்தன்**



உலகப் பொதுமறையைத் தமிழ் உள்ளம் ஒன்று தமிழில் தந்திருப்பது நமது மொழியின் உலகச் சிறப்புக்கோர் அடையாளம்.

மற்றபடி திருக்குறளில் தமிழ்நாட்டைப் பற்றியோ, தமிழர் பற்றியோ, தமிழ்மொழியைப் பற்றியோ, தமிழ் என்ற சொல்லையோ கூட ஓரிடத்திலேனும் குறித்தாரில்லை.

அறமும், பொருளும், காதலும் ஒரு வகுப்பார்க்கோ, ஒரு மதத்தார்க்கோ, ஒரு நிறத்தார்க்கோ மட்டும் உரியன அல்ல. அவை உலக மொழியினர் அனைவருக்கும் பொது.

'முதன்மையும், தொன்மையும் வாய்ந்த தமிழர் பண்பாட்டில் உலக வாழ்க்கைக் கூறுகள் கருக்கொண்டன. கருக்கொள்ளல் இயல்பு. அக்கரு, தெய்வப்புலவராகிய திருவள்ளுவருக்குப் புலனாயிற்று. ஆகவே, அவர்பால் உலகநூல் ஒன்று மலர்ந்ததென்க' என்பார் திரு.வி.க.

வள்ளுவரின் பார்வையின் உயிர்ப்பு 'உலகம் ஒரு குலம்' என்பதே.

உலகம் ஒரு குலம் என்பது பழந்தமிழர் பண்பாட்டினின்றும் முகிழ்த்த மிக நவீனமான குறிக்கோளாகும்.

'அக்குறிக்கோள் திருவள்ளுவரில் படிந்து நின்று வளர்ந்து ஒரு சீரிய உலக நூலாயிற்று. அந்நூலின் உள்ளுறை நுண்ணியதாய்ப் பல பேரறிஞரிடம் புகுந்து புகுந்து பல மொழிகளில் பரிணமித்தது. இவ்வாறு திருவள்ளுவர் கருத்து பெருகிப் பெருகி இந்நாளில் விஞ்ஞானத்தில் விரவி மார்க்ஸியமாகவும், தெய்வீகத்தில் கலந்து காந்தியமாகவும் பரவியுள்ளது. விஞ்ஞான மார்க்ஸியமும், தெய்வீக காந்தியமும் ஒன்றிய ஒரு கொள்கையே இக்கால உலகை ஒருமைப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. இதை உணர்ந்து தொண்டாற்ற நம்நாடு முற்பட்டால் உலகம் நலம் பெறும்' என்று உறுதி கூறுவார் திரு.வி.க.

அத்தகைய தொண்டின் ஒரு கூறே குறளை வீதிதோறும் பரப்புவதும், வள்ளுவர்க்குக் கோட்டம் அமைப்பதும், இப்போது குமரிமுனையில் வள்ளுவப் பெருந்தகைக்கு வானுயரச் சிலை வைப்பதுமாகும் என்றே துணிகிறேன்.

குமரிக்கடல் பாறையைத் தமது தவத்துக் கேற்ற இடமாக சுவாமி விவேகானந்தர் குறித்தது, நமது சிந்தனைக்குரியதாகும்.

உலக நாகரிகம் தோன்றிய ஓரிடம் கடலில் மூழ்கியதுபோக எஞ்சியுள்ள ஒரு பாறையின் மீது அமர்ந்து இந்த பாரததேசத்தையும் உலகையும் உயர்ந்து விசுவரூபம் கொண்டு தரிசனம் செய்ய இதனினும் சிறந்த இடம் இன்னொன்று உண்டா?

வடக்கே இமயமலை, தெற்கே வாழும் குமரிமுனை, கிழக்கிலும் மேற்கிலும் கிடக்கும் பெரியகடல் என்று பாரதி கண்ட காட்சி இந்த வள்ளுவப் பார்வையில் விளைந்த தரிசனம் அல்லவா?

**தக்க இடத்தில், தக்க தருணத்தில், தக்கோரால் தமிழுக்குச் செய்யப்படும் இவ்வுலகச் சிறப்புக்கு வள்ளுவரின் சிலையே மிகமிகத் தகுதியானது.**

திருக்குறள் எனும் நூலின் வடிவமே வள்ளுவரின் வடிவமாகும். வள்ளுவப் பார்வையின் வழியே காண்பவருக்கு இவ்வடிவத்தின் மூலம் திருக்குறளே புலனாகும். இஃது வெறும் சிலையன்று. இது தமிழர் தம் உலகப் பார்வைக்குத் தந்த ஓர் உருவாகும்.

**புதுயுகத்தை வரவேற்கும் உலக மாந்தர் அனைவர்க்கும் புதிய ஒளிதரும் பொருள் மிகுந்த இவ்விழாவினை வையகமே வாழ்த்துகிறது.**

வாழ்க வையகம்!

வளர்க வள்ளுவப் பார்வை!!



# மதச்சார்பின்மைக்கு வழிவகுத்த முன்னோடி !

வள்ளுவர் வாழ்ந்த காலத் தமிழகத்தில் பல சமயங்களும் வழக்கில் இருந்தன. பௌத்தம் இருந்தது. சமணம் இருந்தது. வேத மரபு சார்ந்த இந்து மதம் இருந்தது. உலகாயதமும் இருந்தது. சுருக்கமாகச் சொல்வதானால் ஆத்திகர்கள் இருந்தனர். நாத்திகர்கள் இருந்தனர். அன்றைய அரசு பொதுவாக அரசர் சார்ந்த மதத்தைச் சார்ந்தது. அரசர்கள் ஏதாவது ஒரு சமயத்தைத் தழுவியவர்களாகவே இருந்தனர். எனவே எந்த மதத்தையும் சாராத அரசு! எல்லா மதத்தினருக்கும் பொதுவான வாழ்வியல் தத்துவம் போன்ற சிந்தனைகள் இடம் பெறாதிருந்த காலம். முந்தைய அரசர்கள் பலர், மற்றும் முந்தைக் காலத்தில் ஆட்சியிலிருந்தோர் பலர், பிற மதத்தினரை மதித்தார்கள். பிற மதத்தினருக்கு நியாயம் வழங்கினார்கள்.

ஆனால் அரசு ஆள்பவர் சமயத்தைச் சார்ந்ததாகவே இருந்தது. 'மதச் சார்பின்மை' என்பது வரையறுக்கப்பட்ட, மதிக்கப்பட்ட, கடைப்பிடிக்கப்பட்ட தத்துவமாக இடம் பெறவில்லை. 'மதச் சார்பின்மை' என்ற சொல்லே அகராதிக்குப் புதியது; புதியதாக உருவாக்கப்பட்டது. 'குடியரசுத் தத்துவம்' அரசியல் நடைமுறையாக உருப்பெற்று வளர்ச்சியடைந்த பின்னர்தான் ஆட்சியிலிருந்து சமயம் பிரிக்கப்பட்டது. அதன் பின்னர்தான் அரசுக்கு எல்லா மதமும் சம்மதம் என்ற தத்துவம் அரசு, 'எம்மதத்தையும் சாராமை'



**வா. செ. குழந்தைசாமி**



என்ற நிலைக்கு வளர்ச்சி பெற்று நடைமுறைப் படுத்தப் பட்டது. இன்றும் குடியரசு என்று கூறிக் கொள்ளும் நாடுகளில் 'மதச்சார்பின்மை'யை இந்தியா போன்று அரசியலமைப்பின் அங்கமாகக் கடைப் பிடிக்கும் நாடுகள் மிகச் சிலவே. இந்தியாவைச் சுற்றி இருக்கும் நாடுகளில், இந்தியாவின் அண்டை நாடுகளில், மதச்சார்பற்ற நாடு இன்றும் எதுவும் இல்லை. இந்தப் பின்னணியில், 'மதச் சார்பின்மை' என்பது ஒரு தத்துவமாக அறியப்படாத கால கட்டத்தில் வள்ளுவர் கடைப்பிடித்திருக்கும் அணுகுமுறை எண்ணி எண்ணி வியக்கத் தக்கதாகும்.

வள்ளுவரைப் பொருத்தவரை இரண்டு கூறுபாடுகள் குறிப்பிடத்தக்கவை.

அ) திருக்குறளில் எந்த விதமான சமயச் சார்பும் இடம் பெறவில்லை. எந்தச் சமயமும் முன்னிலைப் படுத்தப் படவில்லை.

ஆ) திருவள்ளுவர் தன்னளவில் எந்த மதத்தைச் சார்ந்தவர் என்பதையும் கூட, குறள் நூலில் இருந்து அறிந்து கொள்ள இயலவில்லை.

திருவள்ளுவமாலையில், கல்லாடர் பெயரில் இடம் பெற்றிருக்கும் வெண்பா, குறளின் சமயச் சார்பற்ற தன்மையை அப்பொழுதே அடையாளம் காட்டியிருக்கிறது.

*'ஒன்றே பொருளெனின் வேறென்பர்;*
*வேறெனின்*
*அன்றென்பர் ஆறு சமயத்தார் –*
*நன்றென*
*எப்பாலவரும் இயைபவே வள்ளுவனார்*
*முப்பால் மொழிந்த மொழி'*

என்ற வெண்பா, திருவள்ளுவ மாலையில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். திருவள்ளுவர் அன்று வழக்கில் இருந்த சமயங்கள், தத்துவங்கள், புராண – இதிகாச மரபுகள் அனைத்தையும் அறிந்திருந்தார் எனத் துணிய இடமுண்டு. இந்திரன், செய்யாள், செய்யவள், தாமரையினான், முகடி, அடியளந்தான், தாமரைக் கண்ணான், காமன் ஆகிய பெயர்கள் குறளில் இடம் பெற்றுள்ளன. இவை வேத மரபுத் தெய்வங்கள். இவற்றை அவர் கடவுள் கோட்பாட்டு நிலையில் அறிமுகப்படுத்தவில்லை. அன்றைய வழக்கை முன்னிறுத்தி இலக்கிய உத்தியாகிய எடுத்துக் காட்டுகளாகவே பயன்படுத்துகிறார். வேத மரபான வேள்வியில் உயிர்ப்பலி, பிறப்பில் உயர்வு, தாழ்வு போன்றவற்றை அறிந்திருந்த தோடு அவற்றை மறுக்கிறார்.

நீத்தார் பெருமை, புலாலுண்ணாமை, கொல்லாமை பற்றிய கருத்துகளும், துறவு நிலைக்கு, இல்லறத்திற்குச் சமமாக இன்றேனும் அதற்கு அடுத்த நிலையில் முக்கியத்துவம் கொடுத்திருப்பதும் பௌத்த சமண சமயங்களின் தாக்கத்திற்குச் சான்றுகளாக அறிஞர் கருதுவர். எனவே, அவர் வாழ்ந்த காலத்திய சமயங்கள், தத்துவங்கள், அவற்றுக்குள் இருந்த முரண்பாடுகள் அனைத்தையும் அறிந்திருந்தார். அவற்றை

*'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு'*

என்ற நிலையில் நின்று தமது நூலைப் படைத்தாரேயன்றி எந்த ஒரு சமயத்தையும் முன்னிலைப் படுத்தினாரில்லை.

பாயிரவியலில் இடம் பெற்றுள்ள கடவுள் வாழ்த்து என்பது நூலாசிரியர் வழிபடு கடவுளையோ, அல்லது நூல் பேசும் பொருளுக்கு ஏற்புடைக் கடவுளையோ வாழ்த்துதல் மரபு எனினும் இந்த அதிகாரத்தில் அவர் எந்தத் தனிப்பட்ட சமயக் கடவுளரையும் வெளிப்படையாக இனங் காட்டவில்லை. கடவுளைச் சுட்டுவதற்கு அவர் பயன்படுத்தும் பண்புப் பெயர்கள் ஒவ்வொரு சமயத்தவரும் தங்கள் கடவுளை அடையாளம் காணக் கூடியனவாகவே உள்ளன. கடவுள் உண்மையை உணர்த்துவதாகவும் அவரை வழிபடுவதால் அடையும் பயன் பற்றிக் கூறுவதாகவும் மட்டுமே இவ்வதிகாரம் அமைந்துள்ளது. நாத்திகர் தவிர்த்து மற்ற அனைத்துச் சாரார்க்கும் ஏற்புடைத்தாகவே இவ்வதிகாரம் அமைந்துள்ளது. நாத்திகர்கட்குக் கூட,



*'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'*

*'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'*

என்ற குறள்கள் அமைதி தரத் தக்கவை. வள்ளுவர் பகுத்தறிவுத் தளத்தின் மேல் நிற்பது கண்டு மனநிறைவு பெறலாம். குறள் நூல் முழுவதிலும் கூறப்பட்டிருக்கும் கருத்துகள் அனைத்தும் இந்த இரண்டு குறட்பாக்கள் தரும் அளவுகோலுக்கு உட்பட்டவையே ஆகும். இந்தப் பிரகடனத்திற்கு விதிவிலக்கில்லை.

வள்ளுவர் கடவுள் நம்பிக்கையுடையவராகவே இருந்திருக்கிறார்; ஊழ், அதன் விளைவு பற்றிப் பேசுகிறார். முற்பிறப்பு, மறுபிறப்புப் பற்றிப் பேசுகிறார். எனவே, அவர் தமது நூலை ஒரு பொது வாழ்வியல் தத்துவமாக அளித்திருந்தாலும் தனிப்பட்ட முறையில் அவருக்கென ஒரு சமய நம்பிக்கை இருந்திருக்கலாம். அது அன்றுள்ள சமயங்களில் ஒன்றாகவோ, அல்லது அவர் தனக்கென வகுத்துக் கொண்ட கடவுட் கோட்பாடாகவோ இருக்கலாம். ஆனால் வள்ளுவரின் கடவுட் கொள்கை என அடையாளம் காட்டத்தக்க ஒன்றை அவர் முன்



வைக்கவில்லை. தன்னுடைய நம்பிக்கைகள் கொள்கைகள் எவையாயினும் அவற்றை அவர் முதன்மைப்படுத்தாது, ஓர் பொது அறத்தை முன்வைக்கிறார். அவருடைய இந்த அணுகு முறை வள்ளுவரை மத அடிப்படையில் அடையாளம் காட்ட முடியாதவராக நம்முன் நிறுத்துகிறது. ஒவ்வொரு சமயத்தினரும் அவரைத் தம் சமயத்தினராகக் காண்கின்றனர்.

திரு.வி.க. 'தமிழ் நூல்களில் பௌத்தம்' என்னும் தமது நூலில் 'எனது சிற்றாராய்ச்சியில் திருக்குறள் சமண அறத்தை அடிப்படையாகக் கொண்ட முந்த பொது நூல் என்று விளங்கியிருக்கின்றது' என்கிறார்.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை 'தமிழ்ச் சுடர் மணிகள்' எனும் நூலில் 'கடவுள் வாழ்த்திலே வருகின்ற மலர்மிசை ஏகினான் முதலிய தெய்வப் பெயர்களை நோக்கும் போது வள்ளுவரைச் சைன மதத்தைச் சார்ந்தவர் என்பது தான் பொருத்தமாகும் என்கிறார்.

திருக்குறளை நன்கு ஆராய்ந்த காஞ்சிபுரம் வச்சிரவேல் முதலியார் தக்க பல ஆதாரங்களைக் காட்டித் 'திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே' என் மெய்ப்பிக்க முயல்கிறார். மறைமலையடிகள் தமது 'பழந் தமிழ்க் கொள்கையே சைவ சமயம்' எனும் நூலில் 'பௌத்த, சமணச் சமயக் குருக்கண்மார் இல்லறத்தை இகழ்ந்து, துறவறத்தையே பெரிதும் கொண்டாடி நிற்பர். இவ்வுண்மை கண்டு தெய்வத் திருவள்ளுவர், அவர் தம் கொள்கையை மறுத்தற் பொருட்டே,



இன்பத்தின் வழித் தாகிய இல்லறத்தை முன்வைத்து நூல் செய்ததும், இல்லறத்தைத் தமிழ்ச் சான்றோர் வழக்குப் பற்றித் துறவறத்தினும் மிக்கெடுத்துக் கூறிய 'தூஉ மென்க' என்கிறார்.

பல சமயங்களும், சமயச் சார்பான ஆழ்ந்த சிந்தனைகளும் இடம் பெற்றிருந்த சூழ்நிலையில், 'சமயச் சார்பின்மை' என்பதை ஒரு தத்துவமாக எண்ணிப்பார்க்கும் வளர்ச்சி நிலை இடம் பெறாத காலகட்டத்தில் தமது சமயம் என்ன என்று அடையாளம் காட்டாது, பின்னணியில் நின்று, சமயச் சார்பற்ற ஒரு வாழ்வியல் நூலை வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன், மன்னராட்சிக் காலத்தில் படைத்தளித்திருப்பது எந்த அடிப்படையில் பார்த்தாலும் எண்ணி, எண்ணி வியக்கத் தக்கதேயாகும்.

திருக்குறளைப் புலவருலகம் ஒரு நீதி நூலாகவே நீண்ட நாளாகப் பார்த்து வந்திருக்கிறது. அதன் பரிமாணங்களை நாம் ஆழமாக ஆராயவில்லை; முழுமையாக அறிந்து கொள்ளவில்லை. கீதை வேதமரபை அடிப்படையாக வைத்து வாழ்வியல் வகுத்த மறை நூல். திருக்குறள் தமிழ்ச் சமுதாயப் பண்பாட்டின் பின்னணியில், அன்பையும், அறத்தையும் அடிப்படையாக வைத்து, வேத மரபை, அன்றைய பௌத்த, சமண, உலகாயதச் சிந்தனைகளை மனத்திற் கொண்டு, வள்ளுவர் தம் ஆழ்ந்த சிந்தனையின், மேதையின், விளைவாக உருவாக்கிய வாழ்க்கைத் தத்துவம். புதுப் படைப்பு. சில கூறுபாடுகளில் புரட்சிப் படைப்பும்கூட. அது மதச் சார்பின்மைக்கு மட்டுமன்றி இன்றைய உலக நடைமுறையில் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கும் 'மனித நேயத்திற்கும்' (Humanism) ஒரு முன்னோடி. வள்ளுவம் நாம் அறிதொறும் அறியாமை காணும் வாழ்வியல் தத்துவம்.

✡ ✡ ✡ ✡

## COSMOPOLITAN OUTLOOK

Tirukkural is the well known literary composition in the Sangam classics. This work proclaims the basic principles for the moral and material life of the people. The aphoirsms about 'loving-kindness' reveal the humane approach of the poet to the problems of life. The lofty ideals that are enshrined in thus didactic work transcends the barriers of race, creed, place and time. Besides, this universal and cosmopolitan outlook, Tirukkural shines supreme in its poetic excellences.

***- Dr. Wilfried Noelle***



# வள்ளுவருக்குப் பேரன்



தலைவி கண்ணாடி முன் அமர்ந்திருக்கிறாள். கையில் கண்ணுக்கு மை தீட்டும் கோல்.


ஆனால் மை தீட்டாமல் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாள்.

இதைப் பார்த்த தோழி, ''கையில் கோலெடுத்துக் கொண்டாய். ஆனால் மை தீட்டாமலிருக்கிறாயே, ஏன்?'' என்று கேட்கிறாள்.

ஒரு கவிஞனைச் சிறந்த கவிஞனாகக் காட்டுவது அவனுடைய கவிதை மட்டுமல்ல.

கவிதை படைப்பதற்காக அவன் உருவாக்கிக் கொள்ளும் சந்தர்ப்பமும் ஒரு நல்ல கவிஞனை இனம் காட்டிவிடும்.

வள்ளுவர் உருவாக்கிக் கொண்ட சந்தர்ப்பமே அவரை ஒரு சிறந்த கவிஞராக இனம்காட்டி விடுகிறது.




இதற்குத் தலைவி பதில் சொல்ல வேண்டும்.

இது கவிதை படைப்பதற்கான அழகான சந்தர்ப்பம் (Situation)

வள்ளுவர் இப்படி ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்கிறார்.


இந்தச் சந்தர்ப்பம் அழகான கவிதையைத்தான் உருவாக்கும்.

வள்ளுவருக்கும் அழகான கவிதை பிறக்கிறது.

தலைவி பதில் சொல்லுகிறாள்:

என் காதலர் எப்போதும் என் கண்ணிலேயே இருக்கிறார். நான் மை தீட்டும் அந்தக்





கணப்பொழுது அவர் மறைந்து விடுவார். அந்தப் பிரிவைக் கூட என்னால் தாங்க முடியாது. அதனால்தான் நான் கண்ணுக்கு மை தீட்டவில்லை.

'கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து ' (1127)

- என்ன அழகான பதில்! என்ன அழகான கவிதை!

ஒரு நல்ல கவிதை என்றால் அதைப் படிக்கும் கவிஞனையும் கவிதை எழுதத் தூண்ட வேண்டும்.

வள்ளுவரின் இந்தக் கவிதையைப் படித்ததும் எனக்குள் தீப்பற்றிக் கொண்டது.

உணர்ச்சிகள் பொங்கின. கற்பனைகள் சுரந்து பீறிட்டன.

இதே சந்தர்ப்பத்தில் தலைவி என்னென்ன பதில் சொல்லியிருக்கக் கூடும் என்று என் சிந்தனை ஓடியது.

விளைவு - எனக்கும் ஓர் அழகான கவிதை பிறந்தது.

கண்ணில் ஏன்
மை தீட்டவில்லை
என்கிறாயா தோழி?
சொல்கிறேன்:

கண்ணுக்குள் என்
காதலர்.

அவர் முகத்தில்
கரி பூசலாமா?

என் சூரியன் மீது
இருட்டைத் தடவுவதோ?

வீட்டிற்குள்ளே அவர்;
வாசலில் எதற்கு
வரவேற்புக் கோலம்?

அவரையே தீட்டி
அழகுபெற்ற கண்ணுக்கு
மையலங்காரம்
வேண்டுமா?

கண்ணைவிட
மென்மையானவர்
என் காதலர்.
கோல் பட்டால்
வலிக்காதா?

அவரை வைத்த
இடத்தில்
வேறொன்றை வைப்பது
கற்புக்கு இழுக்கல்லவா?


இந்தக் கவிதைக்கு நான்தான் தாய். ஆனால் தந்தையோ வள்ளுவர் படைத்த சந்தர்ப்பம்.

அந்த உறவு முறையில் என் கவிதை வள்ளுவருக்குப் பேரன்.

* * * * *



# இணையத்தில் திருவள்ளுவர்



மு. ஆனந்தகிருஷ்ணன்

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக மேலை நாடுகளில் இணையம் வேரூன்றி தழைத்துவந்தபோது அந்நாடுகளில் வாழும் தமிழர்கள், தமிழ் மொழியை இணையத்தில் ஈடுபடுத்தப் பல முயற்சிகளை மேற்கொண்டனர். பிரதிபலன் எதிர்பாராமல் தமிழார்வத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட இம்முயற்சிகளால் விழுதுகள் போல நூற்றுக்கணக்கான இணைய வெப் தளங்கள் உருவாகின. தமிழ் நாட்டில் இணையத் தொடர்பு செம்மையாகச் செயல்படாத நிலையில் நமது தமிழ் ஆர்வலர்கள் இத்தகைய முயற்சிகளில், சென்ற இரண்டாண்டு வரை பங்கேற்கும் வாய்ப்பு இல்லை. தற்போது எண்ணிக்கையில் வேகமாக வளர்ந்துவரும் தமிழ் வெப் தளங்களில் பல்வேறு செய்திகள் இடம் பெறுகின்றன. தமிழ்மொழி மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பல பொருள்களை இவை கொண்டுள்ளன. தமிழ் இலக்கிய நூல்கள், தற்காலத் தமிழ்ப் படைப்புகள், செய்தித் தாள்கள், தமிழில் வந்துள்ள திரைப்படங்கள், இசை வகைகள், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்கள், வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிலையங்கள், பதிப்பகங்கள், நூலாசிரியர்கள், மற்ற நாடுகளில் உள்ள தமிழ் சார்ந்த படைப்புகள், தமிழ் கற்பிக்கும் வழிகள் — இதுபோன்ற ஏராளமான வகைகளில் பல்வேறு வெப் தளங்கள் செயல்பட்டு வருகின்றன.

சிதறிக் கிடக்கும் தமிழ் சார்ந்த தளங்களை ஒருங்கே தொகுத்துப் பட்டியலிடும் முயற்சியில் ஒருசிலர் ஈடுபட்டனர். தற்காலத் தொழில் நுட்பம் மூலம், இப்பட்டியலில் உள்ள தளங்களைத் தனித் தனியாகக் கோடிட்டு, அதைச் சுட்டிக் காட்டி சொடுக்கினால் அந்த அசல் வெப் தளத்தைச் சென்றடையும் தொடர்புகளை ஏற்படுத்தி உள்ளனர். இத்தொகுப்புகளில் குறிப்பிடத்தக்கவை :

**www.directoryindia.com/state/tamil**

இந்த வெப் தளத்தை உருவாக்கி நடத்திச் செல்பவர் அமெரிக்காவில், டொலீடோ என்ற நகரில் வாழும் திரு. சரவணன் அவர்கள். இத்தளத்தில் தமிழ் மற்றும் தமிழ்நாட்டைச் சார்ந்த பல வகையான பொருட்கள் கொண்ட பல்வேறு வெப் தளங்கள் தொகுத்துக் கோடிடப்பட்டுள்ளன.

மற்றொரு தொகுப்புத் தளத்தை சுவிட்சர்லாந்து நாட்டில் லூசான் நகரில் வாழும் திரு. கு. கல்யாணசுந்தரம் அவர்கள் உருவாக்கிச் செயல்படுத்திவருகின்றார். அதன் தள முகவரி :

**www.geocities.com/athens/5180/index.html**

இதுபோல ஆஸ்திரேலியாவில் வாழும் திரு. பாலபிள்ளை அவர்கள் நிர்வகிக்கும் **www.tamil.net** என்ற வெப் தளமும், கனடாவில் டொராண்டோ நகரிலிருந்து செயல்படும் **www.tamil.org** என்ற வெப் தளமும் குறிப்பிடத்தக்கவை.



தொகுப்பு வெப் தளங்கள் நமக்குத் தேவையான செய்தி களையும் விவரங்களையும் எளிதில் கிடைக்கப் பேருதவி யாக உள்ளன. இங்கு தொடங்கி ஆங்காங்கு உள்ள பல்வேறு தமிழ்த் தளங்களில் சேமிக்கப்பட்டுள்ளவற்றைப் பெறலாம். இனி திருக்குறளைப் பற்றி இணைய வெப் தளங்களில் உள்ளவற்றைப் பார்ப்போம்.

### திருக்குறள் திடல்கள்

இணையத்தில் தமிழை ஈடுபடுத்த வேண்டும் என்ற ஆர்வம் தொடங்கிய காலத்தி லிருந்தே, பல்வேறு வெப் தளங்களில் திருக்குறள் பதிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க சில கீழே தரப்பட்டுள்ளன.

**http://www.cs.utk.edu/~siddhart/thirukkural**


திரு. சித்தார்த்தன் ராமசந்திரமூர்த்தி என்பவரால் உருவாக்கப்பட்ட இந்த வெப் தளத்தில் 1330 குறட் பாக்களும் தரப் பட்டுள்ளன. அதோடு கூட Rev. Dr. G.U. போப் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பும் (தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 1982ஆம் வருடப் பதிப்பு) இத்தளத்தில் தரப் பட்டுள்ளது. இத்தளத்தில் திருக்குறளில் உள்ள எந்த ஒரு சொல்லையும் ரோமன் எழுத்து வடிவத்தில் குறிப்பிட்டு அச்சொல்லைக் கொண்ட குறள்களைத் தேடி அடைய வகை செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் உள்ள இமாலயன் அகாடமியின் முயற்சியில் "Holy Kural" என்ற தலைப்பில் குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாங்கிலத் தொகுப்பை டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தின்

**http://www.cc.utexas.edu/~janahan/kural.html**

என்ற வெப்தளத்தில் காணாம்.

மற்றொரு பாராட்டத்தக்க முயற்சியைத் திரு. கல்யாண சுந்தரம் அவர்களும் அமெரிக்காவில் அட்லாண்டாவில் வாழும் திரு. குமார் மல்லிகார்ச்சுனன் அவர்களும் "மதுரைத் திட்டம்" என்ற முயற்சியின் அடிப்படையில் மேற்கொண்டு பல்வேறு பண்டைக்காலத் தமிழ் இலக்கியங்களை



**www.tamil.net/projectmadurai**

என்ற வெப் தளத்தில் பதிவு செய்துள்ளனர். இந்த "மதுரைத் திட்டத்தில்" உலகில் உள்ள தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் எவரும் உறுப்பினராகச் சேரலாம். அவர்கள் தன்னிச்சையாகத் தங்களிடம் உள்ள பண்டைக்காலத் தமிழ் இலக்கிய நூல்களை

இந்த வெப் தளத்தில் உள்ளிடலாம். இந்தக் கூட்டு முயற்சியால் ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட தமிழ் இலக்கிய மின் தொகுப்பு உருவாகி வருகின்றது. இந்த முயற்சியில் முதலாவதாகச் சேர்க்கப்பட்டது திருக்குறள் ஆகும். அதோடு கூட திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் செயல் படுத்தி வரும் முன்பு கூறிய தொகுப்பு வெப்தளத்தில் உள்ள தமிழ் மின் நூலகம் வழியாக மற்ற வெப் தளங்களில் உள்ள திருக்குறள் தொடர்பான பல சிறப்புச் செய்திகளைக் காணலாம்.

### பண்டைய வரிவடிவில் திருக்குறள்

பழங்காலத் தமிழ் வரி வடிவங்களில் திருக்குறளைக் காணவும் இணையம் வழி செய்கிறது.

சென்னைக் கிறித்தவக் கல்லூரிப் பேராசிரியர்கள் திருவாளர்கள் கிப்ட் சிரோமணி எஸ். கோவிந்தராஜன், எம். சந்திரசேகரன் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட ஆய்வுத் திட்டத்தின் அடிப்படையில் பண்டைய கால எழுத்து வரிவடிவங்களில் அமைந்த திருக்குறளைக் கீழ்க்கண்ட தளத்தில் காணலாம்:

**www.geocities.com/Athens/5180/kural1.html**

கி.மு.250–விருந்து கி.பி.250 வரையுள்ள காலத்திய தமிழ் வரி வடிவத்தில் குறள் எப்படி இருந்திருக்கும் என்பதை,

**www.geocities.com/Athens/5180/kural1.jpg**

என்ற வெப் தளத்தில் காணலாம். இத்தளத்தில் கீழ்க்கண்டவாறு தற்போதைய வரிவடிவம் மற்றும் பழைய வரிவடிவம் இரண்டிலும் திருக்குறளைக் காணமுடியும் :

'இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர் அளிக்குமாறு'

'ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்'

'புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ
நிலத்தொடு
உள்ளம் உடைக்கும் படை'



கி.பி.557 முதல் கி.பி.590 வரையிலான காலகட்டத்தில் காணப்பெற்ற தமிழ் எழுத்து வரிவடிவ அமைப்பில் திருக்குறள் எவ்வாறிருந்தது என்பதை

**www.geocities.com/Athens/5180/kural2.jpg**

என்ற வெப் பக்கத்திலிருந்து அறியலாம்.

'தம்மில் இருந்து தமதுபார்த்து உண்டாற்றால்
அம்மா அரிவை முயக்கு'

'வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு'

'ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்'

கி.பி.737–விருந்து கி.பி.795 வரையிலான காலகட்டத்தில் திருக்குறளின் வடிவமைப்பு எவ்வாறிருந்தது என்பதை **www.geocities.com/Athens/5180/kural3.jpg**

என்ற வெப் பக்கத்திலிருந்து அறியலாம்.

'சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை'

'உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து'

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்'

### மொழி பெயர்ப்புகள்

**www.geocities.com/Athens/5180/thkrl.html**

என்ற வெப் தளத்தில் உலகின் பல மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப் பட்டுள்ள விவரம் தரப்பட்டுள்ளது. மொழிபெயர்த்த ஆசிரியர் பெயர், மொழி பெயர்க்கப்பட்ட ஆண்டு ஆகிய விவரங்களும் அளிக்கப்பட்டுள்ளன. அஸ்ஸாமி மொழியில்–2, பர்மிய மொழி–1, சீனம்–1, செக்–1, டச்சு–1, ஆங்கிலம்–25, ஃபிஜிய மொழி–1, ஃபின்னிய மொழி–1, ஃபிரெஞ்சு–5, ஜெர்மன்–6,



குஜராத்தி – 1, ஹிந்தி–7, கன்னடம்–4, லத்தீன்–2, மலேயா–2, மலையாளம்–6, ஒரியா–1, பஞ்சாபி–1, போலந்து மொழி–1, ராஜஸ்தானி–1, ரஷ்ய மொழி–2, சமஸ்கிருதம்–1, சௌராஷ்டிரம்–1, சிங்களம்–2, சுவீட மொழி–1, தெலுங்கு–2, உருதுவில்–2 மொழிபெயர்ப்புகள் உள்ளன என்ற விவரத்தை இந்த வெப் தளத்தின் மூலம் நாம் அறியலாம். திருக்குறளைப் படிக்க விரும்பும் பிற மொழியினருக்கு இது பேருதவியாக உள்ளது.

இவையன்றி, பெர்கீலி பல்கலைக் கழகத்தினரின்,

**http://tamil.berkeley.edu**


என்ற வெப் தளத்தில் திருக்குறளின் ஒரு சில அதிகாரங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. திரு. ஆர். ரவீந்திரன் அவர்கள் செயல்படுத்திவரும்,

**www.iupui.edu/~rravindr/arappal.html**

என்ற வெப் தளமும் குறிப்பிடத்தக்கது.


### தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் நூலகம்

இவ்வாண்டு சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்கில் (தமிழ்நெட்–99) தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழ் இணையப் பல்கலைக்கழகம்





ஒன்று நிறுவப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி அவர்களது தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு மேற் கொள்ள வேண்டிய வழிமுறைகளைக் குறிப்பிட்டுள்ளது. இப்பல்கலைக் கழகத்தின் ஒரு முக்கிய அம்சமாகத் தமிழ் மின் நூலகம் ஒன்று செயல்படும். இந்த நூலகத்தின் தமிழைக் கற்கவும் கற்பிக்கவும் வேண்டிய பாடங்களுடன் பண்டைய, தற்கால நூல்கள், அகராதிகள், செய்தித் தாள்கள் போன்றவை ஒலி—ஒளி வடிவில் அமைக்கப்படும். தற்போது உலகெங்கிலும் பரவியுள்ள தமிழ்மொழி சார்ந்த பல்வேறு வெப் தளங்களுக்குக் கோடிட்ட தொடர்பு களும் அளிக்கப்படும்.



தமிழ்நெட்—99 மாநாட்டைத் தொடர்ந்து அரசினால் ஒப்புத லளிக்கப்பட்ட தமிழ் எழுத்து களுக்கான குறியீட்டு முறைகளைப் பயன்படுத்தி இந்த மின் நூலகத்திலுள்ள எல்லா நூல் களையும் காணமுடியும்.

### உரைநூல்கள் இல்லாமை

மேற்கண்டவாறு திருக்குறள் தமிழிலும் ஆங்கிலத்திலும் பதிவாகி உள்ளன. ஆனால் குறளுக்கான உரைநூல்கள் நூற்றுக்கணக்கில் வெளியிடப்பட்டிருந்தும் அவற்றில் ஒரு சில கூட எந்த வெப் தளத்திலும் இடம் பெறவில்லை. காப்புரிமை உடையோரி டமிருந்து தேவையான உரிமங்களைப் பெறவேண்டியுள்ளதே இதற்குக் காரணம். வருங்காலத்தில் இவ்வாறான நூல்களுக்கான உரிமைகளைப் பெற்று இணைய நூலகத்தில் அவற்றை இடம் பெறச் செய்யும் முயற்சியை தமிழ் இணையப் பல்கலைக்கழகம் மேற்கொள்ளலாம்.


### வருங்கால வளர்ச்சி

இணையத்தில் தமிழ் மேலும் பன்மடங்கு வளர்வதற்குப் பல புதிய தொழில்நுட்பச் சாதனங்களும் மென்பொருட்களும் வெளியாகி வருகின்றன. தற்போது பெரும் அளவுக்குத் தமிழ் நூல்கள் வெளியிடுவோர் அவற்றைக் கணிப்பொறியில் பதிவு செய்து அச்சிடுகின்றனர். அவ்வாறு பதிவு செய்யப்படும் மின்தகடுகளின் நகல்களைத் தேவையான உரிமங்களைப் பெற்று இணையத்தில் உடனுக்குடன் இணைக்கலாம். இதுபோலவே, ஓலைச்சுவடிகளை மின்பதிவுகளாக அமைத்து இணையத்தில் சேர்க்கலாம். தமிழ் நூல்களை இணையத்தின் மூலம் படிப்பவர்களுக்கு ஏற்றவாறு குரல் ஒலி, நிழற்படம் மற்றும் அசையும் படங்கள் போன்றவற்றைச் சிறந்த முறையில் பயன்படுத்தி, கற்பதை எளிமையாக்குவதற்குத் தொழில் நுட்ப வசதிகள் பல உள்ளன.

இணையத்தில் தமிழ் தழைக்க வேண்டும் என்று இவ்வாண்டு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஏற்றிய சுடர், பல ஆண்டுகள் தொடர்ந்து ஒளி வீசுவதன் மூலம் தமிழ் வளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்கும் என்பது உறுதி.



# திருக்குறள் உலகை ஆளும்



திருக்குறள் மறைநூல் ஒன்றே
 தேசத்தின் நிறைநூ லாகும்!
கருப்பொருள் செறிந்த நூலே!
 காலத்தைக் கணிக்கும் நூலே!
ஒருகுறள் படித்தால் கூட
 உள்ளத்தை வெளிச்ச மாக்கும்!
அருங்குறள் முப்பால் ஒன்றே
 அனைத்துக்கும் விழிநூ லாகும்!

எப்பொருள் அறிவ தற்கும்,
 எத்தன்மை காண்ப தற்கும்,
முப்பால்கண் ணாடி யாகும்;
 முறையாகத் தொகுத்த நூலே!
குப்புறப் படுத்த வாழ்வில்
 குறைநீக்கி எழுச்சி யூட்டும்.
கப்பிய இருளின் மப்பைக்
 கலைத்திடும் கதிர்நூல் ஆகும்!

ஒழுக்கத்தை ஊட்டும் தாய்நூல்;
 உயர்வுக்கு வானே போலும்!
அழுக்காற்றை நீக்கும் நன்னூல்;
 அறிவூட்டும் அறத்தின் ஆண்நூல்!
பழச்சாறு கருத்தின் ஊற்று;
 பழுதில்லா தமிழக் காற்று!
விழிப்பூட்டும் வெளிச்ச வீடு!
 விவேகத்தின் விளைச்சல் காடு!





காமத்துப் பாலில், உண்மைக்
காதலின் மென்மை உண்டு!
சாமத்தில் மலரும் பூக்கள்
தரும் நோய்க்கு மருந்தும் உண்டு!
ஏமாற்றும் அரசும் நீதி
இல்லாது வறுமை தந்தால்
பாமரக் கண்ணீர் சாய்க்கும்;
பாடமும் இதிலே உண்டு!

பாவுக்கோ யாப்பும் வேண்டும்;
பயிருக்கு வேலி வேண்டும்;
பூவுக்கு மணமும் வேண்டும்;
பூவைக்குக் கற்பும் வேண்டும்;
நாவுக்கோ அடக்கம் வேண்டும்;
நல்லார்க்கு வாய்மை வேண்டும்;
ஆவிற்கு மடியும் வேண்டும்;
அனைத்துக்கும் குறளே வேண்டும்!

இல்லாமை இதிலே இல்லை!
இப்புவிக் கல்விக் கான
சொல்லாத சொல்லும் இல்லை!
சுருக்கிய அடிக ளாலே
எல்லார்க்கும் தெரியும் வண்ணம்
இமயம்போல் கருத்தைக் காட்டி,
கொல்லாமை அறத்தைக் கூறும்
குறளிந்த உலகை ஆளும்!

**சுரதா**



# பொய்யாமொழி

வாலி



நீ
நினைப்பதெல்லாம் -
நடக்கவில்லையா?
அதற்காக -
நினைப்பதையே -
நிறுத்திவிடாதே;

நீ
கேட்டதெல்லாம் -
கிடைக்கவில்லையா?
அதற்காகக்
கேட்பதையே -
நிறுத்திவிடாதே;

நீ
விதைப்பதெல்லாம் -
முளைக்கவில்லையா?
அதற்காக -
விதைப்பதையே -
நிறுத்திவிடாதே;

உன்
உழைப்பு உன்னை -
உயர்த்தவில்லையா?
அதற்காக
உழைப்பதையே -
நிறுத்திவிடாதே;

நம்பிக்கைதான் -
வாழ்க்கையை
நகர்த்திக் கொண்டு போகிறது;

கனி விழாவிடினும் -
கல்லெறிவதை நிறுத்தாதே!

'முயற்சி தன் -
மெய்வருத்தக் கூலி தரும்!'

வள்ளுவம் பொய்க்காது; அதன் -
வாசகம் கைக்காது!





# வள்ளுவரும் மருத்துவமும்

மருத்துவம் பற்றிய தமிழரின் சிந்தனைகள் காலப் பழமையான நோயை எதிர் கொள்வதினும் நோய் வாராது காப்பதுவே அவர்தம் குறிக்கோளாக இருந்தது. அதனால்தான் மருந்தென்று தலைப்பிட்டும் அந்த அதிகாரத்தில் வள்ளுவப் பெருந்தகை நோய்த்தடுப்புச் சிந்தனைகளுக்கே முதலிடம் தந்துள்ளார். இன்றளவும் உலகளவில் நோய்த்தடுப்புக்கு ஆதாரவித்தாகக் கருதப்படுவது உணவுதான். வளர்ச்சியடைந்த நாடுகள் வலியுறுத்தும் பாதுகாப்பு மருத்துவத்தின் தலையாய மூன்று அடிப்படைகளுள் உணவு முதன்மையானது.

இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் மேம்பாடு, ஆய்வுகள் நடத்திக் கண்டுபிடித்துக் காட்டியிருக்கும் இந்த உண்மையை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழறிஞர் ஒருவர், அனுபவநோக்கால், ஆறிரண்டு பன்னீரண்டு வரிகளில் அறிவுறுத்தியிருப்பது தமிழர்தம் மருத்துவ அறிவின் செம்மாந்த நிலையைக் காட்டுவதாக அமைந்துள்ளது. வள்ளுவர் வகுத்திருக்கும் உணவுக் கோட்பாடுகள் எளிய வழி காட்டல்களே. ஆனால் ஆழமான ஆய்வுப் பின்புலம் கொண்டவை; அறிவியல் உண்மைகளாய் விளைந்தவை.

**உண்பதைப் போற்றியுண்க**

உடலுக்கு மருந்து தேவையில்லை; நோய் வந்தால்தானே மருந்து; நோய் வாராதிருக்கு மாறு உடலை வைத்துக்கொள்ள எவ்வழி சாலச் சிறந்தது? 'அருந்தியது போற்றி உணின், அற்றது போற்றி உணின்' என்று இரண்டு வழிகள் வள்ளுவப் பெருந்தகையால் காட்டப்பட்டுள்ளன. எதை உணவாய்க் கொள்கிறோமோ, அதைப் போற்றி உண்ணல் வேண்டும். 'தினமும் இட்லிதானா?' என்று சலித்துக் கொள்வதைவிட, 'நாளும் இட்லி கிடைக்கிறதே' என்று மகிழ்தலோடு, 'உளுந்திலுள்ள புரதமும், அரிசியிலுள்ள மாவுச்சத்தும், வைட்டமின்களும், தாது உப்புகளும் நம்மை வலிமைப்படுத்த, நம் வாழ்வு நலவாழ்வாகச் சிறக்க, இட்லியாய் வடிவெடுத்து வந்துள்ளன' என்ற சத்தான எண்ணத்தோடு காலையுணவு ஏற்கவேண்டும்.

விருப்பமின்றி உண்ணும்போது, சரியான உணர்வுத் தூண்டல்கள் கிடைக்காமையால் செரிமான நீர்கள் தேவையான அளவில் சுரப்பதில்லை. அதனால் உண்ணும் உணவு, அது எத்தனை எளிமையான உணவாக இருந்தாலும் முழுமையாகச் செரிக்கப்படாமல், அதன் சத்துக்கள் உடலைச் சேராதொழிவது ஒருபுறமும், குறைச்செரிமானத்தால் வயிற்றழற்சி ஒருபுறமும் எனத் தீங்குகளை விளைவிக்கிறது. 'விருப்பத்தோடு உண்ணுதல்', உணவருந்துதலில் மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. உண்ணுதலில் உணர்வுகள் வகிக்கும் இந்த ஆளுமையை நன்கறிந்தே வள்ளுவர், 'அருந்துவது போற்றி உண்க' என்றார்.

**செரித்தமை அறிந்து உண்க**

உண்ட உணவு செரிப்பது மிக முக்கிய மானது. இந்தச் செரிமானம் உணவைக் கொள்ளும்போதே தொடங்கிவிடுகிறது. வாய், இரைப்பை, சிறுகுடல் என உணவுப் பாதையின் பல இடங்களில் நிகழும் இந்தச் செரிமானம், கொள்ளும் உணவைப் பொறுத்துக் காலம் எடுத்துக் கொள்கிறது. ஏறத்தாழ மூன்று அல்லது நான்கு மணி நேரத்தில் செரிமானமாகும் உணவின்

◻ இரா. கலைக்கோவன்



சத்துக்கள் குடலுறிஞ்சிகளால் ஏற்கப்பட்டு இரத்தத்தோடு கலந்து செல்களைச் சென்றடைகின்றன.

இந்தச் செரிமானத்தின் சிறப்பறிந்த வள்ளுவர், 'ஒரு முறை உணவு உட்கொண்ட பிறகு, அடுத்த உணவை எப்போது கொள்ளலாம்' என்ற கேள்விக்கு விடையிறுக்கும்போது, 'முதலில் உண்ட உணவு செரித்த பிறகு' என்று மறுமொழிக்கிறார். இதைத்தான் அவரது 'அற்றது போற்றி உணின்' சுட்டுகிறது. செரித்ததை அறிந்து உண்டால் உடலுக்கு மருந்து தேவையில்லை. இன்றைய உணவியல் அறிஞர்களும் நெடுநாள் வாழும் வழியாக, நோயின்றி வாழும் வழியாக இதைத்தான் அறிவுறுத்துகிறார்கள்.

## துவரப் பசித்துப் பின் துய்க்க

செரிமானம் நிறைவுற்றதை எப்படி அறிவது? உண்ட உணவைச் செரித்தனுப்பிய உணவுப் பாதை உறுப்புகள், அடுத்த உணவைக் கொள்ளத் தயாராகும் நிலையே 'பசியாக' உணர்த்தப்படுகிறது. 'பசித்துப் புசி' என்ற சொற்றொடர் பொருள் பொதிந்தது. பசியின் காரணமாய் விளையும் உணர்வுத் தூண்டல்கள் செரிமான நீர்களைச் சுரக்கும் சுரப்பிகளை உற்சாகப்படுத்தி, அடுத்துவரும் உணவின் தேவைக்கேற்ப உரிய நீர்களைச் சுரக்குமாறு செயற்படுத்துகின்றன. 'பசி' எனும் தேவை, உணவுச் செரிமானத்தின் முடிவில் படிப்படியாய் வளர்வது — பசியெனும் தேவையின் தொடக்கத்திலேயே அடுத்த உணவைக் கொள்ளவேண்டியதில்லை. நன்கு பசித்ததும், தேவை தெளிவாக உணர்த்தப்பட்டதும் அடுத்த உணவை ஏற்றால் போதுமானது. இதைத்தான் 'துவரப் பசித்துத் துய்க்க' என்னும் கோட்பாடு வலியுறுத்துகிறது. துவரப் பசித்த பின் உண்பது மகிழ்வு தருவது, நலம் விளைவிப்பது என்றறிந்தமையால்தான் அப்படி உண்ணும் செயலைத் 'துய்க்க' என்ற சொல் கொண்டு குறித்தார்




வள்ளுவப் பெருந்தகை. 'துய்த்தல்' மிக மேன்மையான நுகர்வின்பத்தைக் குறிக்கும் ஆழமான, பொருளமைந்த தமிழ்ச்சொல். அதை உணவருநதுதலுக்கு வள்ளுவர் ஏன் தந்தார் என்பதைத் துவரப் பசித்து உண்பவர்கள் அனுபவத்தால் துய்த்தறிவர்.

**அளவறிந்து உண்க**

செரித்த பின், பசியுணர்வு அறிந்து அடுத்த உணவு கொள்ளலாம் என்று வழிகாட்டும் வள்ளுவர், அங்கும் ஓர் எச்சரிக்கையை முன்வைக்கிறார். 'அளவு' எல்லாவற்றிலும் இன்றியமையாதது. அளவு தெரியாத வாழ்க்கை அவலத்தில் முடிந்துவிடும். அதனால்தான் 'ஆற்றில் போட்டாலும் அளந்துபோடு' எனும் தமிழ்ச் சிந்தனை பிறந்தது. அதன் காரணமாகவே பொருள் போற்றி வழங்கும் நெறி சுட்டுமிடத்து வள்ளுவரும், 'ஆற்றின் அளவறிந்து ஈக' என்று, அறஞ்செயுமிடத்தும் அளவின் இன்றி யமையாமையை அறிவுறுத்துகிறார். 'அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும்' என்பதும் வள்ளுவச் சிந்தனைதான்.

இந்த 'அளவு' என்ற சொல் எதைக் குறிக்கிறது? பசியின் அளவையா? கொள்ளவேண்டிய உணவின் அளவையா? இரண்டையுமே என்று கொள்வதுதான் சாலப்பொருந்தும். வள்ளுவம் 'தீயளவு' என்ற சிந்தனையையும் முன்வைக்கிறது. 'தீயளவின்றித் தெரியான் பெரிதுண்ணின் நோயளவின்றிப் படும்'. 'படுதல்' எனும் சொல் இறத்தலைக் குறித்தது. தீயின் அளவு தெரியாமல் தேவைக்கு மேல் உணவு உட்கொள்பவர்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி உயிரிழப்பர் எனும் பொருளிலமைந்த இச்சிந்தனை குறிக்கும் தீயளவைப் பசித்தீயின் அளவாகவும் கொள்ளலாம், உடலுக்குத் தேவையான வெப்ப அளவைச் (கலோரி) சுட்டும் உணவளவாகவும் கொள்ளலாம். வள்ளுவருக்குக் கலோரி தெரியுமா? கலோரி என்ற சொல் அவர் காலத்து இல்லைதான். ஆனால் உணவின் அருமை பற்றியும் அதன் செரிமானம், தேவை, பயன்பாடு, ஒவ்வாமை என உணவுத் தொடர்பான அனைத்து அறிவியல் உண்மைகளையும் மிகத் தெளிவாக அறிந்து வைத்திருந்த உணவியல் மேதையாக, மருத்துவ அறிஞராக வெளிப்படும் வள்ளுவர், கலோரி என்ற சொல்லால் இன்றைய அறிவியல் எதைச் சுட்டுகிறதோ, அதைத்தான் 'தீ'யென்ற சொல்லால் சுட்டியுள்ளார்.



உணவியலின் இன்றைய சிந்தனை, குறைந்த கலோரி குறைந்த கொழுப்பு உணவே நலம் காக்கும் என்கிறது. பல்வேறு ஆய்வுகளுக்குப் பின் தரப்பட்டிருக்கும் இவ்வறிவூட்டல், வள்ளுவத்தின் காலத்தால் முற்பட்ட உணவுக் கோட்பாடுகளின் உண்மைத் தன்மைக்கு உரை கல்லாகின்றது. ஒரு மனிதன் அவன் சார்ந்த பணிச்சூழல்களில் இயல்பாகச் செயற்படு வதற்குக் கொள்ள வேண்டிய உணவளவை உடலமைப்பு, பணித்தேவை, வாழுமிடம் கொண்டு நிர்ணயிக்கிறார்கள். அமர்ந்து பணி யாற்றுபவர்கள் 2,400 கலோரியும், உடல் உழைப்பு மிக்கவர்கள் 3,900 கலோரியும் த்ரக்கூடிய உணவைக் கொள்ளவேண்டும். பெண்கள் பேறு காலத்தில் 2,400 கலோரியும் பிற காலத்தே 1,900 கலோரியும் தரக்கூடிய உணவைக் கொள்வதே நலம் பயக்கும். இவ்வளவுகளைப் பற்றிக் கவலைப்படாது, இவற்றினும் குறைவாகவோ அல்லது மிகையாகவோ உண்பவர்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாவது கண்டுகூடு.

நன்கு பசித்திருக்கும் நிலையிலும், தனக்குரிய அளவு உணவையே ஒரு மனிதன் உட்கொள்ளவேண்டும். அதுவே அவன் உடலை நீண்டகாலம் நலத்தோடு காப்பாற்றும் வழியாகும்.

**மாறுபாடு இல்லாதன உண்க**

பல்வேறு வகையான ஒவ்வாமைகளில் உணவு ஒவ்வாமை குறிப்பிடத் தக்கது. எல்லாரும் எல்லா வகையான உணவுகளும்



கொள்ள முடியாது. சிலருக்குச் சில உணவுகளை உட்கொண்டால் உடனே அழற்சியோ, ஒவ்வாமை வெளிப்பாடுகளோ, வாந்தியோ, வயிற்றுப் போக்கோ ஏற்படும். ஏற்கனவே நோயுற்றிருப்பவர்களுக்கும், நோய்வாய்ப்பட்டு நல மடைந்தவர்களுக்கும் மருத்துவர்கள் உணவுக் கட்டுப்பாடுகள் விதிப்பதுண்டு. நீரிழிவு நோயுள்ளவர்கள் சர்க்கரை, கிழங்குகள், இனிப்பு வகைகள், மாவுச்சத்து அதிகமுள்ள பழங்கள் கொள்ளக்கூடாது. இரத்த அழுத்தம், இதய நோய் உள்ளவர்கள் கொழுப்புச் சத்துள்ள உணவுகளை அறவே தவிர்க்கவேண்டும். வறுவல் வகை உணவுகள் இவர்களுக்குக் கூடாது. இவையெல்லாம் நலத்தில் மாறுபாடுகளைத் தோற்றுவிப்பன என்பது வள்ளுவம். அதனால் பசித்துண்ணும்போது, அளவறிந்து உண்பதோடு, மாறுபாடில்லாத உணவாகக் கொள்ள வேண்டும். 'மாறல்லது துய்க்க' என்னும் சொற்களால், உடலுக்கு ஏற்புடைய, நலத்திற்கு உரிய உணவுகளைக் கொள்ள வழிகாட்டும் வள்ளுவப் பெருந்தகை, அதை ஒழுங்கு நெறியாகக் கொள்ளவேண்டு மென்பதை அறிவுறுத்தலே 'கடைப்பிடித்து' என்ற சொல்லையும் பெய்து வைக்கிறார்.

*அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல*
*துய்க்க துவரப் பசித்து.*

**மறுத்துண்க**

விருந்தூட்டல் தமிழர் பண்பாடு, செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் பழக்கத்தில் ஊறியவர்கள் தமிழர்கள் என்பதை நன்கறிந்திருந்த நிலையில்தான், இந்நாளைய உணவியலாளர்கள் கூடச் சிந்தித்துப் பார்த்திராத ஓர் அரிய கருத்தை உணவியல் கோட்பாடாக முன்வைக்கிறார் வள்ளுவப்பெருந்தகை. விருந்துக்கு ஆட்படுவாருள் நோய் வயப்பட்டவரும் இருப்பர். நோய் தீர்ந்து நலம் வளர் நிலையில் உள்ளாரும் இருப்பர். அளவாய்க் கொள்ளவேண்டும், ஏற்புடையனவே கொள்ளவேண்டும் என்று மருத்துவர்களால் அறிவுறுத்தப்பட்டாரும் இருப்பர். விருந்தூட்டுபவர்கள் இவர்தம் நிலையறி யாதிருக்கலாம்; அல்லது நிலையறிந்தும், 'ஒருநாள்தானே, ஒன்றும் ஆகாது, கொள்ளலாம்' என்ற எண்ணத்தில் ஆகாதனவற்றைக்கூட அள்ளியிடும் ஆர்வத்தோடு செயற்படலாம். இத்தகு போக்குகளையெல்லாம் உணர்ந்தவராகவே வள்ளுவர், விருந்தோம்பல் பேசியவரல்லவா, மிகுந்த எச்சரிக்கையோடு நடந்துகொள்ளுமாறு விருந்துண்பவர்களுக்கு வழிகாட்டுகிறார்.

மாறுபாடு இல்லாத உணவு கொள்க; அதையும் மறுத்துக் கொள்க. தேவைக்கு மேல் வைக்கும்போது தவிர்த்துவிடுக. 'மறுப்பது' மரியாதைக் குறைவல்ல. நலவாழ்வு அவரவர் கைகளில்தான் உள்ளது. அதனால் நமக்கு எவை தேவையோ, எவ்வளவு தேவையோ, அவற்றை அந்த அளவில் கொள்வோம். அவற்றிற்கு மாறுபட்டனவோ, மிகுதி பட்டனவோ, வழங்கப்படும்போது மறுத்துவிடுவதே சால்புடையது. அதுவே நலம் காக்கும் நல்ல வழி. அதனால்தான் மறுத்துண்பார் உயிருக்கு ஊறுபாடில்லை என்றே உறுதிப்பாடு வழங்குகிறார் வள்ளுவர்.

உண்பது எதுவாயினும் அதை மகிழ்ந்து, மனநிறைவோடு உண்பதும், உண்ட உணவு செரித்தமை அறிந்து, நன்கு பசித்தபிறகு அடுத்த உணவு கொள்வதும், அப்படிக் கொள்ளும் உணவையும் மாறுபாடு இல்லாதனவாகத் தேர்ந்து, நம் தேவைக்கேற்ற அளவில், அதிகம் இடப்படின் மறுத்துக் கொள்வதும் நலம் வளர்விக்கும் வழிகளாம். உடம்பு நெடிதுய்க்க, மருந்தில்லாது வாழ வள்ளுவம் வழங்கும் இந்த ஆறு உணவுக் கோட்பாடுகளைத் தான் இன்றைய அறிவியலும் காப்பு மருத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடு முன்வைக்கிறது.

**மருத்துவக் கல்விக் கோட்பாடுகள்**

வள்ளுவம் மருத்துவம் சார்ந்த பல்வேறு சிந்தனைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் நிறைந்த அளவில் கொண்டிருப் பினும் காலங்கடந்து வாழும் அதன்



மருத்துவக் கல்விக் கோட்பாடுகள், அனைத்திலும் தலையாயனவாய்ச் சிறந் தொளிர்கின்றன.

மருத்துவக் கல்வி இன்றைக்கு மிக முன்னேறியிருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. நோய்களைப் பற்றிய அறிவும், அந்நோய்களுக்கான காரணிகளைப் பற்றிய தெளிவும், அவற்றை வெல்லக்கூடிய வழிமுறைகளைப் பற்றிய தொடர்ந்த ஆய்வுப்போக்குகளும், அவை வழி வளரும் நலப்படுத்தும் திறனும் என மருத்துவத்துறை இன்று எண்ணிப் பார்க்கமுடியாத



வளர்ச்சியை எய்தி, அரிய பல சாதனைகளைப் படைத்துக்கொண்டிருக்கிறது.

இப்படி இமயமாய் வளர்ந்து கொண்டிருக்கும் மருத்துவக் கல்வியின் இன்றைய அடிப்படைக் கோட்பாடுகளை இரண்டே அடிகளில் தந்திருக் கிறார் வள்ளுவப் பெருந்தகை. இவ்வடிகளில் வந்து விழுந் திருக்கும் ஒவ்வொரு சொல்லும் பொருள் பொதிந்த சொல் லாகும்.

'நோய் நாடி' என்ற சொற்றொடரை முதலில் பார்ப்போம். மருத்துவக் கல்வியில் நோய் நாடுதலே இன்றைக்கும் தலையாய கோட்பாடாக மதிக்கப்படுகிறது. இந்நோய் நாடுதல் மூன்று உட்பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. நோயாளியின் பொது வரலாறு அவரைப் பற்றியும், அவருடைய மரபு, இட, வாழ்க்கைச் சூழல்களைப் பற்றியும் அறிய உதவும். நோயாளியை ஆட்கொண்டிருக்கும் நோய் தோன்றி வளர்ந்த வகையும் அது நோயாளிக்குத் தெரியுமாறு ஏற்படுத்தியிருக்கும் உடல்நிலை மாறுதல்களும் நோய் வரலாறாகப் பெறப்படும். நோயாளியின் உடலில் நோய் ஏற்படுத்தியிருக்கும் உள்ளார்ந்த அறிகுறிகள்



பொது ஆய்வின் கீழ் அறியப் படும். இம்மூன்றின் திரண்ட தரவுகள் கொண்டே நோயா ளியை ஆட்கொண்டிருக்கும் நோய் எத்தகையது, எந்தப் பிரிவைச் சார்ந்தது என்ற முடிவுகளுக்கு மருத்துவரால் வரமுடியும். நோய் நாடல் இல்லாமல் மருத்துவமில்லை என்பதால்தான் மருத்துவக் கல்வியின் முதல் பண்பாக அதை நிறுத்தியுள்ளது வள்ளுவம்.

நோய்நிலை அறிந்தபிறகு அந்த நோய்க்கான காரணியைக் கண்டறிய வேண்டும். நோய் முதல் அறியாத மருத்துவரால் நோயைக் களையும் மருத்துவத்தைச் செய்யமுடியாது. உயிர் வேதியியல், நுண்ணுயிரியல் நுண்மியல், நோய் இயங்கியல் என்னும் நான்கு பெரும் மருத்துவத் துறைகளும் நோய்முதல் நாடலுக் காகவே செயற்படுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்தத் துறைகளோ, இவற்றைப் பற்றிய தெளிவோ இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் 'காரணியைக் காண வேண்டும்' என்ற நிலையில் இத்துறைகளின் முதற்படிகளை மனித மனங்கண்டு, வளர்ச்சி நிலைகளை அவாவியுள்ளதைத்தான், வள்ளுவரின் 'நோய் முதல் நாடி' நமக்கு உணர்த்துகிறது. கிரேக்க ஞானி ஹிப்போகிரேட்ஸின் மருத்துவச் சிந்தனைகளை வள்ளுவம் இந்நிலைகளில் பெரிதும் ஒத்துப் போகிறது.

தொண்ணூறுகளில் இணையற்ற வளர்ச்சி கண்டிருக்கும் ஆய்வுக்கூட நெறிகளும், கருவிகளும்கூட நோய்முதல் நாடுதலில் அடைக்கலமாகிவிடும். இதய மின்னலை வரைபடம், எக்ஸ் கதிர்ப்படம், மூளை மின்னலை வரைபடம் என்று தொடங்கி எக்கோ, ஸ்கேன் என அத்தனைக் கருவிகளும், அமைப்புகளும் நோய்க் காரணம் காணவே பயன்படுகின்றன, முயற்சிகள் பெருகி யிருக்கின்றன; முறைகள் வளர்ந்திருக்கின்றன. ஆனால் நோய்முதல் நாடலெனும் அடிப்படைக் கொள்கையில் மாற்றமேயில்லை. இன்னும் சொல்லப்போனால் அந்தக் கொள்கையின் பரந்துபட்ட பரிணாம வளர்ச்சியே இன்றைய அறிவியல் முதிர்ச்சி. நோயையும், அதன் காரணியையும் அறிந்த பிறகு நோய்த் தணிக்கும் வழிநாடுதல்தானே முறை. அதனால்தான் மருத்துவக் கல்வியின் அடுத்தபடி நிலையாக நோய் நீக்கும் வழிநாடலை வள்ளுவம் கொண்டுள்ளது. இங்கும்கூட நோய் தணிக்கும் மருந்து நாடி என்று சுட்டாமல், நோய் தணிக்கும் வாய்நாடி என்று பொதுநிலையில், நோய் தவிர்ப்பு முறைகள் அனைத்தையும் அகப்படுத்தி வள்ளுவர் பெய்திருக்கும் வாய்நாடி எனும் சொற்றொடரின் பொருளாழம், அந்தத் தமிழ்நெஞ்சின் அறிவார்ந்த சிந்தனைகளின் முத்தாய்ப்பாகக் கொள்ளத்தக்கது.

தொற்றுநோய்களுக்கு முனைப்பான மருத்துவம் தேவை. நாள்பட்ட நோய்களுக்குத் தொடர்ந்த மருத்துவம் இன்றியமையாதது. சில நேரங்களில் மருத்துவம், மருந்து மாத்திரைகளுடன் நிற்கும். சிலபோதுகளில் ஊசிகள், அறுவை எனத் தொடரும். உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு கூடச் சில நோய்களுக்கு மருத்துவ முறைகளாகும். இரத்த உயர் அழுத்த நிலையில் உணர்வுக் கட்டுப்பாடு, அமைதி காணல், ஆழ்நிலைத் தியானம் என்பன அறிவுறுத்தப்படுகின்றன. 'வாய் நாடல்', இதனால் பல்நோக்குடையதாய் உருப் பெறுகிறது. மருத்துவம் வளர்நிலைகளைக் கண்டு பல்கிப் பெருகிவிடும் என்பதை அந்நாளிலேயே வள்ளுவர் உணர்ந்திருந் தமையால்தான், மிகச் சுருக்கமான மருத்துவமுறைகளே அமைந்திருந்த இரண்டாம் நூற்றாண்டில் இப்படியொரு முன்னோக்குச் சிந்தனை கொள்ள முடிந்தது.

நோய் நாடி, நோய்முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடிய பிறகு செய்யப்படும் மருத்துவம், வாய்ப்பச் செய்வதாக அமைய வேண்டும். இங்கு 'வாய்ப்ப' எனுஞ்சொல் நோயாளியை நோக்கி நிற்கிறது. நோய் தீர்க்கும் வழி இது எனத் தெரிந்தபிறகும், அந்த வழி நோயாளிக்கு வாய்ப்பானதா என்பதில் அக்கறை வேண்டும். ஒரு நோய்க்கு ஊசி மருத்துவம் தேவையானதாக இருக்கலாம். அதே சமயம் மருந்து மாத்திரைகளாலும் அந்நோய் தீர்க்கக்கூடியதாக இருப்பின் நோயாளியின் வாய்ப்பறிந்து, எது அவருக்கு உகந்ததோ, அம்முறையைக் கைக்கொளல் வேண்டும். அதுபோலவே ஒவ்வாமை;

பலருக்கும் பல பொருள்களுக்கு ஒவ்வாமை உண்டு. பெனிசிலின் ஒவ்வாமை, சல்பா ஒவ்வாமை என்று மருந்துகளுக்கு ஒவ்வாமை மட்டுமல்ல; சிலருக்கு ஊசி போட்டால் ஊசி போட்ட இடம் சிவந்து விடும். இது ஊசியிலுள்ள உலோகத்துக்கு மனித உடல் காட்டும் ஒவ்வாமை வெளிப்பாடாகும். போட்ட ஊசியை எடுப்பதற்கு முன்பே மருந்து ஒவ்வாமையால் இறந்தவர்கள் உண்டு. அதனால் தான், வள்ளுவர் மிகமிக எச்சரிக்கையாக 'வாய்ப்பச் செயல்' என்று அறிவுறுத்துகிறார்.

மருத்துவத் துறையின் அடிப்படைத் தூண்களாக நோயுற்றவர், அவர் நோயை ஆராய்ந்து, கண்டறிந்து நலப்படுத்தும் மருத்துவர், அதற்காகத் தரப்படும் மருந்து, நோயாளிக்கும் மருத்துவருக்கும் இடையில் நின்று இருவர்க்கும் உதவிடும் துணைவர் ஆகிய நால்வரையும் சுட்டும் வள்ளுவர், 'கற்றான்' என்ற சொல்வழி, அந்நாளில் மருத்துவநூல்கள் இருந்தமையையும் அவற்றைப் பழுதறக் கற்றவர்களே மருத்துவர்களாக அறியப் பட்டார்கள் என்பதையும் தெளிவாக்குகிறார். முறைப்படி பயின்ற மருத்துவர்கள் நோயுற்றவரின் அளவு, நோயின் அளவு, அந்நோய் நோயுற்றாரை ஆட்கொண்ட கால அளவு எனும் மூன்றையும் கருதியே மருத்துவம் மேற்கொள்வர். நோயுற்றவரின் அளவு என்னும் சொல்லாட்சி, நோயுற்ற மனிதரின் பொதுநல நிலையைக் குறிக்கிறது. நோய் எந்த உறுப்பைத் தாக்கியிருக்கிறது என்பதையறிவது நோயளவு. இந்த இரண்டுடன் நோய்க் காலமும் அறிந்த பிறகே மருத்துவம் தொடங்கும். இன்றைக்கும் மருத்துவமுறை இதுதான்.

உணவு, உழைப்பு இவ்விரண்டினுள் எதுமிகுந்தாலும், குறைந்தாலும் வளி, பித்தம், சளி காரணமாய் நோய் வந்துறும் என்ற வள்ளுவச் சிந்தனை, கிரேக்க மருத்துவ ஞானி ஹிப்போகிரேட்டஸின் சிந்தனையை ஒத்தது. பித்தம், உணவுப் பாதை நோய்களையும், சளி, மூச்சுப்பாதை நோய்களையும் தோற்றுவிக்க வல்லன. வளி இவ்விரு பாதைகளையுமே பாதிக்க வல்லது. இதயம், மூளை ஆகியவற்றின் செயற்பாட்டிற்கும் வளி இன்றியமையாதது. உடலின் எந்தவொரு செல்லும் வளியின்றி வாழாது. இந்நுட்பங் களையெல்லாம் அறிந்த மருத்துவப்பெருந்தகைகள் அவற்றை அரிய பல நூல்களாக ஆக்கிவைத்திருந்ததை 'நூலோர்' எனும் சொல்லாட்சியில் குறிக்கிறார் வள்ளுவர்.



## காப்பு மருத்துவம்

வருமுன் காத்தலே நலவாழ்வின் அடிப்படைக் குறிக்கோள். இன்றைக்கு உலகெங்கும் **'Preventive Medicine'** என்ற பெயரில் இதைத்தான் வலியுறுத்தியிருக் கிறார்கள். மருத்துவக் கல்வித்திட்டத்தில் காப்பு மருத்துவத்திற்குச் சிறப்பிடம் தரப்பட்டுள்ளது. ஒரு தனிப்பாடமாகவே அது கற்றுத் தரப்படுகிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு தளத்திலும் தேவைப்படும் இந்தக் காப்புணர்வு பற்றி வள்ளுவமும் கருத்துக்களை முன்வைத்துள்ளது. குற்றம் கடிதல் அதிகாரத்தில் இடம்பெறும் இரண்டு குறட்பாக்களும் மனித நலவாழ்விற்கு வள்ளுவம் வழங்கியிருக்கும் சிந்தனைக் கொடைகள். வருமுன்னர்க் காத்துக் கொள்ளாதான் வாழ்க்கை கொழுந்து விட்டெரியும் தீயின் முன்வைத்த வைக்கோல் போலக் கருகிச் சாம்பலாகும் என்ற எச்சரிக் கைக்குரலும், வரக்கூடிய ஒன்றை அறிந்து, அதனின்றும் தம்மைக் காத்துக்கொள்ளும் அறிவுடையார்க்கு எந்நாளும் துன்பமில்லை என்னும் உறுதிப்பாட்டோடு கூடிய நம்பிக்கையளிப்பும் காப்பின் இன்றியமை யாமையை வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களுக்குமாய் வலியுறுத்துகின்றன.

மருத்துவ உலகின் தந்தையாகக் கருதப்படும் கிரேக்கப் பேரறிஞர் ஹிப்போகிரேட்டஸின் கருத்துக் குவியலில் கூடக் காணப்படாத இந்தக் காப்புச் சிந்தனை, உலகிற்கே தமிழர் கொடையாக வள்ளுவம் வழி வழங்கப் பட்டிருப்பது பெருமைக்குரியது. இந்நாளில் மட்டுமல்லாது எந்நாளிலும், மனிதன் என்றல்லாது அனைத்து உயிர்களின் நலவாழ்விற்கும் வள்ளுவக் காப்புச்



சிந்தனைகள் பொருத்த முடையனவாக, ஏற்புடை யனவாக விளங்கும் என்பது கண்கூடு.

## மனநலச் சிந்தனைகள்

உடல் நலம், உளநலம் இரண்டும் இணையும் போதுதான் நலவாழ்வு கூடும். உடல் நலத்தைப் போற்றுதல் எத்தனை முக்கியமோ அத்தனை முதன்மையானது உளநலம் போற்றுவதும். இன்றைக்கு நம்மிடையே பெருகிவரும் முதியோர் இல்லங்களும், அனாதைக் காப்பகங்களும், மனநோய் மருத்துவமனைகளும் வாழ்க்கையின் விரைவுப் போக்குகள் உண்டாக்கியிருக்கும் மனநலச் சீரழிவின் விளைவுகளெனலாம். மனநலம் தனியரைப் பொறுத்தும், சூழலைப் பொறுத்தும் அமைவதாகும். பெரும்பாலும் சூழல்தான் மனநலனை உருவாக்குவதில் பேரங்கம் வகிக்கிறது. இந்தச் சூழலை சரியானதாக, வளம்மிக்கதாக உருவாக்கிக்கொள்வது நம்மிடம் தானுள்ளது. சிற்றினஞ் சேராமை என்றொரு அதிகாரத்தையே வள்ளுவர் படைத்தது மனநலத்தின் முக்கியத்துவம் கருதிதான். 'மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்' என்ற அவரது அறிவிப்பு அனுபவபூர்வமானது.

மனநலம் காக்கும் வழிகளுள் தலையாயது சிற்றினஞ் சேராமையே என்று அழுத்தமாகக் கூறும் வள்ளுவர், மனநலம் வளர்க்கும் முறைகளையும் ஆங்காங்கே பல அதிகாரங்களில் பகிர்ந்து கூறியுள்ளார். எவ்வதுறைவது உலகம் உலகத்தோடு அவ்வதுறைவது அறிவு, ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும், பிறன்மனை நோக்காத பேராண்மை ஒழுக்கு, உலகம் பழித்தது ஒழித்துவிடு, சினம் காக்க; காவாக்கால் கொல்லும் சினம், யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல் அதனின் இலன், மெய்ப்பொருள் காண்பதறிவு, வேண்டாமை விழுச்செல்வம், பெரியாரைப் பேணித் தமராகக் கொளல், உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல், இடுக்கண் வருங்கால் நகுக, நட்பு ஆய்ந்து கொளல், உண்ணற்க கள்ளை, அச்சம் கீழ்களது ஆசாரம் என்பன போன்ற வழிகாட்டல்கள், அறிவுரைகள், வலியுறுத் தல்கள் வள்ளுவம் எங்கும் காணக் கிடக்கின்றன.

உடல் நலத்தை ஓர் அதிகாரத்தில் 'உணவு' கொண்டு முடிக்கும் வள்ளுவர், உளநலம் பற்றிப் பேசும்போது மட்டும் ஏன் இவ்வளவு முன்னெச்சரிக்கையோடு ஒவ்வோர் அதிகாரத்திலும் மனவளச் சிந்தனைகளைப் பெய்து வைக்கவேண்டும் என்ற கேள்வி இயல்பானதே. உடல்நலக்கேடுகள் மிக எளிதான தீர்வுகளில் சரிப்படக் கூடியவை. அவற்றிற்கு மருந்துபோதும். அந்த மருந்து உணவு, பயிற்சி, மருத்துவம் எனும் மூன்றனுள் ஒன்றாகவோ அல்லது மூன்றுமிணைந்தோ அமையலாம்.

ஆனால் உளநலக்கேடுகள் வாழ்க்கையை உருக்குலைத்துவிட வல்லன. ஓர் எளிய உளத்திரிபு கூட ஒரு தனியரின் ஆளுமையைப் பெருமளவில் பாதித்து விடக்கூடும். தோன்றுவதும் தெரியாமல், வளர்வதும் தெரியாமல் நிலைப்படும் உளநிலைத் திரிபுகள் ஆட்கொல்லியாய்ச் செயற்படுவன என்பதறிந்தே, அவற்றைத்தோன்றி, வளர்ந்த நிலையில் சீர்மை செய்தல் அத்தனை எளிமையானதல்ல என்பதும் உணர்ந்தே, வள்ளுவம் மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் என்று முழங்குகிறது. அம் மனநலம் காக்கும் வழிகளையும் நூலெங்கும் தொகுத்துத் தந்து உள்ளது.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது தமிழர் நம்பிக்கை. அந்த மரபார்ந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் வாழ்க்கையை நெறிப்படுத்த விழைந்த வள்ளுவம், அந்த வாழ்க்கைக்கு அடிப்படையான உடல் நலம், உளநலம் இரண்டிலும் பற்றுக்கொண்டு, அவற்றைக் காக்கும் வழிகளில் கருத்துச் செலுத்தியுள்ளது. வள்ளுவம் வரையறுத்தியிருக்கும் மருத்துவக் கோட்பாடுகளும் வழங்கியிருக்கும் நலச் சிந்தனைகளும் மனிதவாழ்வின் காப்புக் கவசங்கள். கருத்தோடு பின்பற்றினால் நலவாழ்வு நாளும் நமக்காகும்.



# திருக்குறளும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்

சுந்தரா. ஆவுடையப்பன்

எது சலித்துப்போகாமல் இருக்கிறதோ, அது வாழ்கிறது என்று பொருள். எது நம்மைச் சலிப்படையாமல் வைத்திருக்கிறதோ அது நம்மை வாழவைத்துக் கொண்டிருக்கிறது என்று பொருள். ஓர் இலக்கியம் வாழ்கிறது என்றால் அது மனிதகுலத்தை வாழவைத்துக் கொண்டிருக்கிறது; வாழ்க்கைக்கான வழிமுறைகளைச் சொல்லிக் கொண்டே இருக்கிறது என்று பொருள். அந்த வகையில் தமிழில் ஈராயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கை விளக்க நூல் திருக்குறள்.

இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பர். நல்ல இலக்கியம், தோன்றும்போது தோன்றிய காலத்தின் கண்ணாடியாகத் திகழ்ந்தாலும் அது, காலநிலைகளைக் கடந்து வாழும்போது, ஒவ்வொரு நிகழ்காலத்திலும் அவ்வக்காலத்தின் முகம் விளக்கும் கண்ணாடியாகவும் பரிணாமம் பெறுகிறது. காலம், அந்த இலக்கியக் கண்ணாடி வழிக் கண்டு முகம் திருத்திக் கொள்ளவும் செய்கிறது. அதனால்தான் வாழும் வள்ளுவத்தின் நிலைத்த தன்மையை நோக்கி, "எல்லாப் பொருளும் இதன்பால் உள" என மதுரைத் தமிழ் நாகனார் திருவள்ளுவ மாலையில் போற்றுகின்றார்.

இன்று உலகை அச்சுறுத்தும் பல சிக்கல்களுக்கும் திருக்குறளில் தீர்வு இருக்கிறது. அதனைத் தேடிப் பெற்றுக்கொள்வதே வாழும் மனித அறிவாண்மைக்கு அடையாளம்.

அண்மைக் காலத்தில் மனிதகுலத்தையே அச்சுறுத்தி வரும் மிகப் பெரிய அறிவியல் ஓலமாகச் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திகழ்கிறது. சுற்றுச் சூழலைப் பாதுகாக்க உலக நாடுகளெல்லாம் ஒன்றுகூடித் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளன. இந்த நிலையில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குறித்த சிக்கல்களுக்குத் தீர்வுமுகம் காண வள்ளுவக் கண்ணாடியை இக்கட்டுரை கூர்ந்து நோக்குகிறது.

**சுற்றுச்சூழல்**

நீர், நிலம், காற்று, வானம் ஆகிய இயற்கை வளங்களுக்கும், மனிதன், பிற உயிரினங்கள், நுண்ணுயிர்கள் ஆகியவற்றிற்கும் இடையே உள்ள தொடர்புகளைப் பற்றி விரிவாகச் சிந்திப்பதே சுற்றுச்சூழல் சிந்தனை ஆகும். தொடர்புகள் சமன்பாடாக இல்லாமல், சமன்பாடு குறையும்போது சுற்றுச்சூழல் மாசுபடுகிறது; இயற்கை வளங்களில் சீர்கேடு ஏற்படுகிறது; அதனால் மனிதகுலத்தின் இருப்புக்கான அச்சுறுத்தல் பெரிய ஓலமாக மாறுகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கெனத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன; திட்டங்களை உறுதியாகச் செயல்படுத்தச் சட்டங்களும் உருவாக்கப்படுகின்றன.

இந்த வகையில்,

1. வன உயிரினப் (பாதுகாப்பு) சட்டம் **(1972)**
2. நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் **(1974)**



3. வனப் பாதுகாப்புச் சட்டம் (1980),

4. காற்று (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (1981)

5. சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் (1986)

6. பொதுப் பொறுப்புக் காப்பீடு சட்டம் (1991)

எனச் சிறப்புச் சட்டங்களை இந்திய அரசமைப்பில் ஏற்படுத்தியிருக்கிறோம். இந்தச் சட்டங்களை நாம் மனிதர்களுக்காக ஏற்படுத்தியிருக்கிறோம். இயற்கை வளங்களான வானத்திற்கோ, நிலத்திற்கோ, நீருக்கோ, மரங்களுக்கோ, மலைகளுக்கோ ஏற்படுத்தவில்லை. ஏனெனில், யாரால் கேடு உண்டானதோ அவரால்தான் ஆக்கமும் உண்டாக வேண்டும். 'கேடும் ஆக்கமும் எய்துதற்குரியர் மக்கள்' என்பார் பரிமேலழகர் (குறள் விளக்கம் 15).

"கேடு அறியாக் கெட்டஇடத்தும் வளம்குன்றா
நாடுஎன்ப நாட்டின் தலை"

(நாடு–736)

கேடு வராமலும் கேடு வந்தாலும் அதனைச் சரிசெய்து இயற்கை வளம் குன்றாமல் காத்துக் கொண்டும் இருக்கின்ற நாடே நாடுகளுக் கெல்லாம் தலைமையானது என்பது வள்ளுவக் கூற்று.

### சுற்றுச்சூழல் சிந்தனைக்கான தேவை

இன்று வானத்தில் ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்திருக்கிறது. நிலத்தில் அமில மழை பெய்திருக்கிறது. பசுங்கூட விளைவு (Green house effect) பற்றிப் பேசுகிறோம். ஓசோன் படலத்தில் ஓட்டை அதிகரித்தால் சூரியனின் புற ஊதாக் கதிர்கள் நேரடியாக மனிதர் முதலான உயிரினங்களைத் தாக்கிக் கேடு விளைவிக்கக் கூடும். பசுங்கூட விளைவினால் பூமியின் வெப்பம் அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது. துருவப் பனிப் பிரதேசங்கள் உருகவும், கடல் மட்டம் உயரவும், தீவுகள் முதலான நிலப்பரப்புகள் நீரில் மூழ்கவும் அதிக வாய்ப்புகள் உள்ளன.

இம்மாதிரியான விளைவுகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் காற்று மாசடைந் திருக்கிறது; நீர் மாசடைந்திருக்கிறது; நிலம் மாசடைந்திருக்கிறது; காடுகள் குறைந்துள்ளன; கடல்வளம் மாசடைந்துள்ளது; மழைவளம் குறைந்துள்ளது; மலைவளம் குன்றியுள்ளது; மரங்கள் குறைந்துள்ளன என்று அடுக்கிக் கூறலாம். இந்த மாசுகளுக்கெல்லாம் அடிப்படைக் குற்றவாளி மனிதன்தான். தொழிற்சாலைகளும் வாகனங்களும் ஏற்படுத்தும் நச்சுப் புகையினால் 'காற்று மாசு' தொழிற்சாலைக் கழிவுகள் நீரில் கலப்பதனால் நதிநீர், கடல்நீர், குடிநீர் மாசு; பிளாஸ்டிக் போன்ற பொருள்களின் பரவலான உபயோகத்தினால் மண்மாசு; காற்று மாசினால் வானம் மாசடைதல் அமில மழை உருவாதல்; மலைகளும் காடுகளும் பசுமை குன்றியதால் மழைக்குறைவு – அதனால் ஏற்படும் நீர்வளக் குறைவு எனப் பல்லாற்றானும் மனிதனின் வளமான வாழ்க்கைக்கு அச்சுறுத்தல்கள் பெருகியுள்ளன.

இந்த அச்சுறுத்தல்களையெல்லாம் வெற்றி காண்பது என்பது மிகவும் எளிது. இயற்கையை நேசிப்பது; இயற்கையோடு இயைந்து வாழ்வது; நகர்மயமாதலை இயற்கையோடு இயையத் திட்டமிடுவது என மரபான நமது முன்னோர் வழி நின்றாலே சுற்றுச்சூழலை மாண்புறப் பாதுகாக்கலாம்.

### சுற்றுச்சூழலும் வள்ளுவமும்

திருக்குறள் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுவதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் அது எல்லாக் காலத்தும் எல்லா இடத்தும் வாழுகிற எல்லா வகை மக்களுக்கும் பொருந்துகிற கருத்துக்களை வலியுறுத்துகிற பாங்கை முதன்மைக் காரணமாகக் கூறலாம்.

நாடு என்பது எப்படி இருக்கும், இருக்க வேண்டும் என்று இலக்கணம் கூறவந்த திருவள்ளுவர்,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு" (நாடு – 734)

என்று கூறுகிறார். இயற்கை வளம் குன்றித் 'தள்ளா விளையுள்' இல்லாமற் போகும்போது



பசி ஏற்படுகிறது; உணவின் குறைபாடு, இயற்கை வள மாறுபாடு ஆகியவற்றால் பிணி உண்டாகிறது; பசியும் பிணியும் கொண்ட மக்கள் வலிவும் பொலிவும் குறைந்தவர்களாக ஆகிவிடுவதால், பகைவர்கள் உள்ளே புகுந்து நாடு பிடிக்க அல்லது நாடு குழப்ப ஏதுவாகிறது. ஆகப் பகையும் பிணியும் பசியும் நாட்டில் ஏற்பட இயற்கைவளக் குறைபாடே அடிப்படைக் காரணமாகிறது. அதனால்தான் நாட்டின் உறுப்பைக் குறிக்க வந்த வள்ளுவர்,

**"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்அரணும் நாட்டிற்கு உறுப்பு"** (நாடு 737)


என்கிறார். மழைநீர், ஊற்றுநீர், ஆற்றுநீர், மலை, அரண் ஆகியவை நாட்டிற்கு உறுப்பாகத் திகழுகின்றன. நீர், இயற்கை வளங்களுக் கெல்லாம் ஆதாரமாகத் திகழுவதால் அதனை மூன்று வகையாலும் முக்கியப்படுத்துகிற வள்ளுவத்தன்மை இங்கு உணரத்தக்கது. 'வாய்ந்த மலை' என்று கூறியதுகூட மழை பெய்வதற்கு மலைகள் மிகவும் உதவி செய்யக்கூடியவை என்ற இயற்கை உண்மையைக் குறிப்பிடத்தான் எனலாம். வலிய பாதுகாப்பு அரணும் இங்கு நாட்டின் உறுப்பாகச் சுட்டப்படுகிறது. 'அரண்' என்பதைப் பாதுகாப்பான கற்கோட்டை என்று ஒருவகையில் நாம் பொருள் கொண்டாலும் அந்த அரண்கூட இயற்கை அரணாக அமைந்திருந்தால் நலம் என்பதே வள்ளுவச் சிந்தை.

**"மணிநீம் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்"** (அரண் 742)

ஆழநீர் அகழி, மண்திடல், மலை, அடுக்கிய காடு இவற்றை உடையதுதான் அரண் என்கிறார். இவற்றில் மண்திடல் தவிர்ந்த பிற அனைத்தும் நீர்வளம் சார்ந்தவை. எனவே நீர், நிலம், காற்று, வானம் சார்ந்த எல்லா இயற்கை நிலைக்களங்களையும் பேணுவதே நாட்டுக்குப் பாதுகாப்பு என்பது வள்ளுவர் கூறும் செய்தி எனலாம். இது நாட்டுக்கு மட்டுமல்லாது நாட்டில் வாழுகிற எல்லா மக்களுக்கும் பாதுகாப்பு என்பது பெறப்படுகிறது. ஏனெனில் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு எனும் ஐம்பூதங்களின் சேர்க்கைதான் மனித உடம்பு என்பது வள்ளுவக் கோட்பாடு.

**"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்"** (கூடா ஒழுக்கம் 271)

வஞ்சமனத்தோடு கூடா ஒழுக்கம் புரிகிற மனிதனைப் பார்த்து அவனது அகத்தே இருக்கிற ஐந்து பூதங்களும் சிரிக்கும் என்பது குறள். எனவே புறத்தே இருக்கின்ற ஐந்து





பூதங்களுமாகிய இயற்கை வளங்கள் தூய்மையாக இருந்தால்தான் அந்த ஐந்து பூதங்களின் கலவையை அகத்தே கொண்டுள்ள மனிதன் நோயற்ற தூயவனாக இருக்கமுடியும்.

## வானும் மழையும்

வானத்தைக் கடவுளர் வாழும் மேலுலகமாகச் சுட்டுவது ஆன்மீகத்தில் ஒரு நம்பிக்கை. எண்ணிலடங்கா ஒலியலைகளும் ஒளியலைகளும் வானத்தில் உருவமற்று உலா வருகின்றன; அவற்றிலிருந்து பூமியிலுள்ளோர் பெற்றுக்கொள்வது அறிவியல் விந்தை. மண்ணில் இறப்போரின் உயிர் யாவும் விண்ணில் சென்று சேருவதாகவும் ஒரு நம்பிக்கை உண்டு. பூமியிலிருந்து வெகு உயர்வில் வானம் இருப்பதால் வானம் உயர்வானது என்பதும் ஒரு கருத்து. இந்த எல்லாக் காரணங்களையும் புறம் தள்ளிவிட்டு, "வானம் சிறப்பானது; ஏன் தெரியுமா? அது மழையைத் தருகிறது!'' என்ற வளம்தரும் காரணத்தைச் சொன்னவர் — திருவள்ளுவர். திருக்குறளைக் கடவுள் வாழ்த்தோடு தொடங்கியவர் இரண்டாவது அதிகாரமாக மழைவாழ்த்தை வைக்கிறார். அதற்கு 'வான்சிறப்பு' எனத் தலைப்பும் இடுகிறார். "வான்நோக்கி வாழும் உலகம்" (குறள் 542) என்பது வள்ளுவரின் அசைக்கமுடியாத நம்பிக்கை. வானம் பார்த்த பூமியில் சுற்றுச்சூழல் சிறப்புக்கள் யாவும் மழையினாலேயே அமைகின்றன.

*"வானின்று உலகம் வழங்கி வருதலால்*
*தானமிழ்தம் என்றுணரற் பாற்று"*

**(வான்சிறப்பு 11)**

உலகத்தில் உயிர்கள் இடையறாது பிறந்து, தொடர்ந்து வருகிற நிலைத்த தன்மை ஏற்பட மழையே உதவுவதால் அதனை அமிழ்தம் என்று போற்றும் வள்ளுவப் பாங்கு வணங்கத்தக்கது. உலக இயக்கம் என்னும் நிலைபேற்றை மழையே வழங்குகிறது என்பதால் அது சாவாமருந்தாகிய அமிழ்தம் எனப்பட்டது. உண்பார்க்கு நல்ல உணவுகளை உருவாக்குவதோடு, தண்ணீராகித் தானே உணவாகவும் அமைவது மழை (குறள் 12). உணவை உருவாக்கித் தரும் உழவர்களுக்கு விளைபொருளை விட, விளைபொருளை உருவாக்க உதவும் மழையே 'வருமானம்' (வாரி) என்கிறார் வள்ளுவர்.

*"ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்*
*வாரி வளங்குன்றிக் கால்"*

**(வான்சிறப்பு 14)**

முதலீடு இல்லாது தொழில் செய்ய முடியாது; உழவுத் தொழிலுக்கு மழையே முதலீடு என்பது இதனால் பெறப்படுகிறது.

தொடரும் குறளில் 'எல்லாம் மழை' (15) என்று கூறிக் கேட்டுக்கும் ஆக்கத்திற்கும் மழையே காரணம் என்று எச்சரிக்கை செய்கிறார். வானத்தை இவ்வளவு உயர்வாக வள்ளுவர் பாராட்டக் காரணம் என்னவெனப் புகுந்து ஆராய்ந்தால், ஓர் உண்மை நமக்குப் புலப்படும். உலகத்திலேயே மிகவும் ஆற்றல் மிக்க சக்தி என்னவென்றால் அது மழையை உருவாக்கித் தரும் சக்திதான் என்பது வள்ளுவர் தரும் செய்தியாக இருக்கிறது. தெய்வத்தைத் தொழாமல் கணவனைத் தொழுது எழுகிற பெண் மிக உயர்ந்த ஆற்றல்மிக்க பெண் (குறள் 55) என்பதைக் கூறவந்த வள்ளுவர் அவளுடைய ஆற்றலுக்கு அளவுகோலாக, அவள் பெய்யென்று சொன்னால் மழையும் பெய்யும் என்று சொல்கிறார். இதனை அடியொற்றித்தான் ''வான்தரு கற்பின் மனையுறை மகளிர்'' (மணிமேகலை) என்றும், "கற்பின் நின்றன காலமாரியே'' (கம்பராமாயணம்) என்றும், "மழைக்குதவும் பெருங்கற்பின் மனைவியார்" (பெரிய புராணம்) என்றும் இலக்கியங்கள் கூறுகின்றன.

மழையின்றி மண்வளம் இல்லை; மண்வளமின்றிச் செடிகொடி மரமில்லை; இவையின்றி விளைச்சலில்லை; விளைச்சலின்றி உயிர்





வாழ்க்கை இல்லை; உயிர்வாழ்க்கையின்றி உலகமே இல்லை என்பதால் "நீரின்றி அமையாது உலகு" (குறள் 20) என்பதை வள்ளுவம் வலியுறுத்துகின்றது.

"புறந்தூய்மை நீரால் அமையும்" (வாய்மை 298) எனும்போது மனிதனின் உடல்தூய்மை மட்டுமல்லாது சுற்றுச்சூழல் தூய்மையே வானத்தாலும் மழையாலும் அமையும் என்பது பெறப்படுகிறது.

**மழையும் கடலும்**

சுற்றுச்சூழல் மாசினால் கடலும் மாசடைகிறது; அதனால் கடல்வாழ் உயிரினங்களும் அற்றுப் போகின்ற வாய்ப்பு உண்டாகிறது என்று சூழலியலார் இப்போது வலியுறுத்தி வருகின்றனர். இந்த உலகம் கடலால் சூழப்பட்டிருக்கிறது. மழையில்லை என்றால் கடல் இருந்தும் பயனில்லை என்பது வள்ளுவர் வாக்கு.

*"விண்இன்று பொய்ப்பின் விரிநீர்*
*வியனுலகத்து*
*உள்நின்று உடற்றும் பசி"* (வான்சிறப்பு 13)

இந்த உலகம் கடலால் சூழப்பட்டது என்ற அறிவியல் உண்மையை விளக்க விரிநீர் வியனுலகம் என்றார் வள்ளுவர்,

*"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும்*
*தடிந்தெழிலி*
*தான்நல்கா தாகி விடின்"*
(வான்சிறப்பு 17)

கடலால் சூழப்பட்ட உலகில், மழையை உருவாக்க உதவுகிற கடலும் மழை இல்லையென்றால், தான் இயல்பில் குறைந்துவிடும் என்பது இந்தக் குறளின் பொருள். நிலம்வாழ் மனிதனுக்கு உணவாகி உதவுகிற கடல்வாழ் உயிரினங்களும் மழை இல்லை என்றால் அழிந்துபடும் என்பதைக் குறிக்கத் "தன்நீர்மை குன்றும்" என்றார்.

ஆக, மழையைப் போற்றாவிடில் மழைக்கு உதவுகிற கடலும் நமக்கு உதவாதபடி மாசடைந்துவிடும் என்பது வள்ளுவ எச்சரிக்கை.

**மழையும் மரமும்**

இன்றைக்குப் பூமியில் உள்ள காற்று மாசையும் ஒலி மாசையும் கட்டுப்படுத்த நிறைய மரங்களை உருவாக்கவேண்டும் என்று முனைந்து வருகிறோம். இவ்விரண்டு மாசுகளையும் குறைப்பதோடு மழைவளம் பெருகுவதற்கும் மரங்கள் பயன்படுகின்றன.

பயன்படாத மனிதனைக் குறைகூறச் சில இடங்களில் மரத்தை உவமையாக வள்ளுவர் பயன்படுத்தியிருந்தாலும் மரங்களின் பயன்பாட்டை அவர் நன்றாகவே உணர்ந்து பாராட்டியிருக்கிறார் என்பதையும் அறிய முடிகிறது.

*"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே*
*பசும்புல் தலைகாண் பரிது"* (வான்சிறப்பு 16)

என்ற குறளில் வானமழை இல்லையெனில் மண்ணில் புல்கூட இல்லை என்று கூறுகிறார். அதாவது, மண்ணில் இயற்கை வளங்கள் செழிக்கும் மரங்கள் மட்டுமல்லாது, ஓர் அறிவு



உயிராகிய புல்கூட முளைக்காது என்பது அவர் கருத்து.

மரங்களின் பயன்பாட்டுத் தன்மையை நல்லவை, தீயவை என இருவகையாகப் பிரித்துப் பார்க்கிறார் வள்ளுவர்.

"இளைதாக முள்மரம் களைக' (பகைத்திறம் தெரிதல் *879*).

*"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்*
*நச்சு மரம்பழுத் தற்று"*

*(நன்றியில் செல்வம் 1008)*

எனவரும் குறள்களில் மரங்களின் தீய தன்மையை விளக்குகிறார்.

*"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்*
*நயனுடை யான்கண் படின்"*

*(ஒப்புரவறிதல் 216)*

*"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்*
*பெருந்தகை யான்கண் படின்"*

*(ஒப்புரவறிதல் 217)*

எனவரும் பாக்களில் உள்ளூரில் பழுத்த பயன்மரம், வேர், மரம், கிளை, பூ, காய், கனி என எல்லா வகையிலும் மருந்தாகிப் பயன்படும் மரம் என மரங்களின் பயன்தரும் தன்மையைப் பாராட்டுகிறார். நாட்டுக்கு அரண் 'அணிநிழல் காடு' எனும்போது மரங்கள் செழித்து நெருக்கமாக அடுக்கி வளர்ந்திடும் காட்டைப் போற்றுகிறார்.



**காற்று**

காற்றைப் பற்றிய செய்தியையும் சூழல் போற்றலில் வள்ளுவர் விட்டுவைக்கவில்லை.

*"அல்லல் அருள்ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கு*
*மல்லன் மா ஞாலம் கரி" (அருளுடைமை 245)*

இந்தக் குறளில் ''வளிவழங்கு மல்லல் மாஞாலம்'' என்பது "காற்று இயங்குகிற வளப்பம் பொருந்திய உலகம்'' என்று பொருள்படும். வாழ்வு வளம் பொருந்தியதாக உலகம் இருக்க வேண்டுமெனில், தூய்மையாகக் காற்று இயங்க வேண்டும் என்பது வள்ளுவச் சிந்தை.

**நீர்**

நீரை மழைநீர், ஊற்றுநீர், ஆற்றுநீர் என மூவகைப்படுத்தியவர் திருவள்ளுவர். இம்மூவகை நீரும் தூய்மை கெடாமல் இருக்க வேண்டும் என்பதும் குறள் கூறும் செய்தி.

*"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு" (ஒப்புரவறிதல் 215)*

என்னும் குறளில் "உலக நடையை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினை உடையவனுடைய செல்வம், ஊரில் வாழ்வார் தண்ணீர் உண்ணும் குளம் நீரால் நிறைந்திருப்பது போன்றது'' என்கிறார். ஏரி, குளம், தூய்மையான நீரால் நிறைந்திருக்க வேண்டும் என்றும் அது ஊரிலுள்ளோரால் விரும்பிக் குடிக்கப் பெறுதல்வேண்டும் என்றும் வலியுறுத்துகிற வள்ளுவர் இங்கே, அறிவுடையாளனின் செல்வத்திற்குக் குளத்து நீரை ஒப்புமை

கூறுகிறார். குளம், மழைநீராலும், ஆற்றுநீராலும், ஊற்றுநீராலும் நிறையும் என்பது அறிந்த உண்மை.

அறிவாளருடைய செல்வத்திற்கு நீரை உவமை கூறிய திருவள்ளுவர், பிறிதொரு குறளில் அறிவுக்கு உவமையாக நீரைக் குறிப்பிடுகிறார். ஆற்றுமணலைத் தோண்டத் தோண்ட நீர் ஊறுவது போலக் கற்கக் கற்க அறிவு சுரக்கும் (குறள் 396) — மேலும்,

*"உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்*
*பாத்தியுள் நீர்சொரிந் தற்று"*
*(அவையறிதல் 718)*

எனும் குறளில் "வளருகின்ற பாத்திக்கே நீர் சொரிய வேண்டும் என்ற நீர் நிர்வாகக் கருத்தை அறிவுணரும் தன்மை உள்ளவருக்கே அறிவுசொலல் வேண்டும் என்ற கருத்தோடு இயைத்துக் கூறுவது இன்புறத்தக்கது.

உவமையாக நீரை உவமையாக்கி நீரின் தூய்மையை வலியுறுத்துவது பெறப்படுகிறது.




**நீரும் நிலமும்**

வாழவைக்கின்ற மண்ணை வசையின்றிக் காக்கவேண்டும் என்பது சூழலியலார் கருத்து. நிலம் எப்படியிருக்கிறதோ அதே தன்மைக் கேற்ப நீரும் மாறிப்போகும் என்பது வள்ளுவர் கருத்து.

*"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு*
*இனத்தியல்பது ஆகும் அறிவு"*
*(சிற்றினஞ்சேராமை 452)*

இயற்கையாகத் தண்ணீருக்கு மணம், நிறம்,



*"துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்*
*அளியின்மை வாழும் உயிர்க்கு"*
*(கொடுங்கோன்மை 557)*

என்ற குறளில் மழைத்துளியை மன்னனின் இரக்கத்திற்கு உவமையாகத் திருவள்ளுவர் கூறுகிறார். அதனால்தான் சிலப்பதிகாரத்தில் கடவுள் வாழ்த்துப் பாடாத — இளங் கோவடிகள் ம்மாமழையை வாழ்த்திப் பாடினார்.

ஆகத் தூய்மையான அறிவாளன் செல்வம், தூய அறிவு, இரக்கம் ஆகியவற்றிற்கு

சுவை, நோயுண்டாக்கும் தன்மை என்று எதுவும் இல்லை. ஆனால் அது எந்த மண்ணோடு சேருகிறதோ அந்த மண்ணின் இயல்புக்கு ஏற்ப மணம், நிறம், சுவை, நோயுண்டாக்கும் மாசு முதலியவற்றைப் பெற்று விடுகிறது. காற்று மாசினால் மழைநீரும், மண்மாசினால் ஊற்றுநீரும் — ஆற்றுநீரும் இயல்புகெட வாய்ப்புள்ளது என்று வள்ளுவர் கூறும் எச்சரிக்கை நமக்கு நல்ல பாடம். இந்தக் குறளிலும்கூட நீரைத் தெளிந்த அறிவுக்கு — உவமையாக்கியுள்ளார் குறளாசிரியர்.



"நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்"
(உட்பகை 881)

எனவரும் குறளில் வாழுகின்ற இடமும் குடிக்கின்ற தண்ணீரும் நோயுண்டாக்குமானால் அவை தீயவையே என நேரடியாக எச்சரிக்கிறார்.

நிலத்தை மாசுள்ளதாக ஆக்கினால் அது நிலத்திற்குக் கேடு என்றாலும் அந்தக் கேடு முழுமையும் கேடு உண்டாக்கிய மனிதனுக்கே வந்துசேரும். இந்தக் கருத்தை ஓர் அருமையான உவமையாகக் கையாள்கிறார் திருவள்ளுவர்.

"சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று"
(வெகுளாமை 307)

சினம் பற்றிக் கூறவந்த வள்ளுவர் நிலத்தை ஓங்கி அறைவதனால் நிலத்திற்குத் தீமை ஒன்றும் இல்லை; ஆனால் அறைகின்ற கைக்குத் தீமை நிச்சயம் என்கிறார். நிலத்தை எவ்வளவு வேகமாக அறைகிறோமோ அவ்வளவு வேகமாகத் தீமை நமக்கு வந்துசேரும் என்பதை நாம் உணர வேண்டும். மண்ணின் தன்மை கெடாத மாண்புறு செயல்களைச் செய்ய வேண்டும்.

**முடிவுரை :**

அறிவியல் உலகில் வாழ்ந்து வரும் நாம் வானின் உயரத்தையும் எட்டுமளவுக்கு அறிவியல் சாதனை புரிந்து கொண்டிருக்கிறோம். எவ்வளவு உயரத்திற்கு நாம் நமது கரங்களை உயர்த்தினாலும் நமது கால்கள் மண்ணில் பாவவில்லையெனில் ஆபத்து நமக்குத்தான். கைகளின் உயரங்களில் புதுமைகளைப் புரிந்தாலும் கால்களின் ஊன்றலில் மரபுகளைப் பேணவேண்டும். இயற்கை நேசிப்பே இனிய நேசிப்பு என்ற வள்ளுவச் சிந்தனைகளை மனதில் பதியம் போட்டால் சூழல் பாதுகாப்பு சுகமாகப் பூப்பூக்கும்.

* * * * *

மழையானது மக்கள் போற்ற வேண்டிய ஒன்று. ஏனெனில், அது உண்ணும் பொருள்களை உண்டாக்கிக் கொடுத்துத் தானும் உணவாக மாறுகிறது. பெரியோர்களைப் போற்றுங்கள். மனைவி, மக்களோடு வாழுங்கள். விருப்பு, வெறுப்பு அற்று வாழுங்கள். இது ஒரு தொகுப்பு.

'படி, படிக்க வேண்டியவைகளைப் படி! குற்றமறப் படி; படிக்காவிட்டாலும் கேள்; படித்து, கேட்டு அறிந்தபடி நட' இது ஒரு தொகுப்பு.

'சூதாடாதே! பொய் சொல்லாதே! புலால் உண்ணாதே! கள் குடியாதே! களவு செய்யாதே! வஞ்சகம் கொள்ளாதே! தீயன எண்ணாதே!' இது ஒரு தொகுப்பு.

"நட்புத் தேவை; அதை ஆராய்ந்துகொள்! தீயவர் உறவை நோயென விலக்கு! பெரியோரைத் துணைக் கொள்! பிறரோடும் அன்பாயிரு! மனைவியை மதி! மக்களைப் பெறு! அறிவை அடை! சொல்வதெல்லாம் நல்லதாக இருக்கட்டும்! செய்வதெல்லாம் திறமையாக இருக்கட்டும்! அறத்தின் வழி நின்று பொருளைத் தேடி இன்பத்தைப் பெறு! வீடு உண்டானால் அது உன்னைத் தேடி வரும்" என்பதே.

இவைதான் வள்ளுவருடைய கொள்கை. அதைத்தான் நீங்கள் திருக்குறளில் பார்க்க முடியும். இது எந்த நாட்டிற்கு, எந்த மக்களுக்கு, எந்த நிறத்தினருக்கு, எந்த மொழியினர்க்கு, எந்தச் சமயத்தினருக்கு வேறுபாடு உடையது? இராது! அவ்வளவு பெரிய உயர்ந்த கருத்துக்களைக் கொண்டவர் வள்ளுவர்.

– முத்தமிழ்க் காவலர்
**கி.ஆ.பெ.விசுவநாதம்**

# குறள்: கவிதையும் நீதியும்



குறைந்தது பத்து நூற்றாண்டுகளாகவாவது குறள் தமிழ்ச் சமூகத்தின் நீதியுணர்வின் சாரமாக இருந்து வந்துள்ளது. குறளுக்கு எழுதப்பட்ட புராதன உரைகள், குறள் குறித்த பாமாலைகள் என இதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. ஆயினும் அந்த இடம் அறிஞர் மத்தியில் தான் இருந்தது. கல்வி எல்லைக்குட்பட்டு வழங்கப்பட்ட சென்ற காலங்களில் அதுவே இயல்வதும் கூட.

பிற்பாடு மக்களாட்சியின் சாத்தியங்களினூடாகக் கல்வி பரவலாக்கப்பட்டபோது தமிழில் மிக அதிகமாக வெகுஜனமயமாக்கப்பட்ட பேரிலக்கியம் திருக்குறளேயாகும். திராவிட இயக்கங்கள் இதில் பெரும் பங்காற்றின என்பது ஒரு வரலாற்று உண்மை. இன்றும் குறள் தமிழகத்து மேடைகளில் மீண்டும் மீண்டும் பேசப்படுகிறது. தமிழ்க்கல்வியின் அடிப்படை நூல் அதுவே. வாழ்வின் ஒவ்வொரு உச்சத் தருணத்திலும் கணிசமான தமிழ் மனங்கள் குறளைத் தொட்டு மீள்வதை எப்போதும் கவனித்து வருகிறேன். என்னைப் பொறுத்தவரை என் நீதியுணர்வு குறளுடன் இரண்டறக் கலந்தது. என்னால் குறளாசிரியன் மீது என் இலக்கிய ஞானத்தையோ, பகுத்தறிவையோ ஒருபோதும் செலுத்த முடியாது என்பதிலும் அவரை என் மனதில் இறைவனின் பீடத்தில் அமரச் செய்திருக்கிறேன் என்பதிலும் எனக்கு எவ்விதமான கூச்சமும் இல்லை.

ஆனால் குறளை நாம் இன்று புரிந்து கொள்வதில் சில மேலதிக விளக்கங்கள் தேவை. குறள் எழுதப்பட்ட காலத்தில் கவிதையே அறிவுலகின் இயல்பான தொடர்பு முறையாக இருந்தது. மருத்துவ நூல்களும், சிற்ப நூல்களும், இலக்கண நூல்களும் கவிதைக்குரிய யாப்பு வடிவில் எழுதப்பட்டன. அவற்றில் கவிதைக்குரிய அணிகளும் பயன்படுத்தப்பட்டன. அச்செய்யுட்களில் ஆங்காங்கே மேலான கவித்துவம் மிளிர்வதையும் காணலாம். ஆகவே கவிதையா நீதியா என்ற அடிப்படை வினா அன்று எழ வாய்ப்பில்லை. குறள் ஒரு பேரிலக்கியப் படைப்பாகவும் நீதி நூலாகவும் ஒரேசமயம் கருதப்பட்டது. பிற்பாடு குறள் நவீன சுதந்திர ஜனநாயகச் சூழலில் மறு கண்டுபிடிப்பு செய்யப்பட்டபோது, ஒரு நீதி நூலாக — ஆங்காங்கே கவிதைத் தன்மையும் கொண்ட ஒன்றாக மட்டுமே உணரப்பட்டது. அவ்வாறே அது இன்றும் கற்பிக்கப்படுகிறது, வலியுறுத்தப்படுகிறது. தமிழ்ச் சூழலில் அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அதற்கான அவசியம் இருந்திருக்கலாம். ஆனால் ஓர் உயர்தளத்தில் கவிதையா நீதியா என்ற பாகுபாட்டைத் துல்லியமாக நிகழ்த்திக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது என்று படுகிறது.


திருக்குறள் ஒரு பெரும் நீதிநூலாக இன்று கருதப்படுவதன் மூலமாக அதன் வசிப்பின் ஓரிரு சாத்தியங்கள் மட்டுமே கண்டடையப்படுகின்றன என்பதே முதல் பிரச்சினையாகும். உதாரணமாக 'குழலினிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்ற அற்புதமான கவிதை இதில் 'உள்ளடங்கிய' நீதி எது என்ற வினாவுடன்

■ **ஜெயமோகன்**



படிக்கப்படுகையில், அவ்வரிகளில் உள்ள முடிவற்ற வாசல்கள் ஒவ்வொன்றாக மூடி இறுகிவிடுகின்றன. இவ்வரிகளைப் பற்றி ஒருமுறை பேசநேர்கையில் (நாராயண குருவின் மூன்றாம் தலைமுறை மாணவரான) நித்யசைதன்ய யதி 'உதடுகளால் முத்தமிட்டு அறியப்படும் குழலும் விரல்களால் தொட்டு தடவியறியப்படும் யாழும் என குழந்தையை அறியும் பேரனுபவம்' என்று குறிப்பிட்டார். குறள்பாக்களில் கணிசமானவை இவ்வாறு அதிதூய கவித்துவ நிலையில் தான் உள்ளன. நீதி என்று இவற்றை எடுத்துக்கொள்ளும்போது மிகச் சர்வ சாதாரணமான ஒரு லௌகீக உண்மை – அல்லது அனுபவம் – மட்டுமே நம்மை வந்து சேர்கிறது மட்டுமல்ல, எளிய உலகியலை அனைத்திற்கும் மேலாக முன்வைத்து வலியுறுத்துவதாக அவை தோற்றம் தரக்கூடும். தம் மக்கள் சிறு கையால் அளாவிய அந்தக் கூழ் தந்தையின் நெகிழ்ந்த மனம் ஆக மாறி படிமமாவதன் அனுபவத்தை அப்போது நாம் இழக்க நேரிடும்.

இரண்டாவது சிக்கல் நீதியின் கவிதையும் கவிதையின் நீதியும் முற்றிலும் வேறுவேறானவை என்பதே. குறள் ஆய்ந்து தெளிந்த நீதியை முன்வைக்கவும், விளக்கவும் கவிதைக்குரிய கூறுமுறைகளை எடுத்தாள்கிறது என்பதே பரவலாகக் கூறப்படும் தரப்பாக உள்ளது. அதாவது, அதிலுள்ள கவிதையானது நீதியை விளக்கும் நோக்கத்துடன் அடையப் பெற்ற ஒன்று மட்டுமே என்று கூறப்படுகிறது. அந்த நீதியை அடையும் விதம் கவிதைக்கு அப்பால் வாழ்வனுபவம் தந்த விவேகத்தாலோ, தத்துவ சிந்தனை தந்த தெளிவினாலோ தான் தீர்மானிக்கப்படுகிறது என்பது இக்கருத்தின் விரிவாக்கம். ஆனால் குறளின் கவித்துவத் தினூடாகப்பயணம் செய்கையில் நீதியை விட கவித்துவம் சாராம்சமாகத் தோற்றம் தருவதை மீண்டும் மீண்டும் நாம் காண்கிறோம். குறளின் நீதிதரிசனங்கள் எல்லாம் கவிதை மூலம் அறியப்பட்டதாகவே உள்ளன. 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக உலகியற்றியான்'. இது நீதியா, கவிதையின் நீதியெழுச்சியா? மிக அடிப்படையானது இக்கேள்வி. குறளின் நீதியை அடையும் மெய்காண் முறையாகக் கவிதை என்ற தீவிரமான மன இயக்கமும் அமைந்துள்ளது என்பதை விரிவாக உதாரணங்கள் தந்து நிறுவலாம். உதா'ரணம்: 'அறத்தாறிதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தானிடை'. அனுபவ விவேகமோ, குலமரபின் அறத்தரினமோ, தத்துவச் சிந்தனையின் தருக்கத் தெளிவோ நீதியை வழிநடத்துகையில் உருவாகும் தரிசனங்களுக்கும்,





கவித்துவ எழுச்சி வழிநடத்துகையில் உருவாகும் தரிசனங்களுக்கும், அடிப்படையான சில வித்தியாசங்கள் உள்ளன.அவற்றைத் தோராயமாக வகுத்துக்கொள்வது இவ்விவாதத்திற்குத் துணையாகும்.

அடிப்படையில் நீதி என்பது என்ன? அது எதற்காக மானுடனுக்குத் தேவைப்படுகிறது? மனிதனை ஒரு சமூக விலங்கு என்று எடுத்துக் கொண்டால் அவனுடைய வாழ்வை உள்ளுணர்வும், பரிணாமம் மூலம் உருவாகிப் படிந்த பழக்க வழக்கங்களும்தான் தீர்மானித்து வந்துள்ளன. ஒரு கட்டத்தில் அவனுக்குத் தன்னையும் தன்னைச் சார்ந்த பிறரையும் குறித்த பிரக்ஞை உருவானபோது தனக்கும் பிறருக்குமான பொதுவான நடைமுறை விதிகளை உருவாக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. முதல் நீதி பிறந்தது. நீதி என்பது அடிப்படையில் பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு சமூக ஒப்பந்தம். அந்த ஒப்பந்தம் சமூக வன்முறையினால் — தண்டனையினால் — மட்டுமே நிலைநிறுத்தப் பட்டிருக்க முடியும். இன்றும் பழங்குடிச் சமூகங்களிலேயே தண்டனைகள் தளர்வில்லாத மூர்க்கத்துடன் நடைமுறைப்படுத்தப் படுகின்றன என்பதைக் காணலாம். இந்தச் சமூக ஒப்பந்தங்கள் நம்பிக்கைகளாக மாற்றப்பட்டன. சடங்குகளாகவும் மரபுகளாகவும் உருவம் கொண்டன. இக்கால கட்டங்களில் எங்கும் 'நீதி' என்ற தனியான அமைப்பு தேவையாக இருக்கவில்லை. பழங்குடி' சமூகங்கள் எதிலும் அனேகமாக நீதிநூல்களே இல்லை. நாம் இன்றும் 'நடைமுறை நீதி' 'குலமரபு நீதி' ஆகிய பழங்குடி அமைப்புகளையே நமது அன்றாட வாழ்வின் இயக்கத்திற்குச் சார்ந்திருக்கிறோம் என்பதைக் கவனிக்கலாம். அப்படியானால் நீதி என்ற தனிக் கருதுகோளும் நீதி நூல் என்ற அமைப்பும் எப்போது உதயமாகின? தத்துவச் சிந்தனை உருவாகி வலுப்பெற்ற, பிறகுதான் என்று ஓரளவு கூறலாம். ஒவ்வொன்றையும் நடைமுறைத் தளத்திலிருந்து பிரித்து மிகப் பொதுவான தளத்திற்கு எடுத்துச்சென்று தூயதருக்க நிலையில் நிறுத்தி யோசிக்கும் செயல்பாட்டையே நாம் தத்துவச்சிந்தனை என்கிறோம். இப்படிப்பட்ட ஒரே சிந்தனை முறை சங்க காலத்தில் இருந்தது என்பதற்கான தடயங்கள் இலக்கியத்தில் இல்லை. வாழ்வின் நேரடியான கவித்துவ வெளிப்பாடும், அக்கவிதையைப் பொதுவாக நிர்ணயித்துக் கொள்ளும் இலக்கண விதிகளும் மட்டுமே அப்போது காணக் கிடைக்கின்றன. அப்போது நீதி குலமுறை சார்ந்த ஒன்றாகவே பெரிதும் இருந்திருக்கக் கூடும். தத்துவச்சிந்தனையின் ஊற்றுமுகங்கள் இருந்திருக்கக் கூடும். தத்துவம் எப்போதும் பெரிய அமைப்புகளைச் சார்ந்து, அவற்றின் தேவையினால் நெருக்கப்பட்டு உருவாவது என்பதற்கு ஆதாரமுள்ளது. வரலாற்றில் எப்போதும் பெரும் தரிசனங்கள் (அதாவது மதங்கள்) பேரரசுகள் ஆகியவற்றுடன் இணைந்தே தத்துவச் சிந்தனையின் வளர்ச்சியும் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. தமிழ் வரலாற்றுப் பரப்பில் பௌத்த, சமண மதங்களின் வருகை மிக முக்கியமானது. அதற்கு முன்பு இங்கு இருந்தவை மத நம்பிக்கைகள் அல்லது வழிபாட்டு முறைகள் மட்டுமே. ஒருங்கிணைவுள்ள மையத் தரிசனம், ஒருங்கிணைவுள்ள வழிபாட்டுமுறை ஆகிய இரண்டு தளங்களும் இணைகையில்தான் மதங்கள் உருவாகின்றன. பிற்பாடு சைவ, வைணவ மதங்களாக வளர்ந்த தரிசனங்கள் எளிய வழிபாட்டு முறைகள் தமிழ் மரபில் முன்பே இருந்தன எனினும் தமிழகத்தின் முதற்கட்ட மதங்கள் பௌத்தமும் சமணமுமேயாகும்.


ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் இருந்துவரும் வழிபாட்டுமுறை ஒன்று மதமாக மாறுவது, அது பிற வழிபாட்டு முறைகளுடன் உரையாடவும், வெல்லவும், தன்னுடன் இணைத்துக்கொண்டு தன் எல்லைகளை விரிவுபடுத்தவும் முயலும்போது தான். ஆக, பெரும் 'தொகுப்புச் செயல்பாடு' ஒன்றின் மூலமே ஒரு வழிபாட்டு முறை மதமாக ஆகிறது. இத்தொகுப்புச் செயல்பாட்டை நாம் 'மத உருவாக்கம்' என்று பொதுவாக விவாதங்களில் குறிப்பிடுகிறோம். எதனடிப்படையில் பல்வேறு வாழ்க்கைக் கூறுகள் ஒன்று சேர்க்கப்படுகின்றன? அந்த மதத்தின் மையத் தரிசனத்தின் அடிப்படையில்.



ஆனால், அத்தரிசனம் தன் தொகுப்புச் செயல் பாட்டின் போக்கில் படிப்படியாக விரிவும் உட்சிக்கலும் அடையும். சமரசம் செய்து கொள்ளும் இந்த வளர் சிதை மாற்றத்திற்கு விரிவான விவாதக் களம் ஒன்று தேவை. அதன் பொருட்டு மதம் தத்துவப் பரப்பு ஒன்றைத் திரட்டி எடுக்கிறது. அத்தத்துவப் பரப்பின் தீவிரமான இயக்கம் மூலம் பல்வேறு வாழ்க்கைக் கூறுகள் இணைந்து பொதுவான வாழ்க்கைத் தரிசனம் ஒன்று உருவாகும்போது, அதன் தொடர்ச்சியாகப் பேரரசுகள் உருவாகின்றன. அவை பல்வேறு சிறுசிறு அரசுகளின் தொகுப்பு மூலமே திரண்டு வருகின்றன. இது ஒரு விவாத உருவகம் மட்டுமே. ஒரு வேளை இந்த இயங்கு முறையில் நேர்மாறான போக்குகளும் இருக்கலாம். பெரிய மதம், ஒருங்கிணையும் தத்துவப் பார்வை, பேரரசு மூன்றும் ஒரே சமயம் ஒன்றையொன்று பயன்படுத்திக் கொண்டு வளரும் மூன்று சக்திகள் என்று மட்டும் குறைந்தபட்சம் உறுதியாகக் கூறமுடியும்.

தமிழ்ச்சூழலை எடுத்துக் கொண்டால் பண்டைத் தமிழ் மரபின், பெரிதும் பழங்குடித்தன்மை கொண்ட, வாழ்வுக் கூறுகளை பௌத்தமும், சமணமும் சந்தித்த போதுதான் தத்துவப் பிரச்சினைகள் எழுந்தன. இரு பெரும் காப்பியங்களிலும் நாம் காண்பது விரிவான, ஓய்வற்ற, தத்துவப் போராட்டத்தையே. தமிழ் மரபின் வழிபாட்டு முறைகளை (பத்தினி வழிபாடு முக்கியமாக) பௌத்தம் தன் மையத் தரிசனத்தின் சரடில் கோப்பதன் சித்திரத்தையே இக்காப்பியங்கள் தருகின்றன. அதாவது 'குலமரபு நீதி' என்பது தத்துவ விவாதத்தினூடாகப் 'பொதுநீதி'யாக மாறும் காலகட்டம் இது. சடங்குமுறை, குலமரபு, நம்பிக்கை ஆகிய நடைமுறைத் தளத்திலிருந்து நீதி மேலெழுந்து பொதுவான ரீதியாகத் தொகுக்கப்பட்டதே இக்காலகட்டத்தின் சாதனை. அதற்கேற்ப 'அறம்' என்ற சொல்லில் வந்த மாறுதலை (அல்லது குடியேறிய கனத்தை) நாம் கூர்ந்து பார்க்கவேண்டும். இல்லறம், துறவறம், அறம் X மறம் முதலிய சொற்களில் வரும் அறமல்ல அரசியல் பிழைத்தாருக்குக் கூற்றாகப் பேருருவம் கொள்ளும் அறம்.

இவ்வாறு நீதி புறவயமாக ஆன பிறகுதான் நீதிநூல்கள் எழுதப்பட்டன. அவ்வாறு 'எழுதப்படுவதன்' அவசியத்தை இங்கு கவனிக்கவேண்டும். சான்றோர், அறவோர் மத்தியில் ஒரு பொதுப் புரிதலாக அது இருந்தால் போதுமானதல்ல என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. எழுதப்படுகையில் அது கால, இட எல்லைகளைத் தாண்டுகிறது. எல்லாருக்கும் உரியதாக ஆகிறது. பேரரசுகள் உருவானதால் நீதி பொதுமையாக்கப்பட்டதா, அல்ல நீதி பொதுமையானதாக மாறியதன் விளைவாகப் பேரரசுகள் உருவாயினவா என்பது ஓர் அடிப்படை வினா. விரிவாக வரலாற்றை முன்வைத்து எழுப்பிக் கொள்ள வேண்டிய ஒன்று அது.



காப்பிய காலகட்டத்தைத் தொடர்ந்து நீதிநூல்களின் காலகட்டம் உருவானதன் நியாயம் இது. மிகப்பெரிய அளவில் இக்காலகட்டத்தில் நீதிநூல்கள் எழுதிக் குவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் காலவெள்ளத்தைத் தாண்டியும் ஏராளமான நூல்கள் கிடைப்பதை வைத்து ஊகிக்கலாம்.

இக் காலகட்டத்தின் தலையாய படைப்பு குறளேயாகும். ஆனால் குறள் இவற்றில் ஒன்று மட்டுமல்ல. ஏனெனில் அது வெறும் நீதிநூல் அல்ல.

பெரும் தத்துவ விவாதத்திற்குப் பிறகு, திரண்டு வந்த பொதுநீதியைச் சுருக்கமாகவும் அனைவருக்கும் பொதுவாகவும் முன் வைப்பதையே பொதுவாக நீதிநூல்கள் செய்கின்றன. அவை முன்வைக்கும் நீதி உடனடியாக சமூக நடைமுறையாக மாற்றப்பட வேண்டியது. எனவே அவற்றின் குரல் திட்டவட்டமானதாக, சமரசங்களுக்கான வாய்ப்புகளற்றதாக இருக்கும். அவற்றின் ஒரு நுனி பழங்குடிகளின் நீதியில் வேரூன்றி யிருக்கும். மறுநுனி விரிந்து பரவும் கிளைகளுடன் எதிர்கால நீதியைத் தேடிக் கொண்டிருக்கும். முற்றிலும் நடைமுறை சார்ந்த ஒரு நீதிநூல் வெறும் ஆச்சாரத் தொகுப்பாக மாறி, காலத்தில் பொருளிழந்து போகும். முற்றிலும் இலட்சியவாதம் சார்ந்த ஒரு நீதிநூல் வெற்றுக் கனவாக அந்தரத்தில் நின்றுகொண்டிருக்கும். எல்லா நீதிநூல்களும் இவ்விரு புள்ளிகளின் நடுவே நின்று கொண்டிருப்பதையே நாம் இன்று காண்கிறோம். 'அர்த்த சாஸ்திரமும்', 'மனுநீதி சாஸ்திரமும்', 'ஆசாரக் கோவையும்' நடைமுறை வாதம் சார்ந்த எல்லையில் நிற்கின்றன. குறள் நேர் எதிர் திசையில், இலட்சியக்கனவின் அருகாமையில் நின்றுகொண்டிருக்கிறது. இந்த அம்சமே குறளைக் கவிதை நோக்கி நகர்த்தி, அதை நீதிநூல் என்ற அடையாளத்தை மீறி ஒரு பேரிலக்கியமாக மாற்றுகிறது.

தத்துவம் எவ்வாறு தருக்கத்தைத் தனது அறிதல் முறையாகக் கொண்டிருக்கிறதோ, அவ்வாறு இலக்கியம் தனது அறிதல் முறையாகக் கற்பனையைக் கொண்டிருக்கிறது. தருக்க ரீதியான அறிதல்முறை தொகுத்தல் பகுத்தல் ஆகிய செயல்பாடுகளினூடாக சமரசப் புள்ளிகளைக் கண்டடைந்து அப்புள்ளிகள் இணைந்து உருவாகும் கோடு வழியாக முன்னகர்கிறது. மாறாக, கற்பனை ஒவ்வொரு புள்ளியிலிருந்தும் அதன் அதிகபட்ச சாத்தியங்களைக் கண்டடைய முயல்கிறது. 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!' என்பது தருக்கபூர்வமாக அடைந்த தரிசனமல்ல. உச்சகட்ட மனஎழுச்சியில் உருவான தரிசனம். தத்துவத் தில் அது ஓர் எளிய மன எழுச்சி என்பதற்கு மேல் அர்த்தப் _ படுவதில்லை. இலக்கியத்தில் அது நூற் றாண்டுகளை அதிரவைக்கும் மானுடப் பெரும் தரிசனம். குறளின் இயங்குமுறை பெரிதும் இலக்கியம் சார்ந்ததாகவே உள்ளது. ஒரு வாழ்க்கைச் சந்தர்ப்பத்தை எடுத்துக்கொண்டு எது அதன் சாராம்சமான நெறி என்று வகுத்துக்கூற அது பெரும்பாலும் முயல்வதில்லை. மாறாக, அவ்வாழ்க்கைச் சந்தர்ப்பத்திலிருந்து கற்பனையின் மின்னலால் தூரங்களில் பளீரிட்டுப் பாய்ந்து சாத்தியமான அதிகபட்ச தூரத்தைக் கடந்து செல்கிறது. 'அன்பிலார் எல்லாம் தமக்குரியர், அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்பது ஒரு நீதியே அல்ல. அது ஒரு பெரும் கனவு. மானுடத்தை இன்றுவரை தூண்டிவரும் பெரும் இலட்சியங்களுள் ஒன்று. இந்த அம்சமே குறளைப் பேரிலக்கியமாக ஆக்குகிறது.



ஒரு பேரிலக்கியத்தை வாசிப்பதற்கும் ஒரு நீதிநூலை வாசிப்பதற்கும் இடையேயான வித்தியாசம் மிக முக்கியமானது. அதுவே இப் பாகுபாட்டைத் துல்லியமாக நிகழ்த்திக் கொள்ள நம்மை வலியுறுத்துவது. ஒரு நீதிநூலை அதன் மிகச் சிறந்ததும், மிகப் பொருத்தமானதுமான அர்த்தம் என்ன என்ற கோணத்திலேயே நாம் அணுகுகிறோம். அதில் மாற்று வாசிப்புகளுக்கு இடம்தருவது பல சமயம் நீதியை நம் வசதிக்கேற்ப விளக்கம் தந்துகொள்வதாகவே அமையும். அதாவது நீதிநூல் அடிப்படையில் ஒரு தத்துவ நூலேயாகும். அதில் உள்ள இலக்கிய உத்திகளைக் கூட ஒரு தத்துவ நூலின் எல்லைக்குட்பட்டே நாம் அணுகவேண்டும். உதாரணமாக, அதில் உள்ள உவமைகளை பதிலி பிம்பங்களாக (அலிகரி) மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும். திட்டவட்டமான ஒரு பொருளை மேலும் துல்லியமாக விளக்கும் பொருட்டு தரப்பட்ட உதாரணங்கள் மட்டுமே அவை. மாறாக இலக்கியப்படைப்பு நம்மை எந்த அளவு கற்பனை செய்யவைக்கிறது



என்பதன் அடிப்படையிலேயே மதிப்பிடப்படுகிறது. மிக அதிகமான வாசிப்புச் சாத்தியங்களையே அதன் இலக்கியப் பண்பாக நாம் கருதுகிறோம். அது எதையும் திட்டவட்டமாக நம்மில் நட்டு விடுவதில்லை. கற்பனையின் நீரை நம் அந்தரங்கத்தில் பெய்வதனூடாக அது நமது விதைகளை முளைத்தெழச் செய்கிறது. ஓர் இலக்கியப் படைப்பிடம் ஒருபோதும் கேட்கக் கூடாத கேள்வி 'இதன் திரண்ட கருத்து யாது?' என்பதேயாகும். ஏனெனில் அக்கேள்வி இலக்கியப் படைப்பின் விரிந்து செல்லும் சாத்தியங்களையெல்லாம் குறுக்கி ஒரு புள்ளியில் அதை முளையடித்துக் கட்டிவிட வழிவகுக்கும். அவ்வாறு 'திரண்டு வந்த' கருத்து அவ்வாசகன் அவ்வாசிப்புத் தருணத்தில் அடைந்தது மட்டுமேயாகும். அவ்வாசிப்பே அப்படைப்பு என்பது ஓர் அழகிய பெண்ணைப் புகைப்படம் எடுத்து வைத்துக்கொண்டு அவளைக் கொன்றுவிடுவதற்கு நிகராகும்.

ஓர் இலக்கியப் படைப்பில் உள்ள அத்தனை அணிகளும் வாசிப்பின் சாத்தியங்களை முடிவின்றி பெருக்கும் பொருட்டு உருவானவையேயாகும். நவீன கவிதையியல் இவற்றைப் படிமங்கள் (Poetic images) என்ற பொதுச் சொல்லால் குறிப்பிடுகிறது. ஒரு படிமம் எதையும் குறித்து நிற்பதல்ல. அது ஓர் மன எழுச்சியின் அல்லது ஒரு குறிப்பிட்ட வகை அறிதலின் சாரமானது ஒரு புறப்பொருளில் பிரதிபலிப்பது மட்டுமேயாகும். அது தரும் அர்த்தங்கள் அனைத்துமே அதற்குரியவைதான். ஆனால், எந்த அர்த்தமும் அதற்குரிய விளக்கமல்ல.

குறள் மீதான இன்றைய வாசிப்பு அதை ஓர் இலக்கியப் படைப்பாகக் கண்டு, அதன் கவிதைகளின் முடிவற்ற வாசிப்புச் சாத்தியங்களினூடாக கற்பனையை விரித்து முன்னகர்வதாக அமையவேண்டியது அவசியம். குறளை ஒரு நீதிநூல் என்று வரையறுத்து விடுவதே இவ்வகை வாசிப்பின் பெரிய தடை. அதாவது வேறு சொற்களில் சொல்லப் போனால் இன்று ஒரு புதுக்கவிதை எவ்வாறு வாசிக்கப்படுகிறதோ, அவ்வாறே குறளும் வாசிக்கப்படவேண்டும். உதாரணம், 'வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு' என்ற குறள் மரபான வாசிப்பில் இரண்டாவது பகுதிக்கு, அதாவது நீதிக்கு, மேலதிக அழுத்தம் தந்து வாசிக்கப்பட்டு வந்தது. அந்த நீதியைச் சற்று தெளிவுபடுத்தும் ஓர் உருவகமாக முதல் வரி கொள்ளப்பட்டு வந்தது. ஆனால், ஒரு நவீன வாசிப்பு வெள்ளத்தை உள்ளமெனக் கொள்ளும்போது சரசரவென்று பிம்பங்களை உருவாக்கி அடுக்கியபடியே செல்லும். வெள்ளத்தின் அலை, ஆழம், அதில் பிரதிபலிக்கும் நிழற்கோலங்கள், அதில் ஊடுருவும் ஒளி, அதன் அடிப்பரப்பு, அங்கு வேர்விட்டு எழும் மலர். அந்த மலர் எது என்ற வினா மேலும் அதிகக்கவிதைக் கனவுகளுக்கு அவ்வாசகனை இட்டுச் செல்லும். உள்ளத்தின் அடியாழத்துச் சேற்றில் வேர்கொண்டு, அதன் அலைமேல் ததும்பி நின்றாடி, விண்நோக்கி மலர்ந்து, ஒளி உண்டு, மிளிரும் அம்மலர் அவன் மனதிலும் அப்போது மலரக்கூடும். அதுவே கவிதையனுபவம் என்பது.

தமிழ்ப் புதுக்கவிதைக்கு அரைநூற்றாண்டு வயதாகிவிட்டது. அதன் பிரபலமான போக்கு இன்றும் அனைவரும் அறிந்த கருத்துக்களுக்கு அனைவரும் அறியச் சாத்தியமான உவமையணிகளை உருவாக்குவதிலேயே ஈடுபட்டுள்ளது. ஆனால் 'எழுத்து' இதழில் தொடங்கி, சிற்றிதழ்களினூடாக வளர்ந்து, இன்று மைய இடத்தைப் பிடித்துள்ள புதுக்கவிதையின் உண்மையான மரபுச் சொற்களையல்ல, சொற்களின் இடையே தேங்கும் மௌனத்தையே புதுக்கவிதை வாசகன் வாசிக்கவேண்டும் என்று ஏறத்தாழ நிறுவிவிட்டது. புதுக்கவிதையை வாசித்து விரித்தெடுக்கும் கணிசமான வாசகர்கள் இன்று தமிழில் உருவாகியும் விட்டார்கள். ஆனால் அவர்களுடைய கவனம் இன்னமும் குறள் மீது விழவில்லை. காரணம் அதன் மீது சுமத்தப்பட்டுள்ள நீதி நூல் என்ற முத்திரையேயாகும். அந்த எல்லையைத் தாண்டி நவயுகத்தின் புதிய புதிய வாசிப்புகளுக்குத் தமிழின் இப்பேரிலக்கியத்தை ஆளாக்க வேண்டிய அவசியம் இன்று உள்ளது. ●



# வள்ளுவர் செய்த புதுமையும் புரட்சியும்

தமிழண்ணல்



திருவள்ளுவரின் சமகாலப் பின்புலமும் சங்க காலத் தமிழகச் சூழ்நிலையும் தெரிந்தால்தான், வள்ளுவர் புதுமை மட்டும் படைத்தாரல்லர்; புரட்சியும் செய்தாரென்பது விளங்கும். மேலும் திருக்குறளை, 'தோள் கண்டார் தோளே கண்டார், தொடுகழற் கமலமன்ன தாள்கண்டார் தாளே கண்டார்' என்றாற்போலப் பகுதி பகுதியாகப் படித்தவர்களைவிட, முழுவதும் பயின்றவர்களாலேதான், அதன் நீரோட்டம் போன்ற உயிரோட்டமான கருத்து உணரப்படும்.

ஒரு செவிவழிச் செய்தியுண்டு. மதுரையில் திருவள்ளுவர் குறளை அரங்கேற்றியது பற்றிய கதைகள் அவை. பொற்றாமரைக் குளத்தில்,



திருக்குறள் ஏடுகளைப் போட, அவை மிதந்துவந்து பொன் தாமரையில் அமர்வதைக் காட்டி, ஔவையார் குறளை ஏற்குமாறு, சங்கப் புலவர்களைச் சம்மதிக்க வைத்தார் என்பது ஒரு கதை. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில், சங்கப் பலகை ஒன்று இருந்ததாம். அது தகுதிவாய்ந்த புலவர் வந்தால்தான், சற்றே நீண்டு அவர் அமர இடம் கொடுக்குமாம். திருவள்ளுவர்க்கு அது இடம் கொடுக்காது காலம் தாழ்த்தபோது, ஓர் 'அசரீரி' – வான்வழியாக ஒலித்ததாம். அத் தெய்வக் குரலைக் கேட்ட பிறகுதான், வள்ளுவர்க்குச் சங்கப் பலகையில் இடம் கிடைத்ததாம்!

இதில் ஓர் அடிப்படை உண்மை இருப்பதை மறுக்கமுடியாது. திருவள்ளுவர் எளிதாகச் சங்கப் புலவர்களால் ஏற்கப்படவில்லை; திருக்குறளும் எளிதாக அரங்கேற்றப் பட வில்லை. அதற்குக் காரணம் அவர் கூறியுள்ள புதுமைக் கருத்துக்களும் புரட்சிச் சிந்தனை களுமேயாகும்.

அவர் காலத்தே நிறுவனச் சமயங்கள் கிளைத்துப் பல்கியிருந்தன. வைதிகம், சமணம், பௌத்தம் என்பன தலைமை வாய்ந்தவை. தமிழ்ப் பண்பாட்டுவழி அரும்பிய சிவனியமும் மாலியமும் (சைவ, வைணவம்) தனித் தன்மையுடன் விளங்கின. திருவள்ளுவர் இவற்றிலுள்ள நல்ல கருத்துக்களை ஏற்றுக் கொண்டாரே தவிர, எதனுடனும் சார்ந்து தம்மை அடையாளப் படுத்திக்கொள்ளவில்லை. தாமே தமக்கென்று ஒரு புதிய சமயத்தைப் படைத்துக்கொள்ளவும் விரும்பவில்லை. 'சமயக் கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறிப் பொருளிது என்ற வள்ளுவன்' எனக் கல்லாடர் கூறுவதுதான், பொருத்தமான மதிப்புரையாகும். இதனால் திருவள்ளுவர் யாருடைய ஆதரவுமின்றித் தனித்து நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும்.

சிவநெறி, மால்நெறி இவற்றுடன் திருக் குறள் நெருங்கிய கருத்துத் தொடர்புடன் விளங்குகிறது. சிவநெறி கூறும் வினைக் கோட்பாடும், இல்லற நெறிகளும் குறள் நூலுக்குப் பொருந்தி வருகின்றன. இவற்றுக்குக் காரணம், இவை யாவும் தமிழ்ப் பண்பாட்டில் முகிழ்த்தவையாய் இருப்பதேயாம்.

## இறை வாழ்த்து

திருவள்ளுவர் பண்புருவமான இறை வனைக் காட்டி, அவனைத் தொழுவதன் மூலம் உயிர்களும் அப்பண்புடையனவாக ஆதல் வேண்டுமென்பது புதிய பார்வையாகும். வாலறிவனைத் தொழுவது, தாமும் அத் தூய அறிவைப் பெறுவதற்கேயாம். அவ்வாறன்றிக் கற்பது மட்டும் போதாது. கல்வியால் காரறிவும், புல்லறிவும் கூட வளர வாய்ப்புண்டு. தனக்குவமை இல்லாத இறைவன், மனக் கவலையற்றவன். அவனைச் சேர்ந்தாலன்றி, நாம் நம் மனக் கவலைகளை மாற்ற இயலாது. சேர்தல், இடைவிடாது நினைத்தல் என்பார் பரிமேலழகர். அதுதான் மன ஓர்மை, தியானம் என்பது. இங்ஙனம் பண்பின் திருவுருவமாக இறைவனைக் காட்டி, அப்பண்புருவகத்தையே இடைவிடாது நினைத்து, உயிர்கள் தாமும் அவற்றை அடையவேண்டுமென்பது, பகுத்தறிவுக்கும் ஒத்து வரும் இறை வழிபாடாகும். திருவள்ளுவர் முதல் அதிகாரத்தில் செய்துள்ள புதுமையே, மிகப்பெரிய மெய்யியல் தத்துவமாகத் தனிநூலில் விரிக்கத்தக்க, புதியதொரு இறைக் கோட்பாடாகும்.

## ஒழுக்கம் தவறாத நீத்தார்

நீத்தார் பெருமை, துறவு அதிகாரங்களில் குடும்பத்தை விடுதல், பெண்ணாசை தவிர்த்தல், பெண் ஒரு தளை எனல், காவி உடுத்தல், கமண்டலம் ஏந்துதல், காட்டிற்குப் போதல் என எதனையும் குறித்தாரல்லர். ஒழுக்கத்துடன் பண்பாளராய் வாழ்தலையே விளக்குகின்றார். 'பொய்தீர் ஒழுக்க நெறி' என்று முன்னே குறித்தார். பின்னர் 'கூடா ஒழுக்கம்' என்று, காவி உடைக்குள் மறைந்துகொண்டு கயவர் களாய் வாழ்வதைக் கண்டிக்கவேண்டிய மட்டும் கண்டித்தார். நீத்தாராய் வாழ்பவர்கள் உலகப்பற்றை நீத்தல் வேண்டும்; ஒழுக்கத்தில் தவறாதவராக வாழவேண்டும்; ஐம்புலன்



அடக்க வேண்டும்; செயற்கரியன செய்யவேண்டும்; எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக வேண்டும். இவை யாவும் நடத்தை பற்றியனவே. தந்நலம் நீத்தார், அறிவியலறிஞர்கள் வரலாற்றில் காண்பதுபோலச் செயற்கரிய கண்டுபிடிப்புகளுக்காக 'வாழ்க்கை வசதிகளைத் துறந்தார் யாவரும் நீத்தாராவரேயன்றி, புற வேடதாரிகளை மட்டும் நீத்தாரென ஒப்பத் திருக்குறள் இடந்தரவில்லை.

### இல்லறத்திற்குத் தலைமை

வட இந்தியச் சமயங்கள் அனைத்தும் இவ்வுலக வாழ்க்கையை வெறுப்பு நோக்கில் பார்க்க வைத்தன. துறவு, இல்லறம் என வரும்போது, துறவு நிலைகளுக்கே முதன்மையும் தலைமையும் தந்தன. இல்வாழ்வைக் கையுதறவும் பெண்ணை ஓர் ஆன்மா என்றுகூடக் கருதாது, பாவப் பிறப்பு எனக் கருத்துருவாக்கவுமே முயன்றன. இச் சூழலில், தமிழ்ப் பண்பாட்டு வழிவந்த திருவள்ளுவர், இல்லறத்திற்கே தலைமையும் முதன்மையும் தந்தார்; ஏனைய துறவு நிலைகட்கும் அந்நிலையில்





இயல்பாக வாழ்பவர்கட்கு இல்லறத்தாரே துணை என்றார்; இல்லறத்தில் வாழும் நெறிப்படி வாழ்பவர் வானுறையும் தெய்வத்திற்கு நிகராவர் என்றார். இந்தியச் சிந்தனை வளர்ச்சியில், இவ்வுலக வாழ்க்கையை, விருப்பு நோக்கில் பார்க்க வைத்தவர் திருவள்ளுவர் ஒருவரே எனச் செருமானியப் பேரறிஞர் ஆல்பர்ட்டு சுவைட்சர் கூறியுள்ளமை நினைவிற்கொள்ள வேண்டிய கருத்தாகும். 'அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே' என்பது, வள்ளுவரின் முடிந்த முடிவாகும்.

**இல்லறத்தின் தொடர்ச்சியே துறவு**

இல்லறமும் துறவறமும் சமயங்கள் கூறுவது போலத் தனித்தனி நிலைகள் அல்ல. இல்லறத்தின் தொடர்ச்சியே துறவு. இல்வாழ்வே இயற்கைக்குப் பொருந்திய வாழ்வு. அதில் காம இன்பம் துய்த்து, வேட்கை தீரப்பெற்ற ஒருவர், வாழ்க்கைப் பற்று முதலியன மனத்தளவில் நீங்கி, சிறந்தன, அரியன, பொது நலனுக்குரியன பலவும் செய்து வாழ்தலே துறவாகும்.

*'காமம் சான்ற கடைக்கோட் காலை*
*ஏமம் சான்ற மக்களொடு துவன்றி*
*அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*
*சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'*
*(1138)*

— என்று, தொல்காப்பியரும் துறவு, தவம் என்றெல்லாம் கூறாது, சிறந்தன யாவையும் செய்தலே வாழ்ந்து முடிந்ததன் பயனாகும் எனக் குறிப்பதுதான், வள்ளுவத்திலும் இடம் பெற்றுள்ளது.

சில அதிகார முதற் குறள்கள், அவ்வவ் அதிகாரத் தலைப்புக்கேற்ற இலக்கணம் அல்லது புதுவிளக்கம் கூறுவனவாக அமையக் காணலாம். இனியவை கூறல் முதற் குறளும் வாய்மை அதிகார முதலிரு குறள்களும் அவைபற்றிய இலக்கணம் கூறுதல் கருதத் தக்கது. அவைபோலவே, துறவு, தவம், வேள்வி மூன்றனுக்கும் திருவள்ளுவர் புது இலக்கணம் வகுக்கின்றார்.

**'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்'.**

**'உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற்கு உரு'.**

**'பரிந்துஓம்பிப் பற்றுஅற்றேம் என்பர் விருந்துஓம்பி**
**வேள்வி தலைப்படா தார்'.**

— சிறுகச் சிறுகப் பற்று விடுதலே துறவு. தனக்கு நேர்ந்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதலும் பிறவுயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமே தவம். விருந்தோம்பல் ஒரு வேள்வி. இவை யாவும், திருக்குறளை முழுமை நோக்கில் பார்த்து, அதன் கருத்து நீரோட்டத்துடன் இணைத்துப் பார்க்கத்தக்கன. அன்றைய பின்புலத்தில் இவை புதுமை மட்டுமன்றிப் புரட்சிகரமானவையுமாகும்.

**சங்க இலக்கியப் பின்புலத்தில் திருக்குறள்**

தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் பற்றிய தெளிந்த அறிவுடையவர்க்கே, திருக் குறளின் 'உள்ளொளி', தெள்ளிதிற் புலனாகும். இவண் ஒரேஒரு காட்டினைக் காட்டுதல் தகும். அதியமான் நெடுமான் அஞ்சி போர்க்குணம் மிக்கவன். போர் இல்லாதபோது, வீட்டின் இறப்பிலே செருகிவைத்த தீக்கடை கோல் போல, மிக அமைதியாக இருப்பான். போரென்று வந்துவிட்டால், அத் தீக்கடை கோல்களைச் சுழற்றியதும் தோன்றும் காட்டுத்தீயைப் போல வெளிப்பட்டுக் கூவிளரியும் நெருப்பாகத் தோன்றுவான். இவ்வாறு அஞ்சியின் வீரத்தை ஔவையார் புனைகின்றார்.

**'..... நெடுமான் அஞ்சி**
**இல்இறைச் செரீஇய ஞெலிகோல் போலத்**
**தோன்றா திருக்கவும் வல்லன்; மற்று அதன்**
**கான்றுபடு கனைஎரி போலத்**
**தோன்றவும் வல்லன்தான் தோன்றுங் காலே' (315)**



இறை — வீட்டு இறப்பு. தாழ்வாரம். செரீஇய — செருகிவைத்த. ஞெலிகோல் — தீக்கடை கோல். கான்று படு — காட்டில் தோன்றும். கனை எரி — கூவி எரியும் நெருப்பு. இப் பாடலில் அஞ்சி 'தோன்றாது இருக்கவும் வல்லவன், தோன்ற நேரின் கனை எரிபோலத் தோன்றவும் வல்லன்' என வரும் சொல், தொடர், கருத்தமைவு, ஒரு குறளை நமக்கு நினைவூட்டுகிறது.




**'தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று'**

என்ற குறளுக்கான விளக்கம், முன்னைய புறநானூற்றுப் பாடலடிகளில் கிடைக்கிறது. அதாவது ஒரு முயற்சியில், செயலில் ஈடுபட்டுத் தோன்றினால் புகழோடு தோன்றவேண்டும்; அத்திறமை இல்லாதார் தோன்றாதிருப்பதே நல்லது — ஒரு செயல் முயற்சியில் ஈடுபடாதிருப்பதே நல்லது.

புறநானூற்று ஔவை பாடலுக்கும் திருக்குறளுக்கும் நெருங்கிய ஒற்றுமை யிருப்பதைக் கூர்மையாய்ப் படித்துணர வேண்டும். 'பிறந்தால் புகழுக்கேற்ற குணத்தோடு பிறக்கவேண்டும்; அக் குணநலம் இல்லாதார் மக்களாய்ப் பிறந்ததைவிட, விலங்காய்ப் பிறந்திருக்கலாம்' என்பதும் 'பிறந்ததைவிடப் பிறவாமல் இருந்திருக்கலாம்' என்பதும் பழைய உரைகள். அவை தவறு என்பதைப் புறநானூற்று ஔவை பாடல் தெளிவுபடுத்துகிறது.

திருக்குறளின் உள்ளொளி இங்ஙனம் இயல்பாகவும் முழுமையாகவும் துலங்கவேண்டும். அங்ஙனம் நாம் விளங்கிக்கொண்டு, உலக மொழிகளில் தரவேண்டும்.

* * * * *



# திருவள்ளுவருக்கு கலைஞரின் திருப்பணிகள்

திருக்குறளின் பாதிப்பு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு இளமை காலம் முதலே இருந்து வந்திருக்கிறது. அவரது முதல் சொற்போர் பள்ளி பருவத்தில் 'நட்பு' என்ற பொருள் பற்றித்தான். இந்த தலைப்பே திருக்குறள் – 'நட்பு' என்னும் அதிகாரப் பெயரின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டதாகும்.

திருவள்ளுவருக்கும் திருக்குறளுக்கும் கலைஞர் அவர்கள் முன்னின்று செய்த சிறப்புகள் இங்கே பட்டியலிடப்பட்டுள்ளன.

திருமயிலையில் திருவள்ளுவர் சிலை

சென்னை மயிலாப்பூர் பகுதியில் தி.மு.கழகத்தின் பொறுப்பில் சென்னை மாநகராட்சி நிர்வாகம் வந்ததற்குப் பிறகு, வாழ்வுக்கு வழிவகுத்த தமிழ்த் தலைவன் – உலகப் பெரும்புலவன் – மக்களாட்சித் தத்துவம் உரைத்திட்ட மாமேதை – 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று பேசிய பகுத்தறிவுப் பகலவன் – 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றியான்!' என்று ஆண்டவனுக்கே அறைகூவல் விடுத்திட்ட புரட்சிப் பொறி, திருவள்ளுவருக்குச் சென்னை மயிலாப்பூரில் 2–6–1966 அன்று சிலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

பேருந்துகளில் திருக்குறள்

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967ஆம் ஆண்டில் ஆட்சியை உருவாக்கிய பொழுது பொதுப்பணி மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சராக கலைஞர் பொறுப்பு வகித்தபோது, தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பேருந்துகளிலெல்லாம் திருவள்ளுவரின் படத்தை அமைத்து, திருக்குறளையும் பொறிக்கச் செய்தார்.

சுற்றுலா மாளிகைகளில்
திருவள்ளுவர் படமும் திருக்குறளும்

அதுமட்டுமல்ல; தமிழ்நாட்டில் பொதுப்பணித் துறையைச் சேர்ந்த எல்லாச் சுற்றுலா மாளிகைகளிலும் – அரசாங்கச் சுற்றுலா மாளிகை – நகராட்சிப் பயணிகள் விடுதி போன்றவைகளில் எல்லாம் திருவள்ளுவரின் திருவுருவப் படத்தை வைக்கவேண்டு மென்றும், அதில் 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்ற குறள் எழுதி வைக்கப்பட்டது.

கடற்கரையில் திருவள்ளுவர் சிலை

இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாட்டையொட்டி 2–1–1968 அன்று, சென்னை கடற்கரையில் திருவள்ளுவர் சிலையை முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள், கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் திறந்துவைத்தார்.

திருக்குறள் ஆராய்ச்சி

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு மூன்று இலட்சமும், மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு மூன்று இலட்சமும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு மூன்று இலட்சமுமாக மொத்தம் ஒன்பது இலட்சம் ரூபாய் திருக்குறள் ஆராய்ச்சிக்காக அளிக்கப்பட்டது.

திருவள்ளுவர் திருநாள்

முதல்வர் கலைஞர் தலைமையில் திருவள்ளுவர் திருநாள் 30–10–1969 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவைத் தொடர்ந்து, ஆண்டுதோறும் பொங்கல் விழாக் கொண்டாடப்படும் நாளுக்கு அடுத்த நாள், 'திருவள்ளுவர் நாள்' என்றும், திருவள்ளுவர் நாள் விடுமுறை நாள் என்றும், 3–11–1969 அன்று அரசின் ஆணையாக வெளியிடப்பட்டது.

காவலர் பதக்கத்தில் திருவள்ளுவரின்
திருவுருவம்

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு, அவரது பிறந்த நாளில், காவல்துறையைச் சேர்ந்த திறமையானவர்களுக்கு முதல்வர் பதக்கமும், சிறந்த சேவைக்காகப் பொற்கிழியும், நற்சான்றிதழும் தரவேண்டும் என்று முடிவெடுத்து – அப்படி

வழங்கப்படும் பதக்கத்தில் திருவள்ளுவரின் திருவுருவம்தான் பொறிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்தவர் கலைஞர்.

திருவள்ளுவர் ஆண்டு

கலைஞர் முதலமைச்சராக இருந்தபொழுது 1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசின் நாட்குறிப்பிலும், 1972ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும், திருவள்ளுவர் ஆண்டு தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

திருவள்ளுவர் நினைவாலயம்

சென்னை – திருமயிலை திருவள்ளுவர் நினைவாலயம் திருப்பணிக்கான அடிக்கல் 27-4-1973 அன்று கலைஞர் அவர்களால் நாட்டப்பெற்று பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

வள்ளுவர் கோட்டம்

'ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கின்ற உலகத் தமிழ் மறையாம்' அந்தக் குறளோவியத்தின் கோட்டம் அதாவது வள்ளுவர் கோட்டம் வடிவமைக்கப்பட்டது. சென்னை நுங்கம்பாக்கத்தில் 5 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு 18-9-1974 அன்று திருவாரூர் தேர் வடிவில் அமைக்க முடிவு செய்து, முதல்வர் கலைஞர் அடிக்கல் நாட்டினார். திராவிடக் கட்டடக் கலாச்சாரத்தை அடிப்படையாக வைத்து "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்ற குறளுடன் தோரண வாயில் அழகிய வடிவில் அமைக்கப்பட்டது. இங்கிருந்து தலைவாயிலை அடையும் வரை உள்ள நடைபாதைக்கு இருபுறமும் பச்சைப் போர்வை விரித்தது போல் எழிலார்ந்த புல்வெளித் தோட்டம் அமைக்கப்பட்டது. அறம், பொருள், இன்பம் என்ற திருக்குறளின் 1330 பாக்களும் திறந்த புத்தக வடிவில் கலைவண்ண நயத்துடன் சலவைக் கற்களில் பொறிக்கப்பட்டன. திருவள்ளுவரைப் போற்றும் "திருவள்ளுவர் மாலை" பாக்களும் பொறிக்கப்பட்டன. கோட்டத்தின் மேல்தளமான வேயா மாடத்தின் வடக்குப்புறத்தில் சிற்பத் தேரின் கருவறையில் திருக்குறளின் முப்பாலைக் குறிக்கும் வகையில், மூன்று விரல்களை உயர்த்திய நிலையில் அழகிய பீடத்தில் ஒளிமிக்க கருங்கல்லினால் ஆகிய திருவள்ளுவர் சிலை உயிரோட்ட அழகோடு அமைக்கப்பட்டது.

தேர்ச்சக்கரத்திற்கும், திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பளிங்கு பீடத்திற்கும் இடையில் உள்ள தேரின் மத்திய பாகத்தில் 133 குறட்பாக்களுக்குப் பொருள் விளக்கம் அளிக்கும் அழகிய சிற்பங்கள் உயிரோவியங்களாய்ச் செதுக்கப்பட்டன.

தமிழ்நாடு இல்லத்தில் சிலை

புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் அரசின் சார்பில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு, அந்தச் சிலை 16-1-1976 அன்று திறந்துவைக்கப்பட்டது.

குறளோவியம்

ஒன்றுக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறட்பாக்களுக்கோ பதவுரை, விரிவுரை என்று எழுதிக்கொண்டிராமல், பலரும் விரும்பிப் படிக்கத்தக்க வண்ணம் அவர்களைக் கவர்ந்திழுத்துக் கருத்துக்களை நெஞ்சத்தில் பதிய வைத்திட வேண்டுமென்ற ஆசைத்துடிப்புத்தான், கலைஞர் அவர்கள் "குறளோவியம்" என்ற தலைப்பில் தொடர்ந்து எழுதிட வைத்ததாக அவரே குறிப்பிட்டுள்ளார். "குறளோவியம்" நூலில் முன்னூறு குறள்கள் இடம் பெற்றுள்ளன. பயன்படுத்தப்பட்டுள்ள குறட்பாக்கள் 354 ஆகும். அறத்துப்பாலில் 76 குறட்பாக்கள்; பொருட்பாலில் 137 குறட்பாக்கள்; இன்பத்துப்பாலில் 141 குறட்பாக்கள்.

திருவள்ளுவர் ஓவியம் தீட்டியவருக்கு உதவி


"குறளோவியம்" வெளியீட்டு விழா 17.2.1985 அன்று சென்னையில் நடைபெற்றபோது திருவள்ளுவருக்கு ஓவியம் தீட்டிய வேணுகோபால் சர்மாவை அந்த விழாவிற்கு அழைத்து, அவருக்கு நூலின் விற்பனையின் மூலம் கிடைத்த தொகையில் பத்தாயிரம் ரூபாய் கொண்ட பொற்கிழியை கலைஞர் அவர்கள் வழங்கினார்.

ஓவியர் திரு. வேணுகோபால் சர்மா அவர்கள் நோய்வாய்ப்பட்டுள்ளார் என்று ஓவியரின் புதல்வர் 24.5.1989 அன்று முதல்வர் கலைஞரை சந்தித்து விவரத்தைத் தெரிவித்தவுடன் முதலமைச்சர் நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாயை ஓவியருக்கு வழங்க உத்தரவிட்டார்.

வேணுகோபால் சர்மா அவர்கள் வரைந்த திருவள்ளுவர் திருவுருவப் படத்திற்கான உரிமையைத் தமிழக அரசு பெற்றுக்கொண்டு, அவரது குடும்பத்தாருக்கு 3 இலட்சம் ரூபாய் வழங்கும்" என்று கலைஞர் அறிவித்து, அதன் தொடர்ச்சியாக, 1990 ஏப்ரல் 7 ஆம் தேதியன்று தலைமைச் செயலகத்தில் ஓவியரின் குடும்பத்தாருக்கு மூன்று இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

திருக்குறள் உரை

354 குறட்பாக்களைக் கொண்டு குறளோவியம் எழுதி முடித்தபிறகு, 1330 குறட்பாக்களுக்கும் உரையெழுத வேண்டுமென்ற ஆர்வத்துடிப்பு கலைஞரை ஆட்கொண்டது. அதனை நிறைவேற்றி மகிழ "முரசொலி" நாளேட்டில் ஒவ்வொரு நாளும்



அவர் எழுதிய திருக்குறள் உரைகளின் தொகுப்பு 1996ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் நாள் திருக்குறள் உரை நூலாக வெளியிடப்பட்டது.

திருவள்ளுவர் கலையரங்கத்திற்கு உதவி

1996ஆம் ஆண்டில் கலைஞர் அரசால் புதுதில்லியிலுள்ள தில்லித் தமிழ்ச்சங்கத்தில் திருவள்ளுவர் கலையரங்கம் அமைத்திட 10 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது.

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை

முக்கடல் சந்திக்கும் குமரி முனையில் வான்புகழ் வள்ளுவருக்குச் சிலை அமைக்க 31–12–1975ஆம் நாளன்று கலைஞர் தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்து அறிவிக்கப்பட்டு, சிலை அமைப்புக்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது 1976ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் அரசு கலைக்கப்பட்டது.

15–4–1979 அன்று இந்திய நாட்டின் முன்னாள் பிரதமர் திரு.மொரார்ஜி தேசாய் அவர்கள் அடிக்கல் நாட்டிய போதிலும் சிலையமைப் பதற்கான பணிகள் தொடங்கப்படவில்லை.

மீண்டும் 6–9–1990 அன்று குமரி முனையில் திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணியை கலைஞர் தொடங்கி வைத்தார்.

1990ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் சிலை அமைப்பதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டிருந்த போதிலும், 1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு மே திங்கள் வரையிலான காலத்தில் பணிகள் மிகவும் தொய்வடைந்து நின்றுவிட்ட நிலையில் இருந்தன.

நான்காவது முறையாக முதலமைச்சராக கலைஞர் மீண்டும் பொறுப்பேற்றதற்குப் பிறகு, 25.6.1997 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், 1999ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் சிலை அமைக்கும் பணிகளை முடித்திட வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. அத்துடன் சிலை அமைப்புப் பணிகளுக்குத் திருத்திய செலவின மதிப்பீடாக 6.14 கோடி ரூபாயும், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திற்குரிய திருத்திய செலவின மதிப்பீடாக 1.72 கோடி ரூபாயும் வழங்க 30–7–1997 அன்று அரசு அனுமதி வழங்கியது.

18–4–1998 அன்று கன்னியாகுமரிக்கு நேரடியாகச் சென்று சிலை அமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு அவற்றை விரைவுபடுத்துவதற்கான கருத்துக்களை வழங்கினார்.

சுமார் 9 கோடி ரூபாய்ச் செலவில் உலக அதிசயங்களில் ஒன்றாகத் திகழும் திருவள்ளுவர் சிலைதான் கன்னியாகுமரியில் 2000 ஆண்டில் ஜனவரித் திங்கள் முதல் நாளில் முதலமைச்சர் கலைஞரால் திறந்துவைக்கப்பட்டது.

அரசு அலுவலகங்களிலும் அரசு நிறுவனங்களிலும் திருவள்ளுவரின் பழைய படத்திற்கு பதில் 1–1–2000 அன்று புதிய படம் வைக்கவேண்டும் என்று கலைஞர் ஆணை பிறப்பித்தார்.

திருக்குறளை முற்றோதல் செய்த குழந்தைகளுக்கு பரிசு

சிலை திறப்பு விழாவில் திருக்குறள் முற்றோதல் நிகழ்ச்சியில் பங்குப்பெற்ற குழந்தைகளுக்கு மாதம் ரூ.1000 குறள் பரிசாக வழங்கப்படும் என்று கலைஞர் அறிவித்தார்.

அய்யன் திருவள்ளுவர் படிப்பகம்

அதுபோன்றே தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஊராட்சி மன்றப்பகுதியிலும் அய்யன் திருவள்ளுவர் படிப்பகங்கள் 16–1–2000 தொடங்க கலைஞர் ஆணை பிறப்பித்தார். ★

குமரிமுனையில் அய்யன் வள்ளுவர் சிலை திறப்பு விழாவில் 31-12-99 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் தமிழகத்தின் முன்னணிக் கவிஞர்கள் பங்கேற்ற கவியரங்கக் கவிதைகளிலிருந்து...

## அகத்தே நகும்!

– கவிஞர் சுரதா

கன்னியா குமரியிலே, இன்னூற்றாண்டின்
கடைசிநாள் வரும்வரைக்கும் காத்திருந்து,
இந்நாளைத் தேர்ந்தெடுத்து வள்ளுவர்க்கு
இவ்விடத்தில் சிலைவைத்து விழாவெடுக்கும்
பண்பட்ட முதல்வர்க்கு முதல் வணக்கம்!
பாவலர்க்கும் மற்றவர்க்கும் என் வணக்கம்!
அன்றாடம் திருக்குறளைப் பரப்பு கின்ற
ஆரூரா ரே!இதனைக் கூர்ந்து கேளீர்!

கடலழித்த தமிழகத்தின் பரப்பு மேலும்
காலத்தால் அழிந்துவிடக் கூடா தென்றே
இடந்தேர்ந்து வள்ளுவனைத் தேர்ந்தெடுத்து
ஈரடியின் பேருருவை நிறுத்தி விட்டாய்
கடல்கண்ட நாடுகளில் இதற்கீ டாகக்
கண்கவரும் சிலையைத்தான் யார்கண்டார்கள்
அடடாநீ ஒருவன்தான் இனத்தை மீட்கும்
அருஞ்செயல்கள் செய்வதற்கும் முதல்வன்
ஆனாய்!

அடக்கமாய் நாட்டை ஆண்ட
அண்ணாவின் நிழலே! வாங்கும்
வடக்கிலே தெற்கை வைத்து
வாதிடும் நிதியே! நம்மை
ஒடுக்கினார் தம்மைத் தேர்தல்
ஊஞ்சலில் இருந்து தள்ளிப்
படுக்கையில் படுக்க வைத்துப்
பார்த்திட்ட தலைவர் நீங்கள்!

தேரோடும் கோயில் சென்று
தேவாரம் பாடி டாத
ஆரூரர்! ஆளும் கட்சி
அரசியல் அப்பர்; தீமை
தாராத கூட்ட ணிக்குச்
சம்பந்தர்; எதிர்ப்பை எல்லாம்
கூரான மதிநுட் பத்தால்
குடைசாய்க்கும் முதல்வர் நீங்கள்!

இப்போது முதல்வ ராக
இருக்கின்றீர் எனினும்; நீங்கள்
எப்போதும் கலைஞர்! ஈட்டி
எழுத்தாளர்! பெரும்பேச் சாளர்!
பொய்ப்போர்வைக் கதைக்குள் தூங்கும்




# திருவள்ளுவர் சிலை திறப்பு விழா கவியரங்கம்

புராணத்தின் பகைவர்! நீங்கள்
முப்பாலின் முதற்பால்! கொத்து
முத்தமிழ் உமக்குத் தாய்ப்பால்!

கூடா ஒழுக்கம் கொண்டவர் தம்மை
அவருள் இருக்கும் ஐம்பூ தங்கள்
நகைக்கும் என்று நவின்றார் வள்ளுவர்,
அல்லவை தன்னை நல்லவை ஆக்கித்
திருத்திட நமக்குத் திருக்குறள் தந்தார்!
அவரது கருத்தை அடிபொற்றிப் பாடிட
இங்கு வந்துள்ளேன் இதனைக் கேளீர்!

மெய்மைதனை ஒதுக்கிடுவார் வேடம் கண்டும்,
மெய்கண்டார் எனும்பெயரால் வாழ்ந்துகொண்டும்,
கையூட்டாம் இலஞ்சத்தை வாங்கிக் கொண்டும்
கூடுவிட்டுப் போகும் உன் ஆவி'' என்று
கூறிவென்ற மேனகையை அறிவோம்; இந்த
நாடின்னும் தாடி, மீசை, சாமி யாரை
நம்புவதில் பொருளுண்டா? அதனால் நேரும்
கேடுகண்டும் திருந்தாரை, ஐம்பூ தங்கள்
கேடுகெட்டார் என்றவரைப் பழித்தி டாதா?

அவனின்றி ஓரணுவும் அசையா தென்றே
அளப்பார்கள்; காவியுடை உடுத்தி யுள்ள
தவவேடத் துறவிகளின்கோலம் கண்டும்
தெய்வத்தின் மாற்றுருவாய்ச் சொல்லிக் கொண்டும்
குவளைக்கண் நங்கையரை கற்ப ழிக்கும்
கொடியவரின் செயல்கண்டும் அவ்வப்போது
அவருக்குள் இருக்கின்ற ஐம்பூ தங்கள்
''அடப்பாவி'' என்றவரை நகைக்கு மன்றோ!



காரியத்தை முடிக்காதோர் தம்மைக் கண்டும்
பொய்பேசி ஏமாற்றிக் கொண்டி ருக்கும்
புன்சிரிப்புக் கூட்டத்தின் செயலைக் கண்டும்
ஐம்பூத மாம் நிலம் நீர் காற்று வானம்
அன்றாடம் அன்னாரை நகைக்கும் அன்றோ!

மேடுகட்டி இருக்கின்ற இடத்தில் உள்ள
மேலாடை தனைச்சிறிது நீக்கி விட்டால்,
சாதுவேடம் போட்டுக் கொண்டி ருப்போர் எல்லாம்
சாதுவல்லர்; சண்டியர்கள் அங்கே உண்டு!
மாதுவேடம் போட்டிருப்பார்; அவருக் குள்ளும்
மனிதவெடி குண்டுகளும் மறைந் திருக்கும்
யாதுகேடு பயக்குமென்று அறிந்திடாமல்
ஆதரித்துக் கொண்டிருந்தால் அதுவே ஓர் நாள்
தீதுதரும்; உணராரை; ''ஐம்பூ தங்கள்''
தினந்தோறும் அவரகத்தே நகுமே நாளும்! ★

# பறியா நகும்!

– கவிஞர் அப்துல்ரகுமான்

குறள் என்றால் குள்ளம்
ஆனால் இந்தக்
குள்ளம்தான் நம்மை
உயர்த்தியது!
உயர்ந்தவருக்கு
நம்மை உயர்த்தியவருக்கு
உயரமான சிலை

வடக்கே!
உன் இமய உயரத்தால்
கர்வப்படாதே
தெற்கு உன்னைவிட உயரம்
உன் உயரம்
வெறும் கல் உயரம்
தெற்கின் உயரமோ
சொல் உயரம்
வள்ளுவரின் சொல் உயரம்
விலங்கு
ஈரடியால் நடந்த போது
மனிதன் ஆனது
தமிழ், குறளென்ற
ஈரடியால் நடந்தபோது
மனிதம் பெற்றது

திருக்குறள் –
தமிழ் பருவமடைந்தபொழுது
வள்ளுவர் தந்த மாராப்பு

'நூ'லென்றால் சிக்கல் விழும்
வள்ளுவரின் 'நூ'லோ
சிக்கல்களைத் தீர்க்க வந்த நூல்

என்ன அதிசயம்!
ஒரு நூலே நமக்கு
ஆடையானதே!

ஒரு நூலே
ஊசி இல்லாமல்
நம் கிழிசல்களையெல்லாம்
தைத்துவிட்டதே!

போர்க்களம் –
வேலே எழுதுகோலாய்
விழுப்புண்களே எழுத்தாய்
வீர காவியம்
எழுதும் ஏடு
அங்கே –
வீரன் ஒருவன்; அவனோ
புண்படா நாளை
எண்படா நாள் என்பவன்

ஒரு வேல் ஏந்தும்
மனிதனோடு போர் புரிவதைவிட
'இருவேல்' ஏந்தி
எதிர்க்கவரும் யானையுடன்
மோதுவதே வீரம் எனும்
கொள்கை உடையவன்

எனவே, அவன்
மனிதர்களைத் தவிர்த்து
மண்மேல் நடந்துவரும்
மாமிச மலைகளைத்
தேடிச் சென்றான்
அப்போது–
களத்தில் அவனை நோக்கிக்
களிறொன்று வந்தது; அவன்
களிப்போடு தன்
கைவேலை அந்தக்
களிற்றின்மேல் எறிந்தான்
களிறு பிளிறிக் கொண்டு
களத்தில் சாய்ந்தது

அப்போது
யாரோ எறிந்த வேல்
அவன் மார்பில் தைத்தது
அவன்
வேலைப் பறித்தெடுத்தான்
எடுத்தபோது நகைத்தான்
அவன் ஏன் நகைத்தான்?

அடிபட்டால் அழுவது
கோழைகளின் குணம்
அவனோ வீரன்
அதனால் நகைத்தானா?

இல்லை; இந்தக்
காயத்தால் எல்லாம் என்
'காயம்' சாயாது என
எய்தவனைப் பார்த்து நகைத்தானா?

'வெறுங்கையோடு நின்றேன்
வீரத்தைக் காட்ட ஒரு
வேல் இல்லையே என
ஏங்கினேன்

கிடைத்துவிட்டது' என்று
நகைத்தானா?

எதிரி
தன் மரணத்துக்குத்
தன் ஆயுதத்தையே
கொடுத்ததை எண்ணி
நகைத்தானா?

இல்லை.
தன் காயம் என்ற வாய்
வேலைப் பார்த்து
நகைத்ததைக் கண்டு
நகைத்தானா?

இல்லை,
விழுப்புண்ணை,
யுத்த மகளின்
ரத்த முத்தத்தை,
வீரத்தின் கையெழுத்தை
விரும்பி வந்தோம்
கிடைத்துவிட்டது என்று
மகிழ்ச்சியால் நகைத்தானா?

வெறுங்கையோடு நின்ற
என்மீது
வேலெறிந்தானே
அவனும் ஒரு வீரனோ என
ஏளனமாய் நகைத்தானா?

இல்லை,
நிராயுதபாணியாய்
நிற்கும் தன்மேல்
பகைவனின் ஆயுதம்
தவறிப் போய்ப் பட்டாலும்
அவன் வீரத்திற்குக்
களங்கம் வரும்
இப்போது
பகைவனின் மானம் காக்கத்
தன் கைக்கு வேல் வந்ததை
எண்ணி
ஆறுதலாய் நகைத்தானா?

இல்லை,
தன் உடலே அம்பறாத்தூணியாய்
ஆனதை எண்ணி
வேடிக்கையாய் நகைத்தானா?

இல்லை,
மைக்கூடாய் என்
மெய்யிருக்கிறது
குருதி என்ற
மை இருக்கிறது
எழுதுகோல் இல்லையே
என்று ஏங்கினேன்
கிடைத்துவிட்டது என்று
நகைத்தானா?

இல்லை,
வெற்றி அல்லது
வீரமரணம் என்ற
முடிவோடு வந்தேன்
இதோ-
மரணலோகத்திற்குச் செல்ல
ஒரு வாசல் திறந்துவிட்டது
என்று நகைத்தானா?

அவன் நகையின் காரணம்
எதுவென்று யாரறிவார்?
அது எதுவாயினும்
அந்த நகை
வீரமகள் அவனுக்கு
விருதாகத் தந்த 'நகை'
அந்த நகை வாழ்க! ★



# மெல்ல நகும்!

– கவிஞர் வைரமுத்து

அரங்கின் தலைவா!
ஆட்சியின் தலைவா!
தமிழின் தலைவர்!
தமிழர் தலைவர்!

எனக்கொரு சந்தேகம்!

திருக்குறளுக்கும்
திருக்குவளைக்கும் நெடுநாள் பந்தமா?

வள்ளுவன் என்ன உன்
தூரத்துச் சொந்தமா?

இல்லை
உனக்கும் அவனுக்கும்
ஒரே ரத்தமா?

எத்தனை ஒற்றுமைகள்
உனக்கும் அவனுக்கும்?

அவன் அகரத்தில் தொடங்கி
'ன' கரத்தில் முடித்தவன்

நீயும்தான்
அண்ணா என்ற அகரத்தில் தொடங்கி
தமிழன் என்ற 'ன' கரத்தில் முடிப்பவன்!

ஆச்சரியம் பாருங்கள்

இருவருமே
அதிகாரம் படைத்தவர்கள்

அவனும் நீயும்
பெரியாரைத் துணைக்கோடல்
நன்றென்று சொன்னவர்கள்

அவன் காவியம் செய்தான் – நீ
குறளோவியம் செய்தாய்

அவன் தமிழின் கரை கண்டான்
கரை கண்டவனுக்கே – நீ
உரை கண்டாய்!

இன்னுமொரு கருத்து
அவன் பெயரும் ஐந்தெழுத்து
உன் பெயரும் ஐந்தெழுத்து

உன்னைப் புகழ்பாடுவதாய்ப் புலவர்கள் மீது
குற்றப்பத்திரிகை வாசிக்கிறார்கள்

குற்றமா?

புலவன் புரவலனைப் பாடினால்
அது சிறுமை

ஒரு புலவனையே புலவன் பாடுவது
பெருமை

வள்ளுவன்!
எங்கள் மொத்த இனத்தின்
முழு முதல் அவன்

உலகம் அவனைப் பார்க்கிறது
தாடிவைத்த தமிழென்று

நான் அவனைப் பார்க்கிறேன்

நுரைக்க நுரைக்கக்
காதலித்த கவியென்று

அறத்துப்பாலும் பொருட்பாலும்
மனிதம் வாழ வகுத்த கணிதம்

அவன்
காமத்துப் பால்தான்
கவிதையெனும் புனிதம்

அவன் அறம்பொருள் எழுதியது ஆணிகொண்டு
காமத்துப்பால் எழுதியது பீலிகொண்டு

வானம் பிழிந்து நீலம் எடுத்து
வாழ்வைப் பிழிந்து சாரம் எடுத்து

நிலவைப் பிழிந்து பாலை எடுத்து
நெஞ்சைக் குடைந்து ஞானம் எடுத்து


தீயைப் பிழிந்து ஈரம் எடுத்து
தென்றல் பிளந்து வாசம் எடுத்து

இதயம் புகுந்து காதல் எடுத்து
பெண்மை திறந்து உண்மை எடுத்து

உயிரைக் குடைந்து உணர்ச்சி எடுத்து
தமிழைக் கடைந்து வார்த்தை எடுத்து

சத்தம் அர்த்தம் ஒன்று கலக்க
சித்தம் ரத்தம் ரெண்டும் இனிக்க

காலம் இடம் எனும் எல்லைக்கப்பால்
வள்ளுவன் செய்தான் காமத்துப்பால்



அதிகாலைச் சிரிப்புக்கு
அத்தர் வாசம்
ரோஜாவாய்ப் போனேன்
அத்தராய், ஆனேன் என்று
சொல்லும்

வாசுகி சிரித்தாள்
வாயு மண்டலமே
வாசனை மண்டலமானது

வள்ளுவன் கேட்டான்:
யான் நோக்கிய காலை ஏன்
நிலன் நோக்கினாய்?

புன்னகைத்தாள் வாசுகி
புலவர்க்கு இதுகூடப் புரியாதா?

வேட்கைகொண்ட நிலம் இங்கே
வாழ்க்கை தரும் உழவன்
எங்கே

இந்தச்
செறிவான அர்த்தத்தின்
அறிவான சிருங்காரம்
அதுவல்லவா?

கள்ளியடி நீயென்று
கன்னங் கிள்ளினான்
வள்ளுவன்

''யான் நோக்கும் காலைநிலன் நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்''

ஏன் மெல்ல நகும்?
தண்டோராபோட்டுத் தாமரைகள் உடைவதில்லை
சத்தங்கள் போட்டபடி சந்திரன் உதிப்பதில்லை

வாய்விட்டுச் சிரித்தால்
ஓரே ஓர் அர்த்தம்தான்

சிக்கனச் சிரிப்புக்கு
வெவ்வேறு அர்த்தங்கள்

பெண்ணின் சிரிப்புக்கு
வாசனை உண்டென்றான் வள்ளுவன்

வாசனையா என்றாள் வாசுகி

அந்திச் சிரிப்புக்குச்
சந்தன வாசம்
தொட்டுக்கொள் என்று சொல்லும்

இரவுச் சிரிப்புக்கு
மல்லிகை வாசம்-கையில்
சுற்றிக்கொள் என்று சொல்லும்

கையில் ஒட்டிய வெட்கத்தைத்
தாடியில் துடைத்துக் கொண்டான்
அவள்
களுக்கென்று சிரித்தாள்

செத்துவிட இப்போதே
சித்தமென்றான் வள்ளுவன்

வஞ்சி அஞ்சி ஓடி வாய் பொத்தினாள்

என்னைஅடக்கம் செய்ய
வசதியான இடமொன்று வாய்த்தால்
செத்துவிடச் சித்தமென்றேன்
அந்த இடம் இன்று கண்டேன் என்றான்

தப்புத் தப்பென்று
தன்னிரண்டு கைகொண்டு
செப்புத் திருமாப்பு
சேயிழையாள்தான் மறைத்தாள்

என் அடக்கமுடைமை
உன் நெஞ்சுக்குழியல்ல பெண்ணே
கன்னக்குழியென்றான்

காமத்துப்பாலன்

ஓருநாள்
ஊடலில் வாசுகி
ஓருக்களித்து படுத்திருந்தாள்

வாதம்செய்தான் வதியில்லை
பாதம்தொட்டான் பயனில்லை

புள்ளிவைத்த கவிதையே
பள்ளியெழு என்றான்

புள்ளிவைத்த கவிதையாள்
பொசுக்கென்று எழுந்துகொண்டாள்

ஆம் அழகே!

பாட்டெழுதும்போது
பனையோலை கிழியுமென்று
ஓற்றெழுத்துக்கெல்லாம் யாம் புள்ளி
வைப்பதில்லை

நீயும் கவிதைதான்
உனக்குத்தான் எத்தனை புள்ளிகள்

கன்னத்தில் ஒரு மச்சம்
கழுத்தடியில் திருமச்சம்

புள்ளிமயில் நீதான்
புள்ளிவைத்த கவிதை என்றான்

உன் பெயரை
என்னையன்றி யாரும்
உச்சரிக்கக்கூடாது
எச்சரிக்கை என்றான்

ஏனென்றாள்

உன்னை
வா-சுகி என்று
எவரேனும் அழைக்கலாமா
என்னையன்றி யென்றான்

அவள்சில்லென்று சிரித்தாள்

அந்த ஓசையில் உடைந்த
ஓரு லட்சம் மொட்டுக்கள்

அன்புத் தமிழ்க்குலமே!
அனைத்துலக மாந்தர்களே

இந்த பூமியைக் காப்பது
ஓசோன் கூரையல்ல

மெல்லிய சிரிப்பென்ற
மென்படலம்தான்

உதடுகள் செய்யும்
உலக சேவை
முத்தமல்ல
புன்னகைதான்!

பூமியை முத்தமிட வரும்
புத்தம் புதிய நூற்றாண்டே!

யோசித்து யோசித்து
யாசிக்கிறோம் உன்னிடம்

புன்னகை வேண்டும்
போர்கள் வேண்டாம்

வெய்யில் வேண்டும்
வெப்பம் வேண்டாம்

காற்று வேண்டும்
கடும்புயல் வேண்டாம்

நதிகள் வேண்டும்
வெள்ளம் வேண்டாம்

பசி வேண்டும்
பட்டினி வேண்டாம்

சத்து வேண்டும்
சதைகள் வேண்டாம்

புதிய நூற்றாண்டே!
சவுக்கை எறிந்து
சாமரம் கொண்டு வா

பள்ளங்கள் நிரப்ப வா
பாலங்கள் எழுப்ப வா

பிறக்கும் குழந்தையின்
அலறல் தவிர
பூமியில் வேறு கூக்குரல் வேண்டாம்

ஆண் பெண் நிகழ்த்தும்
அகிம்சையான வன்முறை தவிர
வாழ்வில் வேறு
வன்முறை வேண்டாம்

தானம் வழங்கும் ரத்தம் தவிர
வேறெங்கும் ரத்தம்
வெளிப்பட வேண்டாம்

எழுத்துக்களின் நெடுங்கணக்கில்
இருந்துவிட்டுப் போகட்டும்

அஃதன்றி வேறெங்கும்
ஆயுதம் வேண்டாம்

நெஞ்சமென்ற கிண்ணத்தில்
நேசம் நிறையட்டும்

உயிர்கள் மீதெல்லாம்
பாசம் பரவட்டும்

பறவைகளின் காலனியில்
இழவென்றாலும்
இறுதிஊர்வலத்தில்
மனிதர் நடக்கட்டும்

தேம்ஸ் நதிக்கரைகள்
திருக்குறள் படிக்கட்டும்

சீனப் பெருஞ்சுவர்
பைபிள் எழுதட்டும்

வாடிகன் வாசலில்
குர் ஆன் ஓதட்டும்

வள்ளுவர் வாழட்டும்
கலைஞர் ஆளட்டும்! ★

# நல்லாள் நகும்!

– கவிஞர் ஈரோடு தமிழன்பன்

திருக்குறளை
எத்தனையோ பேர் கற்கிறார்கள்
ஒருவன் நீதான்
ஓயாமல் காதலிக்கிறாய்!

ஒன்றே முக்காலடியில்
ஒரு காதலியா?
அவளைத் தந்தவனுக்கு
நூற்று முப்பத்து மூன்றடியில்
ஒரு சிலையா?

ஓவியத்தில் அவளைத் தீட்டிய
எழுத்து – இரவிவர்மன் நீ!
கோட்டத்தில்
அவளைக் குடி வைத்த
கொற்றவன் நீ!

நூற்று முப்பத்து மூன்று
வீதிகள்
ஆயிரத்து முந்நூற்றுமுப்பது
வீடுகள்
பத்துப் பள்ளிகள்
மூன்று நூலகங்கள் இப்படி
ஊர் ஒன்று செய்து
குறளூர் என்று பெயர் கொடுப்பாயா?
அதன் திறப்பு விழாக்
கவியரங்கம் – உன் தலைமையில்;
அழைப்பாயா பாட எங்களை?

சொல்லை அடைகாத்துச்
சுடுகவிதை தருபவனே – நீ
முள்ளை அடைகாத்தால்கூட
மொட்டு மொட்டாய் மலர்ந்துவிடும்
பாறாங்
கல்லை அடைகாத்தாலும் –
குஞ்சு பொரித்துவிடும்
அத்தனை சூடானவன் நீ!

என் தலைப்பு
நல்லாள் நகும் என்பது
மெய்தான்
நல் ஆள் நகும்! தீய ஆள் அழும்!

நிலம் என்னும்
நல்லாள்
உழைக்காதவனைப் பார்த்து
உரக்கச் சிரிக்கிறாள்!

ஒருவிதை தூவினால்
நூறு மணிகள் தருகிறாள்
ஒருகிளை நட்டால்
ஒரு மரம் தருகிறாள் அவள்!
அவள்
மகசூல் எல்லாம்
சுகசூல்!

அவள்,
கரியை
வைரமாக்கித் தருகிறாள்!
மனிதனிடம் வைரத்தைக் கொடுத்தால்
கரியாக்கி விடுகிறான்!

புழுவையும்
பட்டுப் பூச்சியாக்குகிறது இயற்கை!
மனிதனோ
பட்டுப் பூச்சியைக் கொடுத்தால்
புழுவாக்கி விடுகிறான்!

ஈரவிழியோரம் இருந்தும்
இமை முடிகள் நீண்டு வளர்வதில்லை!–
[அது இயற்கை]
வளர வாய்ப்பிருந்தும் – மனிதன்
வளராமல் இருக்கலாமா?
கையைத் தாண்டாத ரேகைகள்போல்
கட்டுப்பட்டுக் கிடப்பவனா மனிதன்!

மரணம்கூட
ஓயாது உழைக்கிறது!
வாழ்க்கை - ஏன்
உழைக்க மறுக்கிறது?

உழைப்பவனைத்
தொடும்போது மரணத்திற்கும்
வாழ்க்கை வந்து விடுகிறது!

சோம்பேறியைத்
தொட்ட மரணம் -

அடுத்த ஆளைத் தொடும்முன் - எந்த
டெட்டால் போட்டுக்
கையைக் கழுவும்!

முயற்சி தன்
மெய்வருத்தக்
கூலி தரும் என்ற வள்ளுவன்,
தெய்வத்தைக் கொண்டுபோய்
எழும்பூர் அருங்காட்சியகத்தில்
வைக்கச் சொன்னான்.

ஆனால்,
விடியா மூஞ்சிகள்
வேலைக்குப் போனால்
விதை குழிகளும் புதை குழிகளாகும்!

சோம்பேறிகள்
முகம் பார்த்தால் சூரியனும் நமுத்துப்
போவான்!

சிரிப்பதென்றால்கூடச்
சிலருக்கு
உதடு திறந்து வைக்கவும்,
சிரித்த பின்
உதடு மூடி வைக்கவும்
உதவிக்கு ஆள் வேண்டும்.

நிலமகள்
சிரிக்காமல் என்ன செய்வாள்?
மெல்லுவதற்கே
யோசிக்கும் தேசத்தில்
மனிதர்க்குப்
பல் எதற்கு முளைக்க வேண்டும்?

சாய்வு நாற்காலியில்
படுத்துக் கொண்டே
சதுரங்கம் ஆடுபவனைக் காய்கள்
வெட்டிவிடும்!
அவனால் காய்களை வெட்ட முடியாது

ஓட முடியாதவன்
கிரிக்கெட் மைதானத்தில் இறங்கினால்
கிரிக்கெட்
மட்டையே
அவனை அடித்துத் துரத்தும்!

தன் கண்களையே
தவணை முறையில் திறப்பவன்
உலக இருட்டை எப்படி ஓட்டுவான்?

மர்மமான முறையில்
மகரிஷி
ஒருவர் இறந்தபோது,
மருத்துவர்கள்
சவப் பரிசோதனை
செய்து பார்த்ததில்
பத்துப் பெண் சடலங்கள்
கைப்பற்றப்பட்டனவாம்!

மகிரிஷி
ஜீரணம் செய்துவிட்ட மற்றப்
பெண்ணுடம்புகளின்
எண்ணிக்கை பற்றிச்
சீடர்களுக்குள்ளே கருத்து மாறுபாடாம்!

ஒரு
சோம்பேறி
உடம்பைச் சோதித்துப் பார்த்தால்
ஆமையின் இதயமும் - செத்த
நத்தையின் வேகமும் இருப்பது தெரியலாம்!

உழைப்பு சிலருக்கு
உத்த மனைவி
ஆனாலும்,
சோம்பல் என்னும்
சின்ன வீட்டிலேயே
சுருண்டு கிடப்பார்கள்

உழைப்புச்
சிலருக்குக் காலைக் கடிக்கும் செருப்பு...
கழற்றிவிடவே பார்ப்பார்கள்!

தலைவா
உனக்கும் மற்றவர்களுக்கும்
ஒரே ஒரு வேறுபாடுதான்...
நீ
உறங்கும்போது உழைக்கிறாய்!
மற்றவர்கள்
உழைக்கும்போதும் உறங்குகிறார்கள்.
அவர்கள்
படுத்து எழுந்த இடம்கூடக்
குறட்டை விட்டுக் கொண்டிருக்கும்!

உன்
காலடிச் சுவடும்
காரியாலயம் திறக்கும். ★

# கண்பாடு அரிது

- கவிஞர் மு. மேத்தா

கன்னியாகுமரியில் அலை
கலைஞர் கைகளில் வலை
அகப்பட்டுக் கொண்டது
வள்ளுவர் சிலை!

அறியாமைக் கடலில்
அலைமோதுபவர்க்கு
திருக்குறள் ஒரு
கலங்கரை விளக்கு!
அந்தக்
கலங்கரை விளக்கிற்கே
வெளிச்சம் ஏற்றுகிறது
கலைஞரெனும் கிழக்கு!

வள்ளுவப் பெருந்தகை
இன்று இங்கே வந்தால்
ஒரு குறள் சொல்லுவார் :
கற்க கலைஞர் கருணையைக்
கற்றபின்
நிற்க அவர்க்குத் தக...

தலைவா!
உன்னை நம்பி வாழ்கிறது
ஒரு நூறு தலைமுறை
அதனால்
உன் உழைப்பிற்கு
ஒரு நாளும் தர மாட்டோம்
விடுமுறை!

கலைஞர் தலைமை என்பதால்
அலைகளுக்கு ஆசை வந்து
கரையேறப் பார்க்கிறது!
அலைகள் கரையேற வழியில்லை
அபலைகள் கரையேற வழியுண்டு
கலைஞர் தலைமை ஏற்பதால்...

வள்ளுவர்
133 அதிகாரங்களில்
நடைபோட்டார்
தீமைக்கும் தீயவர்க்கும்
144 தடை போட்டார்!

வள்ளுவன் வார்த்தது முப்பால்!
காலத்தை கடந்து நிற்கிறான்
ஜாதி மதங்களுக்கு அப்பால்!

வள்ளுவன் கரம்பட்ட
எழுத்தாணி...
குமரிக் கடலோரம்
எழுந்தாய் நீ!

வள்ளுவனே
உன் எழுத்தாணியின் கூர்முனை
எங்கள்
இதயவயலை உழுத
ஏர்முனை!

ஆயிரம் ஆயிரம்
ஆண்டுகளுக்குப் பின்னும்
உன் எழுத்தாணி
முனை மழுங்காமல் இருக்கிறது

எங்கள் தமிழர்கள் தான்
சமயத்தில்
மழுங்கிப் போய்விடுகிறார்கள் ....



இல்லையென்றால்
தமிழ் வழிக் கல்விக்கு எதிராக
ஆங்கிலப் பள்ளிகள்
ஆர்ப்பரிக்க முடியுமா?

உலகிலேயே திருக்குறளை
முதன் முதலில் வாசித்தவர் யார்?
திருக்குறளோடு வசித்தவர் -
முதன் முதலாய் வாசித்தவர்

ஆம்... திருக்குறளின்
முதல் வாசகி
வாசுகி!
அவர்தான்
காமத்துப்பாலின்
கதாநாயகி!

சிலை இதைப்படைத்த
சிற்பிகளுக்கு என்
சிரம் தாழ்த்துகிறேன்
ஏனென்றால் ...
செதுக்கிச் செதுக்கிக்
குனிந்த தலையோடு அவர்கள்
நிமிர்ந்து நிற்க வைத்தார்கள்
வள்ளுவனை!

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது

வறுமை என்பது என் தலைப்பு!
உலகத் தமிழினத்தின் தலைவர்
உரிமையைச் சிலர்க்குத் தந்தார்
திறமையைச் சிலர்க்குத் தந்தார்
அருமையைச் சிலர்க்குத் தந்தார்
பெருமையைச் சிலர்க்குத் தந்தார்
வறுமையை எனக்குத் தந்தார்!
வறுமையை எனக்கேன் தந்தார்?

தாங்குவான் - இவன் என்று
தலைவர் நினைத்தாரோ?
வறுமையைத்
தாங்க முடியாதென்று
வள்ளுவரே சொல்லுகிறார் ....
தலைவர் கொடுப்பதை
வாங்க முடியாதென்று
நான் சொல்ல முடியுமா?

வறுமை என்று
தலைப்பை எழுதினேன்
எழுதும் பேனாவிற்கும்
வறுமை
வந்து சேர்ந்து விட்டது
ஆமாம்... மை... தீர்ந்து விட்டது.

தண்ணீர் விட்டு எழுதினேன்
பசிக்குத்தான் தெரியும்
தண்ணீரின் அருமை!

வறுமை என்பது வேறொன்றுமில்லை
வயிற்றுப் பிரதேசத்தை
நெருப்பு ராணுவம்
கைப்பற்றிக் கொள்ளும் ...

வெறிபிடித்த தீவிரவாதிகளால்
கடத்தப்பட்ட விமானத்தில்
உள்ளே
அகப்பட்டுக் கொண்டவர் போல்
ஒவ்வொரு நிமிடமும்
உயிர் ஊசலாடும் ....

வாழ முடிவதில்லை ..
சாகவும் முடிவதில்லை ...
அதுதான் வறுமையின் எல்லை!

காசென்றால் கடவுள்கூட
கறாராய் இருக்கிறார் ...
கோவிலுக்கு வருபவர்க்கு
தரிசனம் காட்டுகிறார்
தரிசனம் தரும் முன்பே
உண்டியலை நீட்டுகிறார்!

ஆகாயத்திற்கும் ஒருநாள்
வறுமை வருகிறது
அப்போது - அது
நட்சத்திர நகைகளை
அடகு வைக்கிறது
வெள்ளி நிலாவையும்
விற்று விடுகிறது
அன்று
அமாவாசை என்று
அறிவிக்கிறது!

வறுமை ...
இலை உதிர்காலமாய்
வரும் போது
மரம் மொட்டையடிக்கப்படுகிறது ...
மரத்தை விட்டு
இலைகள் தான் ஓடுகின்றன
வறுமை வந்தால்
மனிதனை விட்டு
மனிதர்களே ஓடுகிறார்கள்!

அறிவின் வறுமை - வண்ணத்திரை
தமிழின் வறுமை - சின்னத்திரை!

பூமியின் வறுமை வறட்சி
பொறுமையின் வறுமை புரட்சி!

வறுமையின் தலைநகரம்
வயிறு!
வயிற்றில் அது கொடியேற்றும்போது

மனிதனின்
தலை என்னும்
தலைமைச் செயலகம்
செயலிழந்து விடுகிறது!

வறுமை -
இயற்கையின் படைப்பில் நேர்ந்த
இலக்கணப் பிழை!
எந்தக் காரணத்தை முன்னிட்டும்
வறுமைக்கு மட்டும்
வழுவமைதி கிடையாது!

இறைவன் தான் தலை எழுத்தை
எழுதினான் என்றால்
காசோலைகளில்
கையெழுத்துப் போடுபவர் யார்?

சிலருக்குப் பசியென்றால்
என்னவென்றே தெரியாது
பலருக்குப் பசியைத் தவிர வேறு
என்னவென்றே தெரியாது

மருத்துவர்களைக் கேட்கிறேன்
'பசிக்க வில்லை' என்றால்
மருந்து தருகிறீர்களே ...
'பசிக்கிறது' என்றால்
மருந்து தர
முடியுமா உங்களால்?

வறுமையின் முகம் -
ஏழையர் தம்
இல்லத்தில்!
வறுமையின் முகவரி - அவர்
இதயத்தில்!

வறுமைக்குப் பற்கள் உண்டு
அதனால் தான்
வயிற்றைக் கடிக்கிறது!

வயிற்றில் எரியும்
நெருப்பு வளர்ந்தால்
கட்டாயம் ஒருநாள்
இந்த
தேசமே தீக்குளிக்கும்!

வறுமையை
எப்படி வெளியேற்றுவது?
வெளியேறு வெளியேறு என்றால்
எருமையே வெளியேறாது

வறுமையா வெளியேறும்?
'போடு' 'போடு' என்றால்
மயில் இறகு போடாது ....
'போடு போடு' என்று
போட்டால்தான் போடும் ...! ★

# செயல் அரிது

– கவிஞர் பொன். செல்வகணபதி

மேலே நீலவானம்
மேடையிலே தமிழ்வானம்
சூரியராய்ச் சந்திரராய்ச்
சுற்றியுள்ளார் கவிவாணர்!

கவிஞர் படை கவிகட்டும்
கலைஞர் படை கைதட்டும்
ஆரவாரம் விண்முட்டும்
அதில் மயங்கும் திசையெட்டும்!

கவிராஜர்கள் நாட்டில்
கணக்கின்றி இருக்கிறார்கள்
தலைவா
நீ மட்டுந்தான் ராஜகவி!

கவியரங்க மேடைகள்
கணக்கில்லை என்றாலும்
நீ தலைமை ஏற்றால்தான்
ராஜகளை!

பக்கத்தில் முக்கடல்
மேடையில் தமிழ்க்கடல்
கரையெல்லாம் மக்கள் கடல்
ஆகமொத்தம் ஐந்து கடல்!

ஐந்து கடலும்
முத்தெடுக்க
மூழ்கும் கடல்
முப்பால் கடல்!

அந்தநாள் எழுத்தாளனுக்கு
இந்தநாள் எழுத்தாளன் நீ
எடுத்த சிலை இது!

அவனோ
தமிழ்மறை ஆசான்
நீயோ எங்கள் தமிழாசான்!

உன் குரலே
திருக்குறள்!

நீ முப்போதும் அருந்தும்பால்
முப்பால்!
எப்போதும் அருந்தும்பால்
தமிழ்ப்பால்!
மற்றதெல்லாம்
இதற்கு அப்பால்!

தமிழுக்குச்
சிலை செய்தார் வள்ளுவர்
அதுதான் திருக்குறள்!

அவரை வணங்குகிறேன்
அவையை வணங்குகிறேன்
கவியைத் தொடங்குகிறேன்!

இந்த விழா யாருக்கு?
இனியதமிழ் வேருக்கு!

இது சிலையா
இல்லை!
இந்தியத் தராசில்
இமயக் கல்லுக்கு
ஈடாக
எடுத்து வைக்கப்பட்ட
எடைக்கல்!

உலக ஒருமைப்பாட்டுக்கு
இது ஒரு படிக்கல்!

இது சிலையா
இல்லை!
உலகை அளக்கும் அளவுகோல்
மனதைத் திறக்கும் திறவு கோல்
கற்பவர் நெஞ்சைக்
களவாடும் கன்னக்கோல்!
தூக்கி நிறுத்திய துலாக்கோல்!

அலைகடலுக்குள் இருக்கும் முத்து
ஆணி முத்து!
வள்ளுவர் சிலையோ
கடலுக்கு மேலே உள்ள
கரை முத்து
தரை முத்து

கலைக் கடலைக்
கடைந்தெடுத்த
அமுத முத்து
அதுதான் நம்சொத்து

அமெரிக்கச் சுதந்திரதேவி சிலை
அதற்கோர் ஈடே இலை

என்ற நிலை
இனிமேல் இல்லை!

இனி இந்த
வள்ளுவர் சிலையை
வந்துவந்து பார்ப்பார்!
வந்துபார்த்த பின்னே
வாய்பிளந்து வேர்ப்பார்!

வடக்கே
வானுயர் இமயம் எல்லை!
தெற்கே
வள்ளுவனின் இதயம் எல்லை!

இதை உருவாக்கிய
என் தலைவனே
உனைப் புகழ
என்னிடம் சொல்லே இல்லை!

வள்ளுவரை இமயமென்று
வருணிக் கின்றார்!
ஒரு வேறுபாடு!
இமயத்திற்கு
இதயம் இல்லை!

எம் வள்ளுவருக்கோ
இதயம் உண்டு
அந்த
இதயத்திற்குள் ஓர்
இமயம் உண்டு!

இமயம் உருகும்
வள்ளுவம் உருக்கும்!
இமயம் வளராது
வள்ளுவ இமயமோ
வளர்ந்து கொண்டே
இருக்கும்!

மதுவிலக்கை
அமுல் செய்த
முதல் மகாத்மா
வள்ளுவர்!

புலால்! உண்ணாமையைப்
போற்றிப் பாடி
அஹிம்சையை அறிமுகப்படுத்திய
அண்ணலும் அவரே!

மக்கள் தொகையைக்
கட்டுப்படுத்த
அரசுகள் முயல்கின்றன!

கடவுள் தொகையைக்
கட்டுப்படுத்த

முயற்சி செய்த
முதல் மனிதர் வள்ளுவர்!

அதனால்தான்
உருவமற்ற பெயருமற்ற
ஒரு கருத்தைக் கடவுளாக்கி
உலகுக்கு அறிவித்தார்
உருப்படுங்கள் என்றார்.

சிற்றூரே உலகமென்ற
சிந்தனை இருந்த காலத்தில்
உலகமொரு சிற்றூர் என்று
உரைத்தவர் வள்ளுவர்!

கற்றவர்க்கு உலகம்
கையில் வரும்!
மற்றவர்க்கோ
அடுத்த தெருக்கூட
அந்நிய தேசந்தான்!

இதை

இருபதாம் நூற்றாண்டில்
எல்லோரும் சொல்கிறார்கள்!

இருபது நூற்றாண்டுகளுக்கு முன்
எப்படி முடிந்தது வள்ளுவனால்!

வள்ளுவன் கை எழுத்தாணி
இதயக் கிழிசல்களை
இழுத்துத் தைக்கும் ஊசி!
நூல் திருக்குறள்!

கிறித்துவம் ஒருவழி
இசுலாம் மறுவழி
இந்துவியம் இன்னொரு வழி!

வள்ளுவமோ
எல்லோருக்கும் பொதுவழி
மனிதகுலப் பொது மொழி!

தமிழ்மறையைச் சிலர்
தவறாகப் புரிந்து கொள்வதுண்டு!

ஆதிபகவன் முதற்றே உலகு

இது ஏட்டுக் குறள்!

சாதிபகவன் முதற்றே உலகு
இது நாட்டுக் குறள்!
இது
தமிழ் மறைக்கே இழுக்கு
தமிழகத்தில் படிந்த அழுக்கு!

திருக்குறள்
விற்பனைக்கு வந்த
கற்பனை நூலல்ல!

திருக்குறள்
செயல்முறை
முயன்றால்
நடைமுறை!

# வெல்லல் அரிது

- கவிஞர் நிர்மலா சுரேஷ்

தமிழன்,
தன் உயரத்தைக் காட்டும்
விழா இது!



சாரமற்றுப் போன
இனத்துக்கு
உணர்வூட்ட வந்த
உப்பளத் துடிப்பு!

திண்ணைகளைச் சுற்றியே
அகழிகள் அமைத்துத்
தீவுகளாய்ப் போன
தமிழர்களுக்குத்
திசைகளைக் காட்டும்
திருநாள்!

கங்கையாடி, காவிரியாடி
குமரித்துறை நீராடி
குற்றங்கள் நீங்கிய
முனிவர்கள் ஏராளம்!

இன்றோ,
ஒரு குவளை வந்து
திருக்குவளை வந்து
குமரியிலே தீர்த்தமாட
இந்தக் கதம்பநிற
மண்வாச
மனக் குறையெல்லாம்
நீங்கியது!

குறளையே வேதமாக்கிய
குவளை - இனி இந்தக்
குவலயத்தையே ஈர்க்கும்!

சிற்பக் கலையும்
கட்டட நுட்பமும்
திறம்படத் தெரிந்த
காரணத்தால்
''கலைஞர்
ஐந்தமிழ் அறிஞர்''
என்றே
கணபதி ஸ்தபதியால்
போற்றப் பட்டவர்!

பத்தினிக்குக் கோட்டம்
கண்ட செங்குட்டுவன்
பத்தினிக்கு இலக்கணம் சொன்ன
செந்நாப் புலவனுக்கு
சின்னம் ஏதும் நிறுவவில்லை!

பல்லவரோ,
பாண்டவர்க்கு
இரதம் சமைத்து
'படைமாட்சி' உரைத்த
பல்நோக்குக் கவிஞனுக்கு
சுவர்ச்சித்திரம் கூடத்
தீட்டவில்லை.

தன்னிகரல்லா இராஜராஜன்
தஞ்சைத் தரணியில்
நிழல் விழாத கோபுரம்
எழுப்பியும்,
கறைபடியாத கருத்துச் சொன்ன
குறளாசிரியன் மீது
சிந்தை செலுத்தவில்லை!

பிற்கால மன்னர்களும்
படையெடுத்து வந்தவரும்
நூற்றுக்கால்
ஆயிரங்கால் மண்டபங்கள்
கட்டினரேயன்றி,



சொந்தக்காலில் நிற்கச்
சொல்லித் தந்த வள்ளுவனுக்குச்
சிலையேதும் வடிக்கவில்லை!

அறம், பொருள், இன்பம்
என்னும் மூன்று மட்டுமே கூறி
மோட்சம் சொல்லாததால்
மோசம் போனானோ
வள்ளுவன்!

மூடப்பட்ட சுரங்கமாய்ப்போன
வள்ளுவனைத்
திறந்ததொரு அரங்கமாக்கியவர்
கலைஞர்.

குறளுக்கு உரையெழுத முயன்று
அதை உறையிலிட்டவர் அநேகம் பேர்.
அதன் மறைபொருளை மன்றத்துக்குக்
கொண்டு வந்த
தென்றல் கலைஞர்.

குறளை மொழிபெயர்த்தார்
G.U.Pope
பொருள் பெயர்த்தார்
கலைஞர்!

திருக்குறள்,
கதைகளுக்குள்ளேயே
தலையைப் புதைத்துக் கொண்ட
நெருப்புக் கோழி அல்ல!

இல்லற துறவறங்களை
முணுமுணுத்து முறையிடும்
சுவர்க்கோழி அல்ல?

அனைத்துலகுக்கும்
சேதி சொல்லும்
அஞ்சல் புறா!

அர்த்தங்களை
சாஸ்திரமாக்கினான் கௌடில்யர்.
அர்த்தங்களை வாழ்க்கையாக்கினான்
வள்ளுவன்

பிளேட்டோவின் அரசியல்
அறத்தின் விருந்தில்கூடக்
கை நனைக்காத ஆசாரம்!

மாக்கியவல்லியின் அரசியல்
அறத்தைத் தன் விருந்துக்கழைத்து
நஞ்சு வைத்துக் கொல்லும்!

வள்ளுவனின் அரசியலோ
அறத்தை மருந்தாக்கித்
தான் விருந்தாகும்

பிளேட்டோவின் குடியரசில்
நீதியுள்ள குடிமகன்
நீதியுள்ள மனிதனில்லை!
அது ஒரு
கடன்கன்னிக் கோட்பாடு!

மாக்கியவல்லியின் 'இளவரசன்'
'தான்' மகுடம் சூடிக் கொள்ள
நீதிக்கு மலர்வளையம் தயாரிப்பவன்
அது ஒரு டயனசார் பண்பாடு!


வள்ளுவரோ
நீதியையும், அரசையும்
இரட்டைக் குழந்தைகளாய்ப்
பிரசவித்தார்!

மனிதன், குடிமகன், தலைவன்
என்று குறளின்
முப்பரிமாணமாய், பிரிசமாய்
நெஞ்சுக்கு நீதி சொல்லி
வாழும் இதயம் ஒன்றுண்டு!
அது 'யார்?' என்னும்
ஊரறிந்த இரகசியத்தை
நிறைவாக நான் சொல்வேன்!

''சொலல் வல்லன்
சோர்விலான் அஞ்சான்
அவனை இகல்வெல்லல்
யார்க்கும் அரிது''

இது- திருக்குறள்
'யுரேகா' சொன்ன இடம்

வள்ளுவன் சுட்டிக்காட்டும்
அந்த மனிதனைப்
பேசி வெல்ல முடியாது எவரும்!




- சொல்லில் வடித்த நினைவுச் சின்னம்
- படிக்கவும் பார்க்கவும் ஒரு மலர்
- கலைஞரின் காதல்!
- ஒன்றே முக்கால் அடியில் ஒரு கைக்குலுக்கல்
- கருத்துக் கருவூலம்

- இவைகள் குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில் வெளியிடப்பட்ட 'கோட்டம் முதல் குமரி வரை' மலர் குறித்து பத்திரிகைகள் அளித்துள்ள பாராட்டுக்கள். அதுபோன்றே ஏராளமானவர்கள் கடிதம் மூலமும் தொலைபேசி மூலமும் பாராட்டியது எங்களுக்கு மகிழ்சியையும் உற்சாகத்தையும் அளித்துள்ளது. அவர்களுக் கெல்லாம் மலர்க்குழுவின் நன்றியும் கைகூப்பும்.

அதுபோன்று பல்வேறு பத்திரிகைகள் மலர் குறித்து வெளியிட்ட விமர்சனங்களைத் தொகுத்து அளிப்பதில் மகிழ்கிறோம்.

★ ★ ★




## சொல்லில் வடித்த நினைவுச் சின்னம்

குமரிமுனையில் நடந்த திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழாவையொட்டி வெளியிடப்பட்ட மலர் - 'கோட்டம் முதல் குமரி வரை'.

கதை, கவிதை, கட்டுரை, ஓவியம் போன்ற பல்வேறு வெளிப்பாட்டு முறைகள் மூலம் குறளின் பன்முகத்தன்மையை உணர்த்திடும் வகையில் மிளிர்கிறது மலர்.

வழக்கமாக மலர்களில் காணப்படும் - குறிப்பாக அரசு சார் மலர்களில் காணப்படும் - மந்தத்தன்மை கிஞ்சித்தும் இம்மலரில் இல்லை என்பது இதற்கான கூடுதல் சிறப்பு.

அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் கட்டுரைகளே இது போன்ற மலர்களில் வழமையாக அணிசெய்யும். ஆனால், இந்த மலரை நவீன இலக்கியப் படைப்பாளிகளின் படைப்புகளும் அலங்கரிக்கின்றன.

அ.ச.ஞானசம்பந்தன், ஜெயகாந்தன், வா.செ. குழந்தைசாமி, கி. ராஜநாராயணன், தமிழண்ணல், கார்த்திகேசு சிவதம்பி, பொன்னீலன், ஜெயமோகன் முதலானோரின் 27 கட்டுரைகளும் சுரதா, அப்துல் ரகுமான், சிற்பி, வைரமுத்து உள்ளிட்டோரின் 9 கவிதைகளும், பிரபஞ்சன், இந்திரா பார்த்தசாரதி, பா.செயப்பிரகாசம், பாலகும்மி பத்மராஜு [தெலுங்கு] ஆகியோரின் கதைகளும் 43 வண்ண ஓவியங்களும் அடங்கிய கனமுள்ள தொகுப்பு இது.

'திருக்குறள் என் சிந்தையை நெய்திருக்கும் செந்நூல்' என்ற தலைப்பில் முதல்வர் கருணாநிதி 36 பக்கங்களில் கட்டுரை தீட்டியிருக்கிறார்.

தன் வாழ்வோடு பின்னிப் பிணைந்த வள்ளுவத்தையும் தனது அரசியல் செயற்பாடுகளில் வள்ளுவப் பணிக்கு அளித்து வந்த முக்கியத்துவத்தையும் உணர்த்தும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

குறளை மையப் புள்ளியாக வைத்து அதன் வழி ஒரு நெடிய வரலாற்று நிகழ்வைக் கோர்வையாகச் சொல்லிச் செல்லும் சிறப்பான உத்தி முறையில் கட்டுரை அமைந்திருக்கிறது.

1927ஆம் ஆண்டு தொடங்கி சொற்பொழிவுகள் மூலமாகவும் எழுத்து வாயிலாகவும் புத்தர் கொள்கைகளையும், திருக்குறளையும் முன்வைத்துப் பெரியார் பிரசாரம் தொடங்கியது. அண்ணா அதைத் தொடர்ந்தது, திரைப்படத்தில் கலைவாணர் பாட்டுருவில் சாதாரண மக்களுக்கும் சென்றடையச் செய்தது. சட்டமன்றத்தில் திருவள்ளுவர் படம் வைத்தது. அரசு போக்குவரத்து ஊர்திகளில் திருக்குறள் வாசகம், திருவள்ளுவர் நாள், மயிலையில் திருவள்ளுவர் சிலை, வள்ளுவர் கோட்டத் தோற்றம், குறளோவியப் பணி, திருக்குறள் உரை...என்று பல்வேறு வரலாற்று போக்குகளைத் தொட்டுச் செல்கிறது இக்கட்டுரை.

தொடர்ந்த அவமதிப்பின் தாக்கத்தாலேயே தமிழகத்தில் தனியாகச் செய்திப் படப்பிரிவு தொடங்கப்பட்டது என்ற விஷயத்தையும் இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது.

மற்றோர் செறிவுள்ள கட்டுரையைத் தந்திருப்பவர் வை. கணபதி ஸ்தபதி. வள்ளுவனைக் கல்லில் வடித்த இச்சிற்பி அந்த மாபெரும் பணி குறித்துச் சொல்லில் வடித்துள்ளார்.

சிற்ப சாஸ்திர ஞானம் ஏதுமற்ற ஓர் எளிய வாசகன் கூட உட்புகுந்து பரவலான மனச்சித்திரங்களை உருவாக்கிக் கொள்ளும் வகையிலான கட்டுரை.

தரைமட்டத்தில் 133 அடி சிலையை நிறுவுவதில் கடினம் ஏதுமில்லை. ஆனால் அலைமோதும் கடல் மீது 3 டன் முதல் 8 டன் வரையிலான செதுக்கிய கற்களைப் படகிலேற்றி, 30 அடி உயரப் பாறை மீது கிரேன் கொண்டு தூக்கி வைத்துச் செய்யும் பணி குறித்து ஸ்தபதி விவரிக்கையில் பிரமிப்பின் உச்சிக்கே செல்ல வேண்டியிருக்கிறது. திருவள்ளுவர் சிலை நிர்மாணம் குறித்தான ஓர் ஆவணப் படத்தைப் பார்த்த திருப்தி இக்கட்டுரையின் வழி கிடைக்கிறது.

வண்ணமயமான ஓவியப் பகுதி மலரின் வனப்பைக் கூட்டும் மற்றோர் அம்சம். ஆதிமூலம், மருது, வீரசந்தானம் உள்ளிட்ட நவீன ஓவியர்கள் குறளுக்கான சித்திரங்களைத் தீட்டியிருப்பது புதிய பரிமாணத்தைச் சேர்க்கிறது.

*அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்*
*சிறுகை அளாவிய கூழ்*

– என்ற குறளுக்கான கோபுலுவின் ஓவியம் – அற்புதமான கவிதை.

ஐ.ஏ.எஸ். அதிகாரி வெ. இறையன்பு இம்மலரைத் தயாரித்திருக்கிறார். தற்கால இலக்கியப் போக்குகளோடு மிகுந்த பரிச்சயமும் இதழியல் அனுபவமும் கொண்டவர். அதனால் 'அரசு வாடை' அடிக்காத மலராக அவரால் கொடுக்க முடிந்திருக்கிறது.

அச்சு, அமைப்பு, உள்ளடக்கம், வைப்புமுறை ஆகியவற்றில் சிரத்தையும், அழகுணர்ச்சியும் பளிச்சிடுகின்றன.

**– தினமணி** *(23–1–2000)*

★ ★ ★

## படிக்கவும் பார்க்கவும் ஒரு மலர்

ஒருமுறை அமரர் குன்றக்குடி அடிகளார் தம் பட்டிமண்டபத் தீர்ப்புரையில் சொன்னார், ''வள்ளுவர் ஏட்டில் வாழ்கிறார்; எழுத்தில் வாழ்கிறார்; எண்ணத்திலும், செயலிலுந்தான் இன்னும் வாழவில்லை'' என்று. இதையேதான் வைரமுத்துவும் நூலில் ''வள்ளுவரை வாழ்வாக்கு வா!'' என அறைகூவல் விடுகிறார்.

'குழலினிது, யாழ் இனிது' என்ற குறள் வரிக்கு ஜெயமோகன் எடுத்தாளும் நித்ய சைதன்யயதியின் சொற்கள் நம்மைச் சொக்க வைக்கின்றன.

''உதடுகளால் முத்தமிட்டு அறியப்படும் குழல்களும், விரல்களால் தொட்டு அறியப்படும் யாழும் என குழந்தையை அறியும் பேரனுபவம்''– அடடா!

'கோட்டம் முதல் குமரி வரை' என்ற நூலின் தலைப்பே கலைஞரின் கட்டுரைக்கும் தலைப்பாகப் பொருந்தும். அவரும், அவர் சார்ந்த இயக்கமும் வள்ளுவர் புகழ் பரப்ப மேற்கொண்ட, நாம் அறிந்த, முயற்சிகளின் தொகுப்பே நீண்ட, நெடிய கட்டுரை வடிவம் பெற்றுள்ளது. நூலில் இது சுருக்கமான முன்னுரையாகி, கலைஞரின் புதிய குறளோவியம் ஒன்று இடம் பெற்றிருந்தால் மலரின் மணம் கூடியிருக்கும் என்று நினைக்காமலிருக்க முடியாது.

தமிழ்க்குடிமகன் 'ஈன்றாள் பசி' என்பதற்கு 'கருவுயிர்த்துச் சில நாட்களே ஆன தாயின் பெரும்பசி' என்று புதிய நய உரைகாண முயன்றுள்ளார். ஆனால் அது பெற்ற தாய் பசிதீர்க்கவும் மகனே கூட சான்றோர் பழிக்கும் செயலை மேற்கொள்ளக் கூடாது என்ற அறக்கருத்தின் ஆழத்தை, வலிமையை இழந்துவிடுகிறதே!

முல்லைவேந்தன் கட்டுரையில், ''வள்ளுவர் திருக்குறளைவிடப் பழைமையான நூல் உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை'' என்கிறார்.

அ.ச. ஞானசம்பந்தனோ, ''தமிழகத்தின் வட பகுதியில் மிகப் பழங்காலத்திலேயே தோன்றி வளர்ந்த வடமொழியார் இயற்றிய தர்ம சாஸ்திரங்களும் வள்ளுவர் காலத்திற்கு முன்னரே பெரிதும் புழக்கத்தில் இருந்தன'' என்கிறார்.

ஜெயகாந்தன் தம்மை மறைத்துக் கொண்டு திரு.வி.க.வையே அதிகம் பேசவிட்டுள்ளார். கணித ஆசிரியர் சிலம்பொலியாரின் 'குறளில் கணித இயல்' குறளாசானின் விரிந்த அறிவை விளக்கி வியக்க வைக்கிறது. கலைக்கோவன் தம் கட்டுரையில் 'தீயாவின்றி...' குறளில் தீக்குக் ''கலோரி'' என்ற பொருளைப் பொருத்திக் காட்டுவதும் இத்தகையதே!

மலரில் கவிதை, கட்டுரைகளோடு குறள் நெறிக் கதைகளுக்கு இடமளித்துள்ளமை பாராட்டுக்குரிய முயற்சி. நான்கும் நான்மணிக்கதைகள்.

நயமான கவிதைகள் மலருக்குப் புகழ் கூட்டுகின்றன. அப்துல் ரகுமான் தம் உரையிடையிட்ட புதுக்கவிதையில் மங்கை மையிடுவதை ''வீட்டிற்குள்ளே அவர், வாசலில் எதற்கு வரவேற்புக் கோலம்?'' என்று சொற்கோலமிடுவது சுகமான கற்பனை.

எழுத்து மலருக்கு மணம் ஊட்டினால் ஓவியம் ஒளி ஊட்டுகிறது. மரபு ஓவியம் மட்டுமல்ல நவீன ஓவியமும் உண்டு. ஓவியர்களுக்கு ஓவியம் மட்டுமே பொறுப்பல்ல. கருத்துக்கிசைய ஓவியம் உருப்பெற வேண்டாமா? சில படங்கள் குறளைச் சரியாகப் பிரதிபலிக்கவில்லை.

இந்தக் குறள் மலர் இனிய ஒரு தமிழ் விருந்து; கல்விக் கூடங்களிலும், நூலகங்களிலும் அனைவரும் பயன்படுத்துமாறு போற்றிப் பாதுகாத்து வைக்க வேண்டிய தமிழ் நிதி!

**– கல்கி** *(23–1–2000)*

★ ★ ★

## கலைஞரின் காதல்!

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின்போது, தமிழக அரசால் வெளியிடப்பட்ட 'கோட்டம் முதல் குமரி வரை' சிறப்பு மலர்

திருவள்ளுவரைப் பற்றிய சிறப்பான தகவல் களஞ்சியம்! திருவள்ளுவர் சிலை திறப்புக்கான காரணம் பற்றியும், நோக்கம் பற்றியும் முதல்வர் கருணாநிதியும் இதில் முப்பத்தி ஐந்து பக்கக் கட்டுரை எழுதியுள்ளார்.

''திருக்குறளும், இதனை யாத்து இவ்வுலகிற்கு அளித்த வாலறிவன் வள்ளுவரும், இளமையிலேயே எனக்கு அறிமுகமாகி, என் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் எனக்கு உரத்தையும், தரத்தையும் தந்து, என்னுள் எங்கும், என்றும் நிறைந்த பொருளாய், எனை முழுதும் வியாபித்துள்ள வியப்பினும் வியப்பாய் விலகாது தொடர்ந்து வரும்...'' என்று கருணாநிதி எழுதியுள்ள வரிகளின் மூலம், அவரது திருக்குறள் தாகத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது.

''1953ஆம் ஆண்டு கல்லக்குடி மறியல் போராட்டத்தில் அவர் கைதாகி சிறை சென்றபோது, சிறைக்குள் முதன்முதலாக 'திருக்குறள் மன்றம்' அமைத்தது; 1964-ல் தமிழக சட்டசபையில் திருவள்ளுவர் படம் திறந்துவைத்தது; 1969-ல் திருவள்ளுவர் நாளை அரசு விடுமுறை நாளாக அரசாணை பிறப்பித்தது; 1966-ல் மயிலாப்பூரில் வள்ளுவர் சிலை திறந்தது; 1967-ல் அரசு பேருந்துகளில் வள்ளுவர் படம் மாட்டி, திருக்குறளை எழுத வைத்தது; சட்டப் பேரவையில் முதல் நிகழ்ச்சியாக திருக்குறள் வாசிக்க வைத்தது;

1968-ல் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது சென்னை கடற்கரையில் வள்ளுவருக்கு சிலை அமைத்தது; காவல்துறையில் சாதனை புரிந்தோருக்கு அளிக்கப்படும் பதக்கத்தில் வள்ளுவர் உருவத்தைப் பொறித்தது; 1971ஆம் ஆண்டு முதல் 'திருவள்ளுவர் ஆண்டு' என கடைபிடிக்க வைத்தது; 1973-ல் வள்ளுவர் கோட்டத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடத்தியது; 1976-ல் கருணாநிதி ஆட்சியில் இல்லாதபோது வள்ளுவர் கோட்டம் திறக்கப்பட்டது. 1985-ல் அவரே குறளோவியம் எழுதியது; அதன் விழாவில் திருவள்ளுவரை ஓவியமாய் வரைந்த ஓவியர் வேணுகோபால் சர்மாவின் குடும்பத்திற்கு 3 இலட்ச ரூபாய் அளித்தது; 1996-ல் திருக்குறள் உரை எழுதியது; 1998-ல் திருவள்ளுவர் விருது பெறுவோருக்கான பரிசுத் தொகையை ஒரு இலட்ச ரூபாயாக அதிகரித்தது; 1975-ல் கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலை அமைக்க முடிவு எடுத்தது; 1979-ல் அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடத்தியது; 1990-ல் சிலை நிறுவும் பணிக்கான நிதி ஒதுக்கீடு செய்தது; 2000-ல் சிலை திறந்தது...''

- என வள்ளுவர் சிலை திறப்புக்கான அடிப்படை நோக்கத்தைப் படிப்படியாகப் புரிந்துகொள்ளும் வகையில் கருணாநிதி தானே எழுதியிருக்கும் இந்த விவரங்கள் திருவள்ளுவர் மீதான அவரது காதலை வெளிப்படுத்துவதாக உள்ளது. வள்ளுவருக்காக அவர் மேற்கொண்ட ஆரம்ப கால முயற்சிகளின் ஒவ்வொரு கட்டத்திலும் நாவலர் நெடுஞ்செழியன் உடன் இருந்ததையும் நன்றி மறவாமல் குறிப்பிட்டிருப்பது அவரது அரசியல் நாகரிகத்திற்கு உதாரணம்.

வள்ளுவர் சிலையைச் செதுக்கிய கணபதி ஸ்தபதி, இப்பணிக்காக ஐநூறு பேர் உழைத்ததாகக் குறிப்பிடுகிறார். அன்பழகன், தமிழ்க்குடிமகன் போன்ற அமைச்சர்கள், தமிழண்ணல், கி. வேங்கட சுப்பிரமணியம், பொற்கோ போன்ற கல்வியாளர்கள், ஜெயகாந்தன், கி. ராஜநாராயணன், பிரபஞ்சன், வைரமுத்து, வாலி போன்ற பிரபல படைப்பாளிகள், ஞானக்கூத்தன், ஜெயமோகன், இந்திரன் போன்ற சிறு பத்திரிகை இலக்கியவாதிகள், பொன்னீலன் போன்ற இடதுசாரி இலக்கியவாதிகள் என சகல தரப்பில் இருந்தும், பல்வேறு பட்ட கொள்கைகள் உடைய எழுத்தாளர்கள் பலரும் இம்மலரில் எழுதியுள்ளனர்.

'வள்ளுவம்' என்ற ஒரே கொள்கை அடிப்படையில், முரண்பாடுகளை மறந்து இம்மலரின் மூலமாக, இவர்கள் இசைந்துள்ளார்கள் என்றே கூறலாம். தமிழில் இப்படி ஒரு மலர் இப்போதுதான் முதல்முறையாக வருகிறது. ஆகவே, இம்மலரின் வெற்றிதான் . கருணாநிதியை எழுத்தாளராக அங்கீகரிக்காத ஒரு சிலரும் இம்மலரில் எழுதியிருப்பது இன்னொரு சிறப்பம்சமாக உள்ளது.

வள்ளுவரைப் பற்றிய பரிமாணங்களை கதைகள், கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள் என பல வடிவங்களாக இம்மலரில் பார்க்க முடிகிறது. மணியன் செல்வம், பத்மவாசன், கோபுலு, மனோகர், ஆதிமூலம் என பிரபலங்கள் பலரும் திருவள்ளுவருக்கான ஓவியங்களை வரைந்துள்ளனர்.

மலரில், 1330 திருக்குறள்களையும் உரையோடு பிரசுரித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இம்மலர் சம்பிரதாயமான மலராக இல்லாமல், அரசின் சாதனை விளக்க மலராகவும் இல்லாமல், முழுக்க முழுக்க திருவள்ளுவரின் மலராக இருப்பதுதான் மற்ற எல்லாவற்றையும் விட சிறப்பு! விலை ரூ.100.

**- இதயம் பேசுகிறது** *(23-1-2000)*

★ ★ ★

## ஒன்றே முக்கால் அடியில் ஒரு கைக்குலுக்கல்

குமரிமுனை திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில் தமிழக அரசு வெளியிட்ட 'கோட்டம் முதல் குமரி வரை' என்ற மலர்தான். அரசாங்க கெஜட் போல் போரடிக்காமல் பக்கத்துக்குப் பக்கம் படைப்புகளாலும், படங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது வெகு அழகு. ஜெயகாந்தன், அப்துல் ரகுமான், வாலி, வைரமுத்து, இந்திரா பார்த்தசாரதி, வலம்புரிஜான் என்று இலக்கியவாதிகளெல்லாம் அழகுக்கு அழகு செய்திருக்கிறார்கள். கடைசியாக, வள்ளுவர் சிலையை அமைத்த கணபதி ஸ்தபதியின் ஆராய்ச்சிக் கட்டுரைக்கு ஒரு டாக்டர் பட்டமே கொடுக்கலாம். நூறு ரூபாயில் ஓர் இலக்கியப் பெட்டகத்தைத் தந்த சிலை திறப்பு விழா மலர்க்குழுவிற்கு ஒன்றே முக்கால் அடியில் ஒரு கைக்குலுக்கல்.

**- குமுதம்** *(3-2-2000)*

★ ★ ★

## கருத்துக் கருவூலம்

ஒரு நூலைப் பார்த்தவுடன் படிக்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் அதன் அட்டை அமைந்திருக்க வேண்டும் என்ற விதியில் தொடங்கி, கதை, கவிதை, கட்டுரைகளை எப்படி வரிசைப்படுத்துவது? யார் யாருக்கு எந்தெந்த இடம்? எழுத்துக்கு இடையே இடம்பெற வேண்டிய சிறிய சிறிய ஓவியங்கள் வரை எந்த ஒரு சிறிய அம்சத்தையும் தவறவிடாமல் உன்னிப்பாகக் கவனித்து ஒரு மலரை உருவாக்க முடியுமா?

முதன் முதலாக இந்த கேள்விக்கு முடியும் என்ற பதிலை அளித்திருக்கும் முதல் குழு குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா மலர்க்குழு, இக்குழு எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகமாகவே சாதித்திருக்கிறது! பழந்தமிழர் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் காட்சிகளைப் பின்னணியாகக் கொண்டு குமரிமுனையில் வான்முட்ட எழுந்து நிற்கும் வள்ளுவர் சிலையின் எழிலுருவை முதற் பக்கத்திலும், வள்ளுவர் கோட்டத்தின் தேரை கடைசிப் பக்கத்திலும் மணியன் செல்வன் வரைந்த ஓவியத்தை அட்டைப்படமாகக் கொண்ட ''கோட்டம் முதல் குமரி வரை'' என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள இந்த மலர் பார்த்தவுடன் படிக்க தூண்டும் அழகோடு விளங்குகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்த நூற்றாண்டின் - புத்தாயிரம் ஆண்டின் - விடியலில் தமிழகம் பெற்ற பெரும் பேறான தென்குமரி திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவையொட்டி வெளியிடப்பட்டுள்ள இந்த நூலில் அரசால் வெளியிடப்பட்ட நூல் என்று நம்ப முடியாத அளவிற்கு வெளியீட்டுத் துறையின் விற்பன்னர்களின் கை வண்ணத்திற்கு இணையாக வளம் மிகுந்ததாக இந்த மலர் அமைந்துள்ளது.

மலரைத் திறந்ததும் மணியன் செல்வன் வரைந்த வள்ளுவர் படமும் அதைத் தொடர்ந்து முதல்வர் கலைஞரின் வண்ணப் படமும் வரவேற்கின்றன. ''திருக்குறள் என் சிந்தையை நெய்திருக்கும் செந்நூல்'' என்ற முதல்வர் கலைஞரின் கட்டுரை முதலாவதாக இடம் பெற்றுள்ளது. அதில் திருக்குறளோடும், திருவள்ளுவரோடும் தனக்குள்ள ஈடுபாட்டை மட்டுமின்றி திராவிட இயக்க வரலாற்றில் திருக்குறளும், திருவள்ளுவரும் பெற்றிருந்த சிறப்பையும் முதல்வர் கலைஞர் அவர்கள் தொகுத்து வழங்கியிருப்பது சிந்தையள்ளும் வகையில் சிறப்பாக உள்ளது.

முதல்வர் கலைஞரின் கட்டுரையைத் தொடர்ந்து கல்வியமைச்சர் பேராசிரியர், அமைச்சர்கள் தமிழ்க்குடிமகன், வ. முல்லைவேந்தன், எழுத்தளார் ஜெயகாந்தன், அ.ச.ஞானசம்பந்தன், கார்த்திகேசு சிவத்தம்பி, சிலம்பொலி சு.செல்லப்பன், கி.ராஜநாராயணன், வ.செ.குழந்தைசாமி, தேனுகா, சா.கந்தசாமி, மு.ஆனந்தகிருஷ்ணன், இரா.கலைக் கோவன், கி.வேங்கட சுப்பிரமணியம், தமிழண்ணல், அரசு மணிமேகலை, செ.அ. வீரபாண்டியன் மற்றும் ஆ.பத்மாவதி, பொற்கோ, சுந்தர ஆவுடையப்பன், இரா.செல்வகணபதி, ம.இராசேந்திரன, இந்திரன், பொன்னீலன், வலம்புரி ஜான், ஜெயமோகன், வை.கணபதி ஸ்தபதி ஆகியோரின் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. கணபதி ஸ்தபதி திருவள்ளுவர் சிலை உருவான வரலாற்றை நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறார்.

தமிழகத்தின் தலைசிறந்த கவிஞர்களான சுரதா, அப்துல்ரகுமான், சிற்பி, ஞானக்கூத்தன், ஈரோடு தமிழன்பன், அழகிய சிங்கர், அறிவுமதி, வாலி, வைரமுத்து ஆகியோர்களின் கவிதை மணமும் மலருக்கு மேலும் மணம் சேர்க்கிறது.

இவற்றோடு பிரபஞ்சன், இந்திரா பார்த்தசாரதி, பா.செயப்பிரகாசம், பாலகும்மி பத்மராஜு ஆகியோரின் கதைகளும் இடம்பெற்றுள்ளன.

திருக்குறளுக்கு விளக்கமளிக்கும் அற்புதமான ஓவியங்களும் இடையிடையே மலர்ந்து மணம் வீசுகின்றன. மணியன் செல்வன், மாருதி, ஆதிமூலம், ஆர். இளங்கோவன், பத்மவாசன், கோபுலு, மனோகர், வீரசந்தானம், கவுரிசங்கர், விஸ்வம், முத்து கிருஷ்ணா, வேதா, கோபால், சந்துரு, அருள், சிவகுமார், எம். இராமசாமி என்று ஏராளமான ஓவியர்களின் படையெடுப்பில் ஓவியங்கள் வண்ணக் களஞ்சியமாக மிளிர்கின்றன!

ஒவ்வொரு பக்கத்தையும் நினைத்து நினைத்து அழகுபடுத்தி அற்புதமாக வடிவமைத்திருக்கிறார் பத்மவாசன்.

மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளில் பல ஆய்வுக் கட்டுரைகள் என்ற அளவிற்கு உயர்வானவை! இவ்வாறு ஓரே நேரத்தில் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் மலர் இதுவரை வெளிவந்ததில்லை என்று கூறலாம்.

விழாவில் பேசிய குமரிஅனந்தன் காலப்பெட்டகம் புதைக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார். அது நிறைவேறவில்லை. இந்த மலரை - கம்ப்யூட்டர் மூலமோ, வேறு நவீன வசதிகள் மூலமோ - பத்திரமாக பாதுகாத்தால் அவருடைய ஆசை நிறைவேறும். அந்த அளவிற்கு கருத்து கருவூலமாகவும், இலக்கியப் பெட்டகமாகவும் இந்த நூலை உருவாக்கி 100 ரூபாய்க்கு வழங்கிய மலர்க்குழு பாராட்டுக்குரியது! அரசு வெளியிட்டதால் தான் இது சாத்தியமாகியுள்ளது. தனியார் எவரும் இத்தகைய மலரை உருவாக்கினால் அதன் விலையை குறைந்தபட்சம் 3 மடங்காகவாவது உயர்த்தினால் தான் அடக்க விலையாவது கிடைத்திருக்கும்!

திருவள்ளுவர் சிலை வைத்த பெருமையோடு இந்த மலர் வெளியிட்டதன் மூலமும் தமிழக அரசு பெருமைக்குரியதாக உயர்ந்துள்ளது.

– *முரசொலி (புதையல்) 30-1-2000*

★ ★ ★

# தலைவர்கள் புகழாரம்

திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். அவ்வுரைகளிலிருந்து....

### திரு. மூப்பனார்

"இந்த இனிய விழாவில் கலந்துகொண்டு பேசுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இங்கு எல்லோரும் வள்ளுவரையும், கலைஞர் பற்றியும் பேசிய பிறகு என்னால் என்ன பேசுவதென்று தெரியவில்லை. 133 அடி உயரத்திலே உலகத்திலே எங்கும் சிலை அமைத்ததாக எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட சாதனையைச் செய்த கலைஞரை நான் பாராட்டுகிறேன்.

வள்ளுவரை பெருமைப்படுத்துகின்ற வகையிலே கலைஞர் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலைஞருக்கு பெருமை செய்ய எனக்கு ஒன்றுதான் தோன்றுகிறது. அதை நீங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் எல்லோரும் எழுந்து நின்று கைதட்டி அவருக்குப் பாராட்டுத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### திரு. வாழப்பாடி இராமமூர்த்தி

"இன்றைக்கு புதிய நூற்றாண்டின் தொடக்கம். இந்த வேளையில் தமிழர்களுடைய சிறப்பும் வள்ளுவத்தினுடைய மாண்பும் உலகம் முழுவதும் எடுத்துரைக்கக் கூடிய வகையில் சாதனையைப் புரிந்திருக்கின்ற முதல்வர் கலைஞர் அவர்களை வணங்கி வாழ்த்த நான் கடமைப்பட்டுள்ளேன்.

இங்கே அறிஞர் பெருமக்கள் குறிப்பிட்டதைப் போல 133 அடி உயரத்திற்கு சிலை செய்து, இந்தச் சிலையை 25 ஆண்டுக்காலமாக தன்னுடைய கனவிலே தேக்கி இன்றைக்கு செயல் வடிவமாக்கியிருக்கிற முதல்வர் கலைஞர் அவர்களை தமிழகம் மட்டுமல்ல; உலகத்திலே இருக்கக்கூடிய தமிழ்ச் சமுதாயம் என்றைக்கும் மறக்காது.



திருக்குறளும் வள்ளுவமும் தமிழகத்தில் மட்டுமல்ல; எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் செந்நாப் புலவருடைய புகழ் பரவியிருக்கிறது. அதற்கு தேசிய இயக்கம் மட்டும் காரணமல்ல; திராவிட இயக்கம் முக்கிய காரணம் என்பதை பெருமையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வள்ளுவரின் புகழைப் போல இந்தச் சிலையும் நீண்ட நெடிய காலம் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு முதல்வர் கலைஞர் அவர்கள்; ஒரு குழந்தையைப் பெற்ற தாய்க்கு எந்த அளவுக்கு அந்தக் குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் இருக்குமோ அதைப் போல எண்ணி இருக்கிறார்.

இங்கே பேசியவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முதல்வர் கலைஞர் அவர்கள் முன் எடுத்து வைத்தார்கள்.

தமிழ்மொழி மேடைப் பேச்சுக்கள் மூலமாகவும், எழுத்து மூலமாகவும் வளர்ந்தது என்பதை, தமிழர்கள் வரலாற்றினைக் காலப்பெட்டகமாக அதனை உருவாக்கி பதியவைக்க வேண்டும் என்பது தான் எனது கோரிக்கை.

முதலமைச்சர் கலைஞர், இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தமட்டிலுமல்ல; உலகளவிலே செய்திருக்கக் கூடிய சாதனை சாதாரண சாதனை அல்ல.

தமிழ் உள்ள அளவும் பூமி உள்ளளவும் இந்தப் புகழ் வாய்ந்த சிலை, முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட சிலை நீடித்து நிற்கும். வள்ளுவர் புகழ் ஓங்கும், முதலமைச்சர் கலைஞர் அவர்களின் புகழும் சாதனையும் ஓங்கும்".

## திரு. வைகோ

"மலர்ந்திடும் புத்தாயிரம் நல்லாயிரமாக திகழ்ந்திட மனிதகுலத்திற்கே வழிகாட்டிய திருவள்ளுவரின் திருவுருவச்சிலையை அண்ணன் கலைஞர் அவர்கள் தனது திருக்கரங்களால் இன்று திறந்து வைத்திருக்கின்றார்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு செப்டம்பர் மாதம் 6ஆம் தேதியன்று இதே கடற்கரையில் வள்ளுவர் சிலைக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றபோது அண்ணன் பேராசிரியர் அவர்கள் கலந்துகொண்ட விழாவிலே கலைஞர் அவர்கள் பேசும்போது கூறிய சொற்கள் இன்னமும் என் செவிகளிலே ரீங்காரம் செய்துக் கொண்டிருக்கின்றன.

இரவு நேரங்களிலே பாறையின் மீது படுகின்ற உளியின் ஓசை என் செவிகளில் விழும். விவேகானந்தர் மண்டபம் எழுப்பிய நிகழ்ச்சி என் மனதிலே படும். திருவள்ளுவருக்கு சிலை அமைக்க வேண்டுமென்று இந்த அடிக்கல் நாட்டு விழா நடைபெறும் நேரத்தில் என் மனக் கண்களிலே எண்ணிப் பார்க்கிறேன். கனவு காணுகிறேன், தமிழகத்தின் கோடான கோடி மக்கள் நேரடியாகவும், தொலைக்காட்சி வாயிலாகவும் காணுகிற அந்தத் திருநாளை எதிர் நோக்குகிறேன். அந்த நாள் வராதா என்று கனவு காணுகிறேன் என்று பேசினீர்களே அண்ணன் கலைஞர் அவர்களே அந்தத் திருநாள் வாய்த்திருக்கிறது. அந்த விழாவில் கலந்துகொண்டு பேசியவன் என்ற முறையில் நான் நன்றி தெரிவிக்கிறேன்.

இன்று புத்தாயிரத்தின் முதல் நாள். உலகிலே பல பேர் இந்த நாளை கொண்டாடுகிறார்கள். நீங்கள் இந்தச் சிலையைத் திறந்துவைத்திருக்கின்றீர்கள். இந்த விழாவிற்கு ஈடாக எந்த விழாவும் இல்லை என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

உலகில் யாருக்கும் இப்படியொரு சிலை அலைகடலில் எழுப்பப்பட்டதில்லை. ஒரு வீரனை ஒரு வீரன்தான் மதிக்க முடியும். ஒரு கவிஞனை இன்னொரு கவிஞன்தான் மதிக்க முடியும். எங்கள் தமிழகத்தின் கொற்றவனே! ஒரு கவிஞன் என்ற காரணத்தினால் கலைஞர் அவர்களே! நீங்கள் இந்தச் சிலையைத் திறந்து வைத்திருக் கின்றீர்கள்.

திருவள்ளுவருக்கு பத்துப் பேர் உரை எழுதியிருக்கிறார்கள். கலைஞர் அவர்களே! நீங்கள் குறளோவியம் தீட்டினீர்கள். வான்புகழ் வள்ளுவனுக்குக் கோட்டம் கண்டீர்கள். இன்று சிலையைத் திறந்துவைத்திருக்கின்றீர்கள். இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் வரும். அப்பொழுதெல்லாம் இந்த நாளை தமிழ்க்குலம் நினைவிலே வைக்கும். இந்த நாளும், நீங்களும் வரலாற்றின் பொன் எழுத்துக்களிலே நிலைத்து நிற்பீர்கள்.

உலகம் பல்வேறு நிகழ்ச்சிகளை அதிசயங்களாக நிர்மாணித்திருக்கின்றது. இங்கே எழுந்திருக்கிற திருவள்ளுவர் சிலை பலருடைய சிந்தனைச் செல்வமாக, வரலாற்றுச் சின்னமாக எழுந்திருக்கிறது. ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுந்த முதல் தமிழ்ச் சங்கம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இடைச் சங்கம். பல சிந்தனையாளர்களை அறிஞர்கள் வரிசைப்படுத்துவார்கள். ஆனால் எந்தச் சிந்தனையாளர்களுக்கும் எட்டாத கருத்துக்களைத் தந்தார் நம்முடைய திருவள்ளுவர்.

அமைதி நிலவுகிற இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கிறேன். வாழ்க்கையில் வந்து போகிற நாட்கள் எல்லாம் சிறப்புடைய நாட்கள் அல்ல. அலைகளின் ஓசை எழுகிறது. மோனமான இரவுகளில் மக்கள் அயர்ந்து தூங்குகின்ற இரவு நேரங்களில் இந்த கன்னியாகுமரி கடல்களின் அலை ஓசை பாறைகளில் மோதிக் கொண்டே இருக்கும். அந்த அலைகள் எழுப்புகின்ற ஓசைகளின் ஒலி 'குறள், குறள்' என்றே ஒலிக்கும், 'வள்ளுவர், வள்ளுவர்' என்றே ஒலிக்கும், 'கலைஞர், கலைஞர்' என்றே ஒலிக்கும். அந்த ஒலியிலே தமிழ்த் தாயின் அருள்மழை இணைந்திருப்பதைக் கேட்கிறேன். பேரறிஞர் அண்ணாவின் வாழ்த்தொலி இணைந்திருப்பதைக் கேட்கிறேன். வளரட்டும் வள்ளுவர்! உயர்வடையட்டும் தமிழகம்!"

**திரு. சங்கரய்யா**

"குமரிமுனையில், திருவள்ளுவருக்கு சிலை எழுப்பி இருப்பதற்கு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக் குழுவின் சார்பாக என்னுடைய இதய பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக நான் இங்கே சொல்ல விரும்புவது; பயிற்றுமொழி. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமல்ல; கல்வியின் அனைத்து மட்டங்களிலும் தமிழ்மொழிதான் பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் தாய் மொழியில் கல்வி கற்றால்தான் அந்தக் கல்வி நிலைத்து நிற்கும்.

அனைத்துப் பள்ளிகளிலும் ஐந்தாம் வகுப்புவரை தமிழ் பயிற்று மொழியாக்க வேண்டும் என்ற தமிழக அரசின் ஆணையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது".

**திரு. இல. கணேசன்**

"திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின் போது மெல்ல மெல்ல ஒளி வந்தது. இரவில் ஒரு அருணோதயம் போல் அற்புதக் காட்சி தெரிந்தது. இதைச் செய்தவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

இன்று காலை நான் எங்கள் கட்சி அமைப்புக் கூட்டத்தில் கலந்துகொண்ட நிலை வேறு. இப்போதைய மனநிலை வேறு, இந்தியாவில் தேசபக்தி துறவி என்று புகழ் பெற்றவர் விவேகானந்தர். தெய்வப் புலவர் என்ற புகழுக்குரியவர் திருவள்ளுவர் மட்டுமே.

**திரு. நல்லக்கண்ணு**

"திருவள்ளுவர் உலக சிந்தனையாளர் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அவர் சொன்னதை இன்றும் மதித்து யோசித்து

செய்ய வேண்டியதிருப்பதால் நாம் இன்றும் திருக்குறளை பாராட்டிக் கொண்டு இருக்கிறோம். விவேகானந்தர் வங்கத்தில் பிறந்தாலும் தமிழர்கள் தான் அவரை அடையாளம் கொண்டு சிகாகோ நகருக்கு அனுப்பினர். அவருக்கு இன்று கன்னியாகுமரியில் நினைவு மண்டபம் எழுப்பப்பட்டுள்ளது. அதன் அருகே 133 அடி உயர திருவள்ளுவர் சிலை அமைத்து இருப்பது பொருத்தமாகும்.

கலைஞர் கற்பனை வளத்தில் அடிக்கு ஒரு அதிகாரம் வைத்து சிலையை எழுப்பி உள்ளார். இந்த சிலை வந்தது இந்தியாவுக்கும், தமிழுக்கும், உலகுக்கும் பெருமை. இந்த சிலையை கலைஞர் விசுவரூபமாக வடிவமைத்துள்ளார். இதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். புத்தாண்டில் புது மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும். அதற்கு திருவள்ளுவர் காட்டிய வழியில் நாம் அனைவரும் பாடுபட வேண்டும். இது தான் திருவள்ளுவர் சிலைக்கு நாம் செய்ய வேண்டிய கடமை".

## திரு. இராம. வீரப்பன்

"தமிழனின் வரலாற்றில் எழுச்சியும்— வீழ்ச்சியும் ஏற்பட்டதுண்டு. வள்ளுவர் வரலாற்றிலும் எழுச்சியும் – வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. 1975ஆம் ஆண்டு கலைஞரால் தொடங்கப்பட்டு தடைப்பட்டது. 1979இல் எம்.ஜி.ஆர். கலைஞர் எண்ணியதை நான் நிறைவேற்றுகிறேன் என்று அப்போதைய பிரதமரை கூட்டிவந்து அடிக்கல் நாட்டினார். பிறகு எம்.ஜி.ஆர். 89ஆம் ஆண்டு மறைந்தார். பின்னர் வந்த கலைஞர் அரசு, தொட்ட பணியைத் தொடங்கியது. 2 ஆண்டில் கலைஞர் ஆட்சி அப்போது போனது.

மீண்டும் கலைஞர் முதலமைச்சராக வந்து, தொட்டப் பணியைத் தொடர்ந்து முடித்து வள்ளுவர் சிலையை இங்கே திறந்துவைத்துள்ளார். தமிழ் இருக்கும் வரை கலைஞரை இந்த உலகம் மறக்காது".

## திரு. எஸ். திருநாவுக்கரசு

"அரசன் நெடுங்கிள்ளிக்கு பிறகு புலவனாகவும், அரசனாகவும் விளங்குகிறார் கலைஞர் அவர்கள். வள்ளுவரின் மறுபதிப்பாக அவர் விளங்குகிறார். குறளோவியம் கண்டவர். வள்ளுவர் கோட்டம் அமைத்தவர். இப்போது வள்ளுவருக்குச் சிலை அமைத்துள்ளார்".

## திரு. கோவை செழியன்

"தமிழ்மொழி இருக்கிற வரை கலைஞர் பெயர் நிலைத்து நிற்கும். 10 ஆண்டு காலமாக கர்நாடகாவில் வள்ளுவருக்கு சிலை வடிவமைத்து அதை திறக்க முடியாமல் உள்ளது. ஏன் யாராவது இதை கேட்டோமா? போராடினோமா? அப்போது என்ன இந்தியா? இந்திய தேசம் அங்கே வள்ளுவரை எல்.டி.டி.ஐ.யை சேர்ந்தவர் என்று வர்ணிக்கின்றனர்.

தமிழரிடையே தமிழன் என்ற உணர்வு உருவாக வேண்டும். ஒற்றுமை உருவாக வேண்டும். தமிழை காப்பாற்ற இந்திய கம்யூனிஸ்டு செயலாளர் நல்லக்கண்ணு கூறியதைப் போல அனைத்து தலைவர்களும் ஒன்று சேர வேண்டும். அந்த வேலையை இன்றே நீங்கள் செய்யுங்கள். அதை நிறைவேற்ற நாங்கள் தயாராக இருக்கிறோம்".

## திரு. குமரி அனந்தன்

"அய்யன் சிலையினைத் திறந்துவைக்க வேண்டுமென்ற எண்ணம் கலைஞர் உள்ளத்திலே உதித்தது. உதித்த எண்ணம் இன்று உருபட்டு எழுந்து நிற்கின்றது. அதிலே ஒளிவெள்ளம் பாய்ச்சும் நேரத்தில் நமது உள்ளமெல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்திலே திளைத்து எத்தனையோ பேர் அந்தக் குறளுக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்று சொல்லி கல்லிலே ஓவியம் வடித்தார்கள். ஆனால் கலைஞர் அவர்களுக்குக் கல்லிலே ஓவியம் வடித்தவர்கள் யாரும் இல்லை.

இங்கே அமைக்கப்பட்டுள்ள வள்ளுவர் சிலையைத் திரும்பிப் பார்க்கிறேன். குமரிக்கு எத்தனை எத்தனை பெருமையை கலைஞர் சேர்த்திருக்கிறார். கலைஞர்தான் விவேகானந்தருக்கு நினைவுச் சின்னத்தை எழுப்பினார். மகத்தான மனிதர் என்று நீங்கள் எழுதிய கட்டுரையையும் நான் படித்தேன். விவேகானந்தருக்கு நினைவுச் சின்னம் எழுப்பியபோதும் அதிலே உங்களுடைய கை வண்ணம் இருந்தது.

இங்கே பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவகத்திற்கு அடிக்கல் நாட்டியதும் நீங்கள்தான். காட்சிக்கு எளியவனாக இருக்க வேண்டுமென்ற வள்ளுவனுக்கு இலக்கணமாக விளங்கிய ஒரு மனிதனுக்கு நாங்கள் பல ஆண்டுகாலம் போராட்டம் நடத்திய பிறகு கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதானே காமராஜர் நினைவகத்திற்கு அடிக்கல் நாட்டும் பெரும் பேறு கிடைத்தது. நான் உங்கள் கையாலே அந்த நினைவு மண்டபத்தை திறந்துவைத்து குமரிக்கு மேலும் பெருமை சேர்க்கிறீர்கள் என்பதை எண்ணி பூரிப்படைகிறேன்.

இங்கே உள்ள காந்தி மண்டபத்தின் உள்ளே அக்டோபர் 2ஆம் தேதி சூரிய ஒளி விழும். ஆனால் வள்ளுவரின் சிலையிலே எப்போதும் சூரிய ஒளி விழும். சந்திரன் ஒளியும் விழும், வெள்ளியின் ஒளியும் விழும். எல்லா ஒளியும் எந்நேரமும் விழும். தமிழுக்கு புதிய வாழ்வு கொடுத்துக் கொண்டிருக்கும் முக்கியமான நிகழ்ச்சி இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வள்ளுவனுக்கு கடலுக்கு மேலேயே நீங்கள் சிலை வைத்தீர்களே அது எவ்வளவு பெரிய காரியம். காமராஜர் முதலமைச்சராக இருந்த நேரத்தில் பத்தாவது வகுப்பு பாடத்திலே திருக்குறளை வைக்கவேண்டுமென்று சொன்னார். தமிழாசிரியர்கள் இன்று அணி வகுத்து வந்தார்களே அவர்களை நான் பாராட்டுகிறேன். கலைஞர் அவர்களின் கரத்தை பலப்படுத்துவதற்கு தமிழாசிரியர்கள் புறப்பட்டு வந்ததனை நான் பாராட்டுகிறேன். தமிழே பயிற்றுமொழி என்ற அற்புதத்தைச் சொன்ன கலைஞர் அவர்களுக்கும் நாம் பாராட்டு தெரிவிக்க வேண்டும்.

இன்று தமிழுக்கு நாம் வாழ்வு கொடுக்க வேண்டும். தமிழ் ஆசிரியர்கள் தலைமையாசிரியர்களாக ஆக முடியாதென்ற நிலையை மாற்றி பெருந்தலைவர் காமராஜர் ஆணையிட்டதைத் தொடர்ந்து எத்தனை எத்தனை காரியங்களை நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை எண்ணி எண்ணி நாங்கள் பெருமைப்படுகிறோம்.

நேற்று கவிதை பாடியபொழுது கரும்புக்குப் பக்கத்திலே வேம்பா என்று கேட்டீர்கள். நான் சொல்கிறேன். இந்த நாட்டிற்கு வேம்பு ஒரு இடத்திற்கு நிச்சயமாக வேண்டும். ஏனென்றால் உங்களிடம் அரசு இருக்கிறது. அரசுக்கு பக்கத்திலே வேம்பும் சேர்ந்திருந்தால்தானே இந்த நாட்டிலே சக்தி உண்டு என்று பரம்பரையாக நாம் சொல்லி வருகின்றோம். எனவே அரசை வைத்திருக்கின்ற நீங்கள் அரசாக இருந்து கொண்டிருக்கின்ற நீங்கள் அது நல்ல காற்று வரவேண்டுமென்பதற்காக பூச்சி அரித்து விடக்கூடாதென்பதற்காக தமிழை எந்தப் பூச்சியும் அரித்து விடக்கூடாதென்பதற்காக நீங்கள் வேம்பாகவும் இருத்தல் வேண்டும். நீங்கள் அரசாகவும் இருத்தல் வேண்டும். இந்த வேப்பங்காற்றும் அரசங்காற்றும் சேர்ந்தால் தமிழை எந்த பூச்சியும், புழுவும் அழித்துவிடாமல் நாம் பார்த்துக் கொள்ளமுடியும். எனவே நீங்கள் அரசாகவும் இருத்தல் வேண்டும் வேம்பாகவும் இருத்தல் வேண்டும்.

இன்று திக்கெல்லாம் புகழுகின்ற அளவுக்கு உங்கள் பெயர் போயிருக்கிறதே திக்கெல்லாம் புகழ் பரவுகின்ற அளவுக்கு இந்தப் பணியை நீங்கள் செய்ததற்கு நான் பெருமைப் படுகிறேன்.

இங்கே பெருந்தலைவர் காமராஜருக்கு மணிமண்டபம் எழுப்பியதை நினைத்துப் பார்த்து, இப்பொழுது நீங்கள் ஆட்சி செய்கிற அற்புதத்தையும் எண்ணிப் பார்த்து ஒன்றைச் சொல்கிறேன்.

இப்பொழுது தலையெழுத்தையெல்லாம் பலர் ஆங்கிலத்திலே எழுதுகின்றார்கள். ஆனால் நீங்கள் மு. கருணாநிதி என்றே தமிழில் எழுதுகிறீர்கள். உங்களுடைய புதல்வர் ஸ்டாலின் இருக்கிறாரே அவர் மு.க.ஸ்டாலின் என்றுதான் எழுதுகிறார். ஆனால் எங்களிலே பலபேர் தலையெழுத்தை ஆங்கிலத்திலே தான் எழுதுகிறார்கள். எனவே இந்த புத்தாயிரம் ஆண்டிலிருந்து திருவள்ளுவர் சிலையைத் திறந்துவைத்திருக்கிற நேரத்தில் உங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்வது, வருகிற கல்வி ஆண்டிலிருந்து எந்தக் குழந்தையைப் பள்ளியில் சேர்த்தாலும் தந்தையின் தலையெழுத்தை போடுகிற போது அதை தமிழிலேதான் போடவேண்டுமென்ற ஒரு சட்டத்தை, பெயருக்குப் பின்னால் சாதி என்ற வால் சேர்க்கக்கூடாதென்ற ஒரு சட்டத்தை நீங்கள் கொண்டுவந்து தமிழனுடைய தலையெழுத்தும் தமிழ்தான் என்று சொல்கிற நிலையினை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்".

## டாக்டர் கிருஷ்ணசாமி

"குறள் தந்த வள்ளுவருக்குச் சிலை அமைத்த கலைஞரை பாராட்டுகிறேன். 2 ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் அப்போது ஆண்ட மன்னர்கள் திருக்குறளை அரங்கேற்ற தயக்கம் காட்டியது ஏனோ?

இயேசு மனிதராக பிறந்தார். அவரது கருத்துக்கள் உலகம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அவரது கருத்துக்கள் சமூக மாற்றத்துக்கு உதவியாக இருந்தது. இதுபோல் முகமது நபி, புத்தரின் கருத்துக்களும், சமூக மாற்றத்துக்கு உதவியாக இருந்தது. சமூக மாற்றத்துக்கு வள்ளுவரின் குறளில் உள்ள கருத்துக்கள் உள்ளது.

திருக்குறளுக்கு என்ன காரணமோ இன்று வரை அங்கீகாரம் இல்லை. இயேசு பிரானுக்கு தமிழகத்தில் சீடர்கள் உள்ளனர். முகமது நபிக்கு சீடர்கள் உள்ளனர். புத்தருக்கு சீடர்கள் உள்ளனர். இவர்களின் ஒத்தக்கருத்தைக் கொண்ட வள்ளுவருக்கு ஏன் சீடர்கள் இல்லை. எங்கே தவறு நடந்தது. எப்போது சீரமைக்கப் போகிறோம்.

தமிழ் மண்ணில் வள்ளுவனின் வழி நடக்க ஏன் தமிழன் உருவாகவில்லை. வள்ளுவன் பிறந்த மண்ணில் இன்று குலத்துக்கு குலம் நீதி இருக்கிறதே? திருக்குறள் எதற்கு போற்றி புகழ் பாடவா? 2 ஆயிரம் ஆண்டுகள் எப்படியோ கடந்து விட்டது. இனிமேலாவது ஏற்றத்தாழ்வுகள் ஒழிய கலைஞரே செயல் திட்டம் தீட்டுங்கள் அதற்கு நாங்கள் உறுதுணையாக இருக்கிறோம்".

## திரு. சிவாஜி கணேசன்

"விழாத்தலைவர் அவர்களே; என் அருமை நண்பரைக் கொண்டு வள்ளுவர் சிலையைத் திறந்துவைத்து நீங்கள் சரித்திரத்தை ஆரம்பித்திருக்கிறீர்கள். இது விழாவாக சில பேருக்குத் தெரியும். ஆனால் சரித்திரம். இந்த நூற்றாண்டு ஆரம்பிக்கிற நேரத்தில் தமிழனின் சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். அதில் வள்ளுவரும் என் அருமை நண்பர் கலைஞரும்தான் இருப்பார்கள்".

## திரு. டத்தோ சாமிவேலு

"20ஆம் நூற்றாண்டில் ஈடுஇணையற்ற தலைவராக கலைஞர் உள்ளார். உலகில் உள்ள அனைத்து தமிழர்களுக்கும் ஒரே தலைவராக கலைஞர் உள்ளார். இன்று தமிழகத்தின் தலைநகரை குமரியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழகமே குமரியில் திரண்டுள்ளது. திருவள்ளுவர் சிலை அமைவதால் தமிழர் கலாச்சார பண்பை எடுத்துக் கூறுவது மட்டுமல்லாமல் தமிழர் நெறிமுறைகளையும் எடுத்துக் காட்டும் மாபெரும் சிலையாக இங்கு அமைந்துள்ளது.

மொழியில் நீங்கள் தான் தலைவர். தமிழ் என்ற ரத்தம் இருக்கும் வரை உங்களையே தலைவராக ஏற்போம்". ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906



தமிழரசு
பதிவு எண். M.8676
Licence No.TN/MS(C)/PP-23

